


# கயிறே, என் கதை கேள்!

ராஜீவ் கொலை வழக்கு –
உறைய வைக்கும் ஒப்புதல் வாக்குமூலம்

வெ. ஸ்ரீகரன் (எ) முருகன்

எழுத்தாக்கம்: இரா.சரவணன்


கயிறே,
என் கதை
கேள்!
ராஜீவ் கொலை வழக்கு –
உறைய வைக்கும் ஒப்புதல் வாக்குமூலம்
வெ.ஸ்ரீகரன் (எ) முருகன்
எழுத்தாக்கம்: இரா.சரவணன்



## ஸ்ரீகரன் (எ) முருகன்

**ரா**ஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் மூன்றாவது குற்றவாளியாகச் சித்திரிக்கப்பட்டு, தூக்கு தண்டனைக்கு ஆளாகி நிற்பவர். கைது, விசாரணை, சித்ரவதை, சிறைவாசம் என 21 வருடங்களாக நரகத்தின் பிடியில் தவிப்பவர்.

தூக்கு தண்டனையைத் தளர்த்தக் கோரி குடியரசுத் தலைவருக்கு இவர் எழுதிய கருணை மனு, சமீபத்தில் நிராகரிக்கப்பட்டது. அதனால் எந்த நேரத்திலும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படலாம் என்கிற நிலையில், நம்பிக்கையோடு சட்டப் போராட்டம் நடத்தி வருகிறார்.

இவருடைய மனைவி நளினியும் ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி, ஆயுள் தண்டனை அனுபவிக்கிறார். மகள் ஆரித்ரா, லண்டனில் பயோ மெடிக்கல் சயின்ஸ் படிக்கிறார்.

உறவுகளைப் பிரிந்து உள்ளுக்குள் அல்லாடினாலும் ஓவியம், எழுத்து என தன் சிறை வாழ்வை சற்றே பாரம் இறக்கிவைக்கும் தளமாகவும் பாவிக்கிறார் முருகன்.

இந்தியா வருவதற்கு விசா கிடைக்காமல் தவிக்கும் மகள் ஆரித்ராவை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என்பதுதான், தூக்குக் கயிற்றுக்குக் கீழ் நிற்கும் இந்த துரதிஷ்ட தந்தையின் தவிப்பு!

# உயிரே,
# என் கதை கேள்!

**வெ.ஸ்ரீகரன் (எ) முருகன்**

எழுத்தாக்கம்: **இரா.சரவணன்**

விகடன்
பிரசுரம்

Title :

KAYIRAE EN KATHAI KAEL

© V.SRIKARAN (alias) MURUGAN

ISBN : 978-81-8476-405-5

விகடன் பிரசுரம்: 639

நூல் தலைப்பு:

கயிறே, என் கதை கேள்!

நூல் ஆசிரியர்:

© வெ.ஸ்ரீகரன் (எ) முருகன்

எழுத்தாக்கம்:

இரா.சரவணன்

ஓவியங்கள்:

அரஸ்

முதற்பதிப்பு : ஜனவரி, 2012

விலை : ₹ 75

பதிப்பாளர்:

பா.சீனிவாசன்

ஆசிரியர்:

இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:

பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:

எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாகமணி

உதவி ஆசிரியர்:

சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:

மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:

அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்

757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84

விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84

e-mail: publications@vikatan.com

# கயிறே, கருணை காட்டு!

‘**எ**ன்னுடைய ஒப்புதல் வாக்குமூலமாக காவல் துறை செய்த சித்திரிப்புகள்தான் என்னை இன்றைக்கு தூக்குக் கயிற்றின் முன்னால் நிறுத்தி இருக்கின்றன. கயிறா உயிரா எனத் தெரியாமல் தவிக்கும் என்னுடைய உண்மையான ஒப்புதல் வாக்குமூலம், ஜூனியர் விகடனில் நான் பகர்ந்த தொடர்தான்!’ - முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தூக்கு தண்டனைக் கைதியாக மரணத்தின் விளிம்பில் அல்லாடும் முருகன் சொன்ன வார்த்தைகள் இவை.

‘09-09-11 அன்று தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும்’ என அரசு அறிவித்திருந்த வேளையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி மூவரின் தூக்குக்கும் இடைக்காலத் தடை வாங்கப்பட்டது. மரண மேகம் சூழ்ந்திருந்த அந்த இக்கட்டான சூழலில் தன் தரப்பு நியாயத்தைச் சொல்லும் கடைசி வாய்ப்பாக, ஜூனியர் விகடனில் ‘கயிறே, என் கதை கேள்!’ என்ற தலைப்பில் முருகன் பகர்ந்த தொடரின் தொகுப்பே இந்த நூல்.

விசாரணை என்ற பெயரில் முருகனும் அவர் மனைவி நளினியும் எதிர்கொண்ட சித்ரவதைகளைப் படிக்கையில், அதிகாரத் தரப்பின் வெறியாட்டம் நெஞ்சில் அறைகிறது. உள்ளத்து உண்மையாக - உணர்வுகளின் கதறலாக முருகன் அனுபவித்த ஒட்டுமொத்த வலியையும் இந்த நூல் அப்படியே அம்பலப்படுத்துகிறது.

முருகனுக்கும் சிவராசனுக்குமான நட்பு, கொலைகளத்தில் நளினியின் பங்கு, இவர்கள் எப்படிக் குற்றவாளி ஆக்கப்பட்டனர்...

என, முருகன் விவரிக்கும் உண்மைகள் எவரையும் உலுக்கக்கூடியவை.

முருகன் கடந்து வந்திருக்கும் 21 வருட கொடூரமான நிகழ்வுகளின் தொகுப்பே இந்த நூல்.

**- ஆசிரியர்**

# கயிறு அறுத்து; கம்பி உடைத்து...

‘**எ**ங்கள் மீனவனை அடித்தால் சிங்கள மாணவனை அடிப்பேன்’ எனப் பேசியதற்காக கடந்த ஆட்சியில் என்னைக் கைது செய்தார்கள். ‘தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை பாய்ச்சி, வேலூர் மத்திய சிறையில் அடைத்துவிட்டால் சீமானின் ஆவேசத்தைச் சிதைத்துவிடலாம்!’ என எண்ணியது, அப்போதைய தி.மு.க. அரசு. ஆனால், ஆறு மாதங்கள் அடைப்பட்டுக் கிடந்து வெளியே வந்தபோது, என் ஆவேசமும் ஆதங்கமும் மிகுதியாகி இருந்ததே தவிர கொஞ்சமும் குறையவில்லை. காரணம், சிறைக்குள் எனக்கு எல்லாமுமாக இருந்த தம்பிகள் பேரறிவாளன், முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்டோர்தான்!

சிறைக்குள் இருந்தாலும் உணர்வு குறையாமல், நம்பிக்கை சிதையாமல் அந்தத் தம்பிகள் ஒவ்வொரு நாளையும் கடக்கிறார்கள். வெளி உலகம் பாராது, விஞ்ஞான வளர்ச்சி அறியாது வெற்று இருளுக்குள் அடைந்து கிடக்கும் அந்தத் தம்பிகளின் மனதில் இருக்கும் தழும்புகளை அருகே இருந்து அறிந்தவன் நான். வேலூர் சிறையை விட்டு வெளியே வந்தபோது தம்பிகளைப் பிரிய முடியாமல் நான் தழுதழுத்தது உண்மை.

‘என் இனத்துக்கு ஏனடா இந்தப் பழி? வாழைக் குருத்தாய் வளர்ந்திருக்க வேண்டிய என் தம்பிகள் கொட்டடிக்குள் கிடக்கும் கோரத்துக்கு யாரடா காரணம்?’ என ஆதங்கம் அடங்காதவனாய் மேடைதோறும் முழங்கினேன். மூவருக்கும் தூக்கு எனச் சொல்லி

தேதி அறிவிக்கப்பட்டபோது, ‘உடலை யாரிடம் ஒப்படைப்பது?’ என்கிற கேள்வி சம்பிரதாயமாக அவர்களிடம் கேட்கப்பட்டது. அது பற்றிய தகவல் எனக்கு வந்ததும், ‘உங்களின் உடலை வாங்கத்தான் இந்த அண்ணன் காத்திருக்கிறேனா... என் உடல் சவமாகக் கிடந்தால்தானடா உங்களை உடல் என்று சொல்ல முடியும்’ என ஆறுதல் சொல்லி அனுப்பினேன்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கி, அடுத்தடுத்த சித்திரிப்புகளால் 21 வருடங்களாக வாடிக்கிடக்கும் அந்தத் தம்பிகளின் நிலையை, வேறு யாரும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. உண்மையான குற்றவாளிகள் சர்வபல செல்வாக்கால் வெளியே சகல மரியாதைகளுடன் உலவ, அப்பாவி இளைஞர்களை சிக்கவைத்து கணக்கைத் தீர்த்துக் கொண்டது காவல் துறை. மனு, கடிதம், முறையீடு, பேட்டி... எனத் தங்கள் தரப்பு நியாயத்தை பல தளங்களில் இருந்தும் (பேரறிவாளன், முருகன், சாந்தன்) மூவரும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்.

பேரறிவாளனின் தாய் அற்புதத்தம்மாள், மனித உரிமை மதிக்கப்படும் அத்தனை இடங்களிலும் முறையிட்டு நியாயம் கேட்கிறார். ஆனால், அரசியல் ஆதாயம் தேவைப்படும்போதெல்லாம் ராஜீவ் காந்தியின் மரணத்தைத் திரும்பத் திரும்ப நினைவூட்டி அபவாதம் பேசுகிறவர்களுக்கு, மூன்று தம்பிகளும் முன்வைக்கும் நியாயத்தை ஏற்க மனமில்லை. தூக்குக்கு நாள் குறிக்கப்பட்டு, நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதித்திருக்கும் நேரத்தில், தம் தரப்பு நியாயத்தை உரக்கச் சொல்லும் வாய்ப்பாக ஜூனியர் விகடனில் தம்பி முருகன் பகர்ந்த செய்திகள் அழுத்தமானவை; மறுக்க முடியாத ஆவணங்களுக்கு ஒப்பானவை!

மகளைப் பிரிந்த துயரம், மரணத்தின் நூல் இழையில் அல்லாடும் அவலம் என முருகனின் வார்த்தைகளாக வெளிப்பட்ட வேதனைகள் கொஞ்சநஞ்சம் அல்ல. ‘கயிறே, என் கதை கேள்!’

என்கிற தலைப்பிலேயே நெஞ்சத்து நரம்புகளைப் புடைக்கவைத்த முருகன், ஒவ்வோர் அத்தியாயத்திலும் தமிழ் உறவுகளிடத்தில் முன்வைத்த ஆதங்கம்! அடிமனதை உலுக்கும் கண்ணீர் தொகுப்பு!

முருகன் - நளினி இருவரும் விசாரணை என்கிற பெயரில் அனுபவித்த சித்ரவதைகளைப் படிக்கும்போதே கண்ணீர் வெடிக்கிறது. காங்கிரஸ் காரர்களின் முகத்தில் அறைவதற்கு நிகராக முருகன் முன்வைத்திருக்கும் கேள்விகள், சாலச்சிறந்த சட்ட நிபுணர்களையே ஒரு கணம் உலுக்கி இருக்கும்.

அப்பாவியின் வலியாக; அடிபட்ட புலியாக, தம்பி முருகன் இந்த நூலில் இறக்கி வைத்திருக்கும் உண்மைகள், ஒவ்வொரு தமிழனையும் நிச்சயம் தட்டி எழுப்பும்! முருகனின் அத்தனை விதமான துயரங்களும் தம்பிகள் பேரறிவாளன், சாந்தன் இருவருக்கும் சேர்ந்தே பொருந்தும். தமிழர்களின் தன்னெழுச்சியான முன்னெடுப்பால் மூன்று தம்பிகளும் கயிறு அறுத்து; கம்பி உடைத்து வெளியே வரும் நாளும் விரைவில் வரும்.

இந்த நூலின் இறுதிப் பகுதியில், 'ஒருவேளை, மரணம் தவிர்க்க முடியாததாக எங்களைச் சூழ்ந்தாலும், உள்ளத்து உண்மைகளை உங்களிடம் இறக்கிவைத்த திருப்தியில் என் உயிர் சற்று நிறைவோடு கயிறேறும்!' என்கிற முருகனின் வார்த்தைகளைப் படித்து ஒரு கணம் துடித்துப்போனேன்.

தம்பிகளுக்கு இப்போதும் நான் சொல்கிற வார்த்தைகள் இவைதான்... என் தலை சாயும் வரை எந்தக் கயிறாலும் உங்களை இறுக்க முடியாது. உயிரைக் கொடுத்தாவது உங்களின் கயிறை அறுக்க உற்ற உறவாக, ஒரே உதிரமாக, செங்கொடியின் அண்ணன்களாக நாங்கள் அணிவகுத்து நிற்கிறோம்.

விடுதலைப் பறவைகளாக விரைவிலேயே வெளிவருவீர்கள் என்கிற நம்பிக்கையில், உங்களைக் கட்டித்தழுவக் காத்திருக்கிறேன் தம்பிகளே!

**- சீமான்**

# நியாயத்தைச் சொல்ல ஒரு வாய்ப்பு!

**அ**ளவிட முடியாத தியாகத்துடன் சொந்த மண்ணின் சுதந்திரத்துக்காகப் போராடிய சொந்தங்களின் நினைவுகள் எமது கண்ணீரை இன்னமும் அதிகமாக்குகிறது. எமது இனம், வஞ்சகமாகவும் கொடூரமாகவும் வீழ்த்தப்பட்டு இருக்கிறது. மண்ணுக்காகப் போராடிய எமது மக்கள் வந்தேறிகளான சிங்களர்களால் விரட்டப்பட்டு அநாதைகளாகவும் அகதிகளாகவும் அலைந்து திரிகிறார்கள்.

சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாளுக்காக எமது மக்கள் மேற்கொண்ட ஆத்மார்த்தப் போராட்டங்கள் பயங்கரவாதக் கலகமாகச் சித்திரிக்கப்பட்டு, எமது சுதந்திரம் மறுக்கப்பட்டு இருக்கிறது. வரலாறு, இதுவரை கண்டிராத வஞ்சகத்துக்கும் துயரத்துக்கும் எமது இனம் ஆளாக்கப்பட்டு இருக்கிறது. சித்திரிப்புகளும் சூழ்ச்சிகளுமே எமது பின்னடைவுக்கான பிரதான காரணங்கள். அத்தகைய சூழ்ச்சிகளில் ஒன்றுதான் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நாங்கள் சிக்கவைக்கப்பட்டதும்!

கொலைச் சதியில் எமக்குப் பங்கு இருப்பதாகச் சித்திரிக்கப்பட்டு, இருபத்தோர் ஆண்டுகளுக்கும் மேலாக தூக்கு மரத்தின் கீழே நிறுத்தப்பட்டு இருக்கிறோம். கசாப்புக் கடையின் வாசலில் நிறுத்தப்பட்டிருக்கும் விலங்கைப்போல் எமது வாழ்க்கை, துயரம் நிரம்பிக்கிடக்கிறது. இல்லத்தை மறந்து, இனிய மகளைப் பிரிந்து நாங்கள் படும் துயரம், வேறு எவருக்கும் நேர்ந்துவிடக் கூடாது. இந்தச் சிறைக் காலத்தில் எங்கள் மகள் ஆரித்ராவுக்கு

பால்மா, சர்க்கரை வாங்கக்கூட வசதியோ ஆட்களோ இல்லாது, நானும் நளினியும் நான்கு சுவர்களுக்குள் தனித்தனியே அழுத நாட்கள் பல. இந்த நிலையில் எம் வழக்கை எதிர்கொள்ள தகுந்த ஆதரவும் வழிகாட்டலும் இல்லாது, நாங்கள் அநாதரவாக விடப்பட்ட சூழ்நிலைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. எமது தரப்பு உண்மைகளும் நியாயங்களும் வெளி உலகுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. எமக்கு ஆதரவாகவோ எமது நியாயத்தை வெளிப்படுத்தியோ பேச, எவரும் முன்வரவில்லை. எமது பெயரை மக்கள் மத்தியில் உச்சரிக்கவே தயக்க நிலை இருந்தது.

எமக்கு ஏற்பட்ட இந்த அவலமான நிலையை, இனமானத் தமிழன் சீமான் அவர்களின் ஆறு மாத வேலூர் சிறைவாசம் அப்படியே மாற்றியது. 'நிரபராதி தம்பிகளை நிச்சயம் மீட்டெடுப்பேன்!' என சபதம் போட்டு, எமக்கான நியாயங்களை மக்கள் மத்தியில் உரக்கப் பேசினார் அண்ணன் சீமான். எமக்கு ஆதரவான கைகோப்பும், எமது நிலை குறித்த இரக்கமும் பெரிதாக எழும்பியது, சீமான் அண்ணனின் முன்னெடுப்புகளுக்குப் பிறகுதான்!

எமது சகோதரிகள் வடிவாம்பாள், அங்கயற்கண்ணி, சுஜாதா ஆகியோரின் உண்ணாவிரதப் போராட்டம், தமிழ்நாடு முழுக்க எமக்கு ஆதரவான தன்னெழுச்சியை ஏற்படுத்தியது. எமது இனமான தங்கை செங்கொடி உண்டாக்கிய உணர்வுத் தீ, உலகம் முழுக்கப் பற்றிப் பரவியது.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், எமது விடுதலையைப் பரிந்துரை செய்து சட்டமன்றத்தில் ஏகமனதாக இயற்றிய தீர்மானம், இன்று பெரும் அரணாக எமது உயிர்களைக் காத்து நிற்கிறது. அதோடு, தமிழக சட்டமன்றத்தில் இயற்றிய தீர்மானங்களின் ஊடாக ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட நியாயங்களை உலகுக்கு எடுத்துச் சொல்லி,

புதிய சுவாசத்தை தமிழினத்துக்கு ஏற்படுத்தி இருக்கிறார் முதல்வர். அவருடைய தாய் உள்ளத்துக்கு, தமிழர்களில் ஒருவனாக நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆரம்ப காலத்தில் நாங்கள் பலிகடா ஆக்கப்பட்டதில், அதை நியாயப்படுத்தியதில் சில பத்திரிகைகளுக்கும் பங்கு இருந்தன. ஆனால், இன்றைக்கு அனைத்து தரப்பு ஊடகங்களும் எமக்கு ஆதரவாகவும் நியாயத்துக்குப் பக்க துணையாகவும் நிற்பது, எமக்கு ஆறுதல் அளிக்கிறது.

ஆரம்ப காலத்திலும் சரி... இப்போதும் சரி... எமது விவகாரத்தில் விகடன் குழும இதழ்கள் மிகுந்த நடுநிலையோடும் உண்மையோடும் எழுதி வருகின்றன. தூக்கின் துரத்தல் இப்போதும் தொடர்ந்துவரும் சூழலில், எமது நியாயத்தை இறக்கிவைக்க 'கயிறே, என் கதை கேள்!' தொடர் மூலமாக வாய்ப்பு அளித்தது ஜூனியர் விகடன்.

எமது நெடுத்துயரைப் பகரவும், எம்மை சிக்கவைத்த சதிகளை விளக்கவும் தக்க தளமாக ஜூனியர் விகடனை சுட்டிக்காட்டியவர் அண்ணன் சீமான். எங்களின் முழு வலி அறிந்த செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன், எமது எண்ணத்தை அப்படியே எழுத்தில் வார்த்த தம்பி இரா.சரவணன் இருவருக்கும் எமது அன்பு உரித்தாகட்டும்!

எம்மைச் சூழ்ந்திருக்கும் மரண மேகத்தை விரட்ட, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட தலைவர்களும், அண்ணன் சந்திரசேகர் உள்ளிட்ட சட்ட நிபுணர்களும், மனித நேய ஆர்வலர்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள். காப்பாற்றப்படும் எமது உயிர்களுக்கு அவர்களும் காரணகர்த்தாக்கள்!

ஈழத்தில் எமது குலக்கோயில் ஒன்று உண்டு. எமக்காக உயிர்விட்ட தங்கை செங்கொடியின் வீடும், அவர் இறுதிச் சடங்கான இடமுமே இப்போதைய எமது குலக்கோயில்!

- வெ.ஸ்ரீகரன் (எ) முருகன்

வேலூர் மத்திய சிறைச்சாலை

# ‘அப்பா, என்னிடம் மறைத்த வேதனைகள்!’

‘ஏம்பா இப்படிச் செய்தீங்க?’ - 12 வயதில் முதன்முறையாக என் தந்தையைப் பார்த்தபோது இப்படித்தான் கேட்டேன். ‘பாசமா என்னை அப்பான்னு கூப்பிடுவேனு ஆசையோட காத்திருந்தேன். ஆனா, நீகூட என்னை நம்பலையே..!’ எனக் கதறி அழுதார் என் அப்பா.

‘நானோ உன் அம்மாவோ ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்படலைங்கிறதுக்கு நீதான் சாட்சி. 1991-ல், நீ, ஒரு மாத கருவா அம்மா வயித்துல இருந்தப்பதான் அந்தச் சம்பவம் நடந்துச்சு. வயித்துல கருவைச் சுமக்கிறவள் கொலை நடக்கிற இடத்துக்குப் போவாளா?’ என்றபடியே அப்பா கதறியக் காட்சி இன்றைக்கும் என் நினைவில்.

பெற்ற மகளிடமே தான் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் என் தந்தைக்கு உண்டானது. தற்போது லண்டனில் பயோ மெடிக்கல் சயின்ஸ் படிக்கும் எனக்கு, என் தாய்-தந்தை தரப்பிலான நியாயம் முழுமையாகப் புரியும். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட நிகழ்வில் தனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பதை கடிதங்கள் வாயிலாக என் தந்தை எனக்கு விளக்கி இருக்கிறார். ஆனாலும், ஜூனியர் விகடனில் ‘கயிறே, என் கதை கேள்!’ என்கிற தலைப்பில் வெளியான தொடரைப் படித்தபோது எனக்கு விளங்கிய உண்மைகள் அதிகம். விசாரணை என்கிற பெயரில் அப்பா எதிர்கொண்ட அவஸ்தைகளை பற்றிப் படித்தபோது, ‘இப்படி எல்லாம் அப்பா சிரமப்படுகிறாரா?’ என

இடிந்துபோனேன். என்னிடம்கூட மறைத்த வேதனைகளைத் தொப்புள் கொடி உறவுகளிடம் கடைசி வாக்குமூலமாக இறக்கி வைத்திருக்கிறார் என் தந்தை.

தூக்கின் துரத்தலில் இருந்து என் தந்தையையும் சித்தப்பாக்கள் பேரறிவாளன், சாந்தன் ஆகியோரையும் காப்பாற்ற தமிழ்நாட்டு உறவுகள் எப்படியெல்லாம் போராடுகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். தந்தையின் முகம் பார்க்கத் துடிக்கும் மகளாகத் தமிழக உறவுகளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மனிதாபிமான அடிப்படையில் தூக்கு தண்டனைக் கைதி ஒருவரின் மனசாட்சிப் பக்கங்களை நூலாகத் தொகுத்து வெளியிடும் விகடன் பிரசுரத்துக்கு மனமார்ந்த நன்றி. கண்ணீர் தொகுப்பாக வெளிவரும் இந்த நூல், என் அப்பா மீதான தவறான அபிப்பிராயத்தை நிச்சயம் துடைத்தெறியும் என நம்புகிறேன்.

**- ஆரித்ரா**

**(முருகனின் மகள், லண்டன்)**

**இந்த நூல்...**

வாழைக் குருத்தாக

வாழ்ந்திருக்க வேண்டியவள்

எங்களின் கயிற்றை
அறுப்பதற்காக

கருகிப்போனாளே...

உறவில் தங்கையாய்

உணர்வில் தாயாய்

எங்கள் நெஞ்சங்களில்

கனன்று எரியும்

செங்கொடிக்கு...

# 1

# ஸ்ரீகரன் என்கிற முருகன்

**ம**ரண மேகம் சற்றே விலகி நிற்கிறது. நிரந்தரமாக அது எப்போது எம்மைவிட்டு நீங்கும் என்பது தெரியவில்லை. களத்தில் நெல் காயப் போட்டவர்கள் கறுத்திருக்கும் மேகத்தை எப்படிக் கவலையோடு பார்ப்பார்களோ, அதே தவிப்பில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி சிறைக்குள் பரிதவித்துக் கிடக்கிறோம்.

வெளி உலகம் எப்படி இருக்கிறது? உறவுகள் எப்படி இருக்கிறார்கள்? போக்குவரத்து தொடங்கி பூகோள அமைப்புகள் வரை எப்படி மாறி இருக்கின்றன என்பது தெரியாமல் சிறைக் கம்பிகளின் அரவணைப்புக்குள் 21 வருடங்களாக அடைபட்டுக் கிடப்பவர்கள் நாங்கள்.

'சிறு வெளிச்சக்கீற்று எம் மீது விழாதா?' என ஒவ்வொரு நாள் விடியலையும் ஏக்கத்தோடும் இயலாமையோடும் வெறிச்சிட்டுப் பார்க்கிறோம். 'இவ்வளவுதான் வாழ்க்கையா?' என்கிற இயலாமை மேலிட்ட சலிப்பு, அடிக்கடி மனதுக்குள் எட்டிப் பார்க்கிறது.

'செப்டம்பர் 9-ம் தேதி தூக்கு' (09-09-2011) என்கிற செய்தியை அரசாங்கம் அறிவித்தபோது, 'எமது நியாயமும் தவிப்பும் இறுதி வரை எடுபடாமல் போய்விட்டதே!' என்கிற ஆதங்கமே இதயத்தில் திரையிட்டது. அப்படியே 14.06.91 என்கிற தேதிக்கு எம்மை நினைவு சுழல் இழுத்துச் செல்கிறது...

ஸ்ரீகரன் (A3) என்கிற நானும், நளினி (A1) என்கிற என் மனைவியும் அன்றுதான் கைது செய்யப்பட்டோம். எம்மை, சி.பி.ஐ. எஸ்.ஐ.டி-யைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் ஒருவரும், இரு காவலர்களும் சைதாப்பேட்டை பஸ் நிலையத்தில் வைத்து கைது செய்தார்கள். ‘எதற்காக’ என்கிற கேள்வி என் கண்ணில் நீராக உருண்டபோதும், அவர்கள் எந்தவித பதிலும் சொல்லாமலே ஒரு ஆட்டோவில் எங்களை ஏற்றிச் சென்றார்கள். அவர்களது விசாரணை அலுவலகமான ‘மல்லிகை’யில் ஆட்டோ நின்றது.

பிடிக்கப்பட்ட - கொண்டு செல்லப்பட்ட சிறு கணப் பயணத்துக்குள் நாங்கள் அனுபவித்த துயரம் எழுத்தில் சொல்ல முடியாதது. குரூரமும் வக்கிரமுமாக நகர்ந்த அந்தப் பயணத்தை என்னால் வாழ்விலும் மறக்க முடியாது. என் மனைவி நளினி அப்போது இரண்டு மாத கர்ப்பவதி. ஆட்டோவின் பின் இருக்கையில் எங்கள் இருவரையும் நடுவில் அமரவைத்து, என் மனைவியின் பக்க ஓரமாக உதவி ஆய்வாளர் ஒருவரும், என் பக்கமாக ஒரு காவலரும் ஏறிக்கொண்டனர். மூன்று பேர் மட்டும் அமரக்கூடிய அந்தக் குறுகிய இடத்தில் நான்குபேர் அமர்ந்து இருந்த சூழலை உதவி ஆய்வாளர் எப்படிப் பயன்படுத்திக்கொண்டார் தெரியுமா? கர்ப்பிணி என்றுகூடப் பார்க்காமல், என் கண் எதிரிலேயே என் மனைவி மீது அங்கச் சேட்டைகளில் ஈடுபட்டார். புழுவாகத் தவித்த என் மனைவியின் அவஸ்தையைத் தடுக்கக்கூட இந்த இயலாமைக்காரனால் முடியவில்லை.

‘எமக்கான கொடூர நரகம் தொடங்கிவிட்டது’ என்பதை அந்த நிகழ்வே எனக்குப் புரியவைத்தது.

‘ஒரு வார்த்தைப் பேசினாலும் தவறு’ என்கிற சூழலில் அருகே அமர்ந்திருந்த நளினியை வேதனையோடு பார்த்தேன். கண்ணீரும் கடும் துயரமுமாக தலைகுனிந்து இருந்தாள்.

மல்லிகை எஸ்.ஐ.டி. அலுவலகத்தில் ஆட்டோ நின்றது. அங்கே இருந்த உயர் அதிகாரி முன்னால் எங்களைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ‘இந்த இரு நாய்களின் முதுகுத் தோலையும் அடித்து உரியுங்கள்!’ என உத்தரவு போட்டார். அத்தகைய ஏவலுக்காகவே காத்திருந்தவர்கள்போல, என்னைப் பக்கத்து அறைக்கு இழுத்துச் சென்றார்கள். எதிரே என் மனைவி நளினி.

கணவன் இழுத்துச் செல்லப்படுவது கொல்லப்படுவதற்காக என்றுகூட அவள் நினைத்திருக்கலாம்; பதறி இருக்கலாம். பரிதவிப்போடு ஏதோ சொல்ல நினைத்தாள். கண்ணீரைக்கூட சுதந்திரமாக உதிர்க்க முடியாத அந்தக் கொட்டடியில் அவளால் என்ன பேசியிருக்க முடியும்?

தனி அறைக்கு என்னைக் கொண்டுவந்த அதிகாரிகள், முதலில் என் ஆடைகளைக் களைந்தார்கள். உலகின் பெருந்துயரம் - பிறர் முன்னால் ஆடைகள் அற்றுப்போய் அவமானம் சுமந்து நிற்பது. நிர்வாணத்துக்கு லத்திக் கம்புகளாலேயே வரிவரியாய் ஆடை வரைந்தார்கள் அதிகாரிகள். ஆவேசம் என்றால் அப்படியொரு ஆவேசம்... பிரம்புகளே பிய்ந்து தொங்குகிற அளவுக்கு அடித்தார்கள். ஊரே கேட்கும் அளவுக்குக் கதறிய என் ஓலம் அந்த அதிகாரிகளின் மனதைக் கொஞ்சம்கூட அசைக்கவில்லை. மயக்கத்தின் முதல் நிலையில் மௌனம் சுமந்து கிடந்தேன். இனி அலறத் தெம்பில்லை. அலறியும் பலன் இல்லை.

உடல் எங்கும் கன்றிப் போய், உதடுகளில் ரத்தம் வழிந்த நிலையில் தூக்கி நிறுத்தினார்கள். ‘செத்தேன்’ என்கிற வார்த்தையோடு என் மூச்சு இழுத்துக்கொண்டு இருந்தது.

திடீரென, ‘அய்யோ...’ என்கிற அலறல். மயக்கம் தெளிந்து நிமிர்ந்தால் எதிரே கதறி அழுதபடி என் மனைவி நளினி. என் கோலத்தைக் காட்டுவதற்காக அவளைக் கொத்தாக இழுத்து வந்திருக்கிறார்கள். நான் ரத்தம் சொட்ட நின்றதும், அதிகாரிகளின் பிடியில் சிக்கியபடியே தலையில் அடித்துக்கொள்ள முடியாமல்

நளினி கதறியதும் இப்போதும் மனதுக்குள் தகிப்பாகக் கொதிக்கின்றன.

'நாங்க சொல்கிறபடி எல்லாம் நடந்துக்கலைன்னா, உனக்கும் இதே கதிதான்!' என நளினியை நோக்கிக் கத்தினார்கள். அவள், 'அவரை ஏன் இப்படி அடிச்சீங்க?' எனக் கதற, 'உன்னோட காதலனை அடிச்சாத்தானே உனக்கு வலிக்கும். அடி மட்டும் இல்லை... அவனைக் கொன்னே புடுவோம்...' என மிரட்டி அவளை இழுத்துச் சென்றார்கள்.

என்னை அவர்கள் கொன்றாலும் சரி... அறுத்துப்போட்டு தின்றாலும் சரி... கர்ப்பவதியாக இருக்கும் என் மனைவியைத் துன்புறுத்தாமல் இருந்தாலே போதும் என்கிற சிறு ஆறுதலோடு வீழ்ந்து கிடந்தேன். என்னை அடித்துக் களைத்த அதிகாரிகள் ஓய்வு எடுப்பதற்காக விட்டிருந்த இடைவேளை அது.

சில நிமிடங்கள்தான் கடந்திருக்கும். 'ஆ... அய்யோ...' என்கிற பெரு அலறல். பக்கத்து அறையில் இருக்கும் நளினியின் குரல் அது என்கிற யூகிப்பு என்னைத் தவிக்க வைக்கிறது. சிறு சிறு உறுப்புகளாக முழு வடிவம் சுமக்கப்போகும் குழந்தைக்கு, தாயின் அமைதியான சூழலும் நிம்மதியும்தான் மிக முக்கியத் தேவை. ஆனால், அந்தப் பச்சை சிசுவின் நிலையைக்கூட நினைத்துப் பார்க்காமல், அவளை பிரம்புகளால் பின்னி எடுத்திருக்கிறார்கள். பிறகு, ஒரு நாள் அவளை எதிர்கொண்டபோது, எப்படி எல்லாம் சித்ரவதை செய்தார்கள் என்பதை அவள் சொன்னாள். என் நிலை பரவாயில்லை என்கிற அளவுக்கு அவள் சுமந்த வேதனைகள் கொடூரமானவையாக இருந்தன.



நாள் வாரியாக தினமும் நடந்த சித்ரவதைகள் பற்றி இங்கே சொல்ல ஆரம்பித்தால், சித்ரவதைகளின் கொடூரம் உங்களுக்கே பழகிப்போகலாம். மனதின் ஈரம் இற்றுப்போகிற நிலையை உங்களுக்கு ஏற்படுத்திவிடக்கூடாது என்பது என் எண்ணம்.

சித்ரவதைகள் செய்வதற்கு சிறப்பு பயிற்சிகள் பெற்றவர்கள்போல் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் என்னை அவர்கள் வதைத்த விதம் தாங்க முடியாதது. மரண பயத்தின் பீதியும், மோசமான விரக்தி மனநிலையும் எனக்குள் இருந்துகொண்டே இருக்கும்படி செய்தன அத்தனை சித்ரவதைகளும். உண்மையான குற்றவாளியைக்கூட இந்த அளவுக்கு வதைக்க மாட்டார்கள். ஆனால், எதையோ நோக்கி வழக்கை நகர்த்திச் செல்ல அதிகாரிகள் போட்ட திட்டம், என்னை அணு அணுவாக நரகத்தின் வயிற்றுக்குள் திணித்தது.

# 2

# தூங்கியும் தூங்காமலும்..!

**சி**த்ரவதைகள் கொடூரமானவை என்பது அனுபவித்த அனைவருக்குமே தெரியும். ஆனால், ராஜீவ் கொலை வழக்கில் நான் அனுபவித்த சித்ரவதைகள் விசித்திரமானவை. ஒருவனை எப்படி எல்லாம் விதம் விதமாகச் சிதைக்க முடியும் எனக் குரூரத்தோடு யோசித்து, பரிசோதனை எலியாக என்னைப் பயன்படுத்தினார்கள்.

இரவு 10 மணிக்கு அதிகாரி ஒருவர் என்னை அழைத்தார். ஈரக்குலை நடுங்க உயிரைக் கையில் பிடித்தபடி நின்றேன். 'அந்தக் கொலை விவகாரத்தில் என்ன நடந்தது என்பதை ஒன்றுவிடாமல் என்னிடம் சொல்' என்று மிரட்டினார். இதேபோல் எத்தனையோ தடவை அதிகாரிகள் என்னை விசாரித்து இருக்கிறார்கள். நானும் எனக்குத் தெரிந்த தகவல்களைக் கண்ணீரோடு அவர்களிடம் சொல்வேன். புதுமுக இயக்குநரிடம் கதை கேட்கும் தயாரிப்பாளர் போல் அலட்டிக்கொள்ளாமல் கேட்பார்கள். 'இவராவது நம் தரப்பு நியாயத்தைப் புரிந்துகொள்வாரா?' என ஏக்கத்தோடு நடந்த விஷயங்களைச் சொல்வேன். எந்த பதிலும் சொல்லாமல், பிரம்பைக் கையில் எடுப்பார்கள்.

என்ன நடக்கப்போகிறதோ என்கிற பதற்றத்தில் என் நரம்புகள் எல்லாம் உடலுக்குள் ஓடி ஒளிந்துகொள்ளும். ரத்தச் சிகப்பைப் பார்த்தால்தான் பிரம்புகளுக்கு நிறைவு வரும்.

ஆனால், மௌனத்தோடு என் முகத்தை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டு இருந்த அந்த அதிகாரி மீது, எனக்கு மெல்லிதாக நம்பிக்கை வந்தது. 'நிச்சயம் இவர் என்னைப் புரிந்துகொள்வார்' என என்னை நானே தேற்றிக்கொண்டு, நடந்த விஷயங்களை சொல்லத் தொடங்கினேன். பல முறைச் சொல்லிச் சொல்லி என் வேதனைகள் எனக்கே பழகிப்போய் இருந்தன.



தலை குனிந்தபடி சொல்லிக்கொண்டு இருந்த நான், சற்று நிமிர்ந்து பார்த்தேன். அவர் டேபிளில் சாய்ந்தபடி கண்களை மூடி இருந்தார். இவ்வளவு கோரங்களைக் கேட்டபடி ஒருவர் தூங்குகிறார் என்றால், குரூரத்தின் எத்தகைய ரசனையாளராக அவர் இருந்திருப்பார்?

என் கண்ணீரும் ஒப்பாரியும் அவருக்குத் தாலாட்டுப் பாடல் மாதிரி இருந்திருக்குமோ என்னவோ... தன்னை மறந்து

நாற்காலியில் சாய்ந்துகிடந்தார். 'இவரிடம் பேசி என்னாகப் போகிறது? எதுவுமே செய்ய முடியாதவனின் கடைசி வெளிப்பாடுதான் கண்ணீர். ஆனால், அதனையும் அலட்சியப்படுத்துபவர்களிடம் நாம் என்ன செய்ய முடியும்?' என நினைத்தபடி, என் பேச்சை நிறுத்தினேன்.

ஆலங்கட்டி மழை தகரக் கூரையில் விழுந்தால் எப்படி இருக்கும்? சடசடவென அப்படி ஒரு சத்தம்... லத்தியை எடுத்து முதுகு, முகம் என விளாசத் தொடங்கிய அந்த அதிகாரி, பெரும் குரலெடுத்து அலறினார். 'என்னையா ஏமாத்தப் பார்க்குறே... நாயே...' எனக் காட்டுக் கத்தல் கத்தியபடி பிரம்பால் விளாசித் தள்ளினார்.

நாய் என்கிற வார்த்தையின் தொடர்ச்சியாக அவர் சொன்ன... இல்லை இல்லை... அவர் உமிழ்ந்த அசிங்க வார்த்தைகள் இப்போதும் என் நெஞ்சுக்குள் அமிலத் துளிகளாக அரிக்கின்றன. 'மன்னிச்சுக்கங்க சார்... நீங்க தூங்கிட்டீங்கன்னு நெனச்சு பேச்சை நிறுத்திட்டேன்' என்று ஈனஸ்வரத்தில் புலம்பினேன்.

'என்னையப் பார்த்தா சினிமா போலீஸ் மாதிரி தெரியுதா? விசாரணை செய்யிறப்பவே நான் தூங்குவேனாடா நாயே...' எனக் கொந்தளித்தார்.

மறுபடியும் விட்ட இடத்தில் இருந்து கொட்டத் தொடங்கினேன். வழக்கம்போல் நாற்காலி மீது சாய்ந்தார்; கண்களை மூடியபடி படுத்தார். தூங்கிவிட்டார் என நினைத்துப் பேச்சை நிறுத்தினாலும் மிருகம்போல் அடிப்பாரே என நினைத்து, அவரை அந்த அறையின் ஐந்தாவது சுவராக நினைத்து முழு விஷயங்களையும் சொல்லி முடித்தேன். நேரம் நள்ளிரவைத் தொட்டது. காயங்களால் கிழிந்து தொங்கிய என் உடல், சாய்வுக்காக ஏங்கியது. என்னையும் மீறி உடல் தடுமாறத் தொடங்கியது.

‘டேய்... முழுசும் சொல்லிட்டியா?’ - டேபிள் மீது சாய்ந்து கிடந்த அதிகாரி தலையை உயர்த்திக் கேட்டார். ஆமாம் எனத் தலையாட்டினேன். ‘சரி, நீ பேசிக்கிட்டு இருந்தப்ப நான் தூங்கிட்டேன். அதனால, மறுபடியும் ஆரம்பத்தில இருந்து சொல்லு...’ என்றார்.

‘தண்ணி’ எனக் கேட்கக்கூட என் தொண்டைக்கு சக்தி இல்லை. தூக்கம் இல்லாமலும், கால் கடுக்க நின்றதாலும் தொண்டைக்குக் கடுமையான வறட்சி... ‘தண்ணி கொடுங்க’ என்பதைக் கைகளைக் காட்டி சைகையாகச் சொன்னேன். ‘ஏண்டா, வேசி மகனே... என்னையவே முறைக்கிறியா..?’ எனத் திட்டியபடியே கண்மூடித்தனமாக அடித்தார். அவருக்கு கை வலிக்கும் என நினைத்து இன்னும் சில காவலர்கள் அடிப்பதற்குத் தோதாக என்னைத் தூக்கிப் பிடித்துக்கொண்டார்கள்.

அடித்து, திட்டி, காறி உமிழ்ந்து, ‘இன்னிக்கு இது போதும்’ எனச் சொல்லி அவர் என்னை விடுவித்தபோது மணி அதிகாலை 4. அறையில் வந்து விழுந்ததுகூட எனக்கு நினைவு இருக்காது. அதிகபட்சம் ஒரு மணி நேரம்கூட நகர்ந்திருக்காது. மறுபடியும் தலைக்குப் பக்கத்தில் லத்தியால் தரையைத் தட்டுவார்கள். தூக்கமும் அசதியும் போன இடம் தெரியாமல், மறுபடியும் உடல் பதறிப்போய் துடிக்கும். அவ்வளவுதான்... அதன் பிறகு என்னைத் தூங்க அனுமதிக்க மாட்டார்கள்.

நிற்க முடியாமல், மண்டியிட்டுக் கெஞ்சிக் கூத்தாடுவேன். இரக்கமே இல்லாத மிருகங்களைப்போல், வார்த்தைகளால் துளைத்தெடுப்பார்கள். நக்கல் அடித்துச் சிரிப்பார்கள். நான் புனிதமாக மதிக்கும் உறவுமுறைகளைத் தவறாகச் சித்திரித்துச் சிரிப்பார்கள். அவ்வளவு அசதியிலும், அந்த வார்த்தைகளை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு பதில், ஒரே வெடுக்கில் நாக்கைப் பிடுங்கிப்போட்டு இறந்தே போகலாம். ஆனால், உறவுகளைக் கொச்சைப்படுத்திப்

பேசுவதுதான் எனக்கு வலிக்கிறது எனத் தெரிந்து, துன்புறுத்தித் துடிக்க வைக்கும் வழியைக் கண்டுபிடித்தவர்களைப் போல், அதே மாதிரியான வார்த்தைகளையும் அசிங்க வர்ணிப்புகளையும் செய்தார்கள்.

அவற்றை விளக்கமாகச் சொல்வதே என்னை இன்னொரு முறை நானே அவமானப்படுத்திக்கொள்வதற்குச் சமம். என் மனைவி, தாயார், சகோதரிகள், மாமியார் ஆகியோரை மற்ற ஆண்களுடன் தொடர்படுத்தித் திட்டினார் அந்த அதிகாரி. என் மாமியாரை நான் என் தாய்க்கு நிகராக மதிப்பவன். அந்தப் புனிதத்தை எல்லாம் மதிக்காமல் அடிப்படைப் பண்புகளே அற்றுப் போனவர்களாக அந்த அதிகாரி சொன்ன வார்த்தைகள் என்னை ஒரேயடியாகப் பொசுக்கிப்போட்டன. எதையுமே செய்ய முடியாத என் சொரணை, அவமானத்தில் சுருண்டுபோனது.

இதேபோல் தொடர்ந்து 20 நாட்கள் விசாரித்தார்கள். என் மனைவி நளினிக்கும் இதேபோல் சித்ரவதை. எட்டு கண்காணிப்பாளர்கள் மாறி மாறி நளினியை அடியாலும், அமிலத்தைப் போன்ற வார்த்தைகளாலும் கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களில் எமது ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவு செய்த அதிகாரி குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கொடூரர். அவர் பெயரைக் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் மனு போட்டோம். சி.பி.ஐ., எஸ்.ஐ.டி-யில் 150-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் பணியாற்றியதால், சித்ரவதை செய்தவர்களின் பெயர்களைக்கூட எங்களால் நினைவு வைத்துக்கொள்ள முடியவில்லை. எமக்கு இழைக்கப்பட்ட சித்ரவதைகள் பற்றி குறுக்கு விசாரணையின்போது பதிவு செய்தேன்.

அந்த வழக்கில் என் மனைவி நளினியை அப்ரூவர் ஆக்க சி.பி.ஐ, எஸ்.ஐ.டி. அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன் மூலம் அதிகாரிகள் விருப்பப்படி என்னை முதன்மை எதிரியாக மாற்ற

நினைத்தார்கள். இதற்காக அவர்கள் செய்த சதிதான் சகிக்க முடியாதது.

அதற்கு முன்னர் இன்னொருவருக்கு நடத்தப்பட்ட சதியைச் சொல்கிறேன். நினைக்கவே நெஞ்சு நடுங்கவைக்கும் அந்தக் கொடூரத்தை நான் கண் முன்னால் எதிர்கொண்டவன்.

அந்தக் கொலை வழக்கில் ரங்கநாத் (ஏ-26) என்பவரைக் கைது செய்த பின்னர், அவரது மனைவி மிருதுளாவை அவரிடம் இருந்து நிரந்தரமாகப் பிரித்தார்கள். ரங்கநாத்துக்கு எதிராக சாட்சி சொல்லவைத்து, அவருக்கு டிரையல் கோர்ட்டில் மரண தண்டனை வாங்கிக் கொடுத்தனர். ரங்கநாத்தின் மனைவி மிருதுளாவை சி.ஆர்.பி.எஃப். அதிகாரி ஒருவருக்குத் திருமணம் செய்துவைத்தார்கள். 36 வயதுக்கு மேலான மிருதுளாவுக்கு அரசு விதிகளை மீறி மத்திய அரசில் வேலையும் வாங்கிக் கொடுத்தனர். சித்திரிப்புகளுக்காகக் கல்யாணக் கலாட்டாக்களைக்கூட அதிகாரிகள் நடத்தினார்கள்.

இதேபோல் என் மனைவியை எனக்கு எதிராக மாற்ற சாம, பேத, தான, தண்ட உத்திகளை எல்லாம் கையாண்டார்கள். என் மனைவிக்கு ஒரு போலீஸ் அதிகாரியைத் திருமணம் செய்துவைக்கவும், அரசு வேலை பெற்றுத்தரவும், சொந்த வீடு வாங்க அரசு உதவி பெற்றுத் தரவும், பாதுகாப்பு கிடைக்கவும் ஆசை காட்டினார்கள். அடி உதைக்கு மசியாதவர்கள் ஆசை வார்த்தைகளில் சிக்கிக்கொள்வார்கள் என்பது அதிகாரிகளின் சிறுபிள்ளைத்தனமான எண்ணம். அந்த வார்த்தைத் தூண்டில்களில் நளினி சிக்கவில்லை.

அடுத்தபடியாக இன்னோர் அஸ்திரம் எடுத்தார்கள். நளினி என்னை எப்படியாவது வெறுக்க வேண்டும் என நினைத்து என்னைப் பற்றி அவதூறு பரப்ப ஆரம்பித்தார்கள். எனக்கும் நளினிக்கும் இடையேயான வயது வித்தியாசத்தை நளினியிடம் சுட்டிக் காட்டினார்கள். ‘அவன் சிலோன்காரன்... உன்னைய

ஏமாத்திட்டுப் போயிடுவான். நாங்க விசாரிச்ச வரைக்கும் உன் மேல அவனுக்கு அன்பே கிடையாது. அவனுக்கு ஏற்கெனவே பல பொண்ணுங்களோட தொடர்பு இருக்கு. அதை எல்லாம் எங்க விசாரணையிலேயே அவன் ஒப்புக்கிட்டான். ஆனா, உன்கிட்ட அவன் நடிக்கிறான்!' என விதம் விதமாகத் திரைக்கதை எழுதி, நளினியிடம் சொன்னார்கள்.




வேலூர் சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளுடன் முருகன்

நளினி கடைசி வரைக்கும் அசைந்து கொடுக்காததால், அதே வித்தைகளை என்னிடமும் பரப்பத் தொடங்கினார்கள். ‘அவளுக்கு ஏற்கெனவே ரெண்டு லவ்வர்ஸ் இருக்காங்க. நளினியின் பழக்கவழக்கம் தப்பானது. நீ நம்பவில்லை என்றால், நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம். நீ அவளைவிட சின்னப் பையன். அதனால்தான் உன்னைய சுளுவா ஏமாத்திட்டா..!' என ஆபாசக் கதைகள் எழுதும் ஆசாமிகளைப் போல் சொன்னார்கள்.

இருவருமே இந்த அபவாதங்களை நம்பாத நிலையில், சின்னஞ்சிறு சிசுவாக நளியின் வயிற்றில் வளர்ந்த எங்களின் வாரிசு மீது அவர்களின் பார்வை திரும்பியது. வரம்புமீறலையே வாய்ப்பாடாக வைத்திருப்பவர்களுக்கு எங்களின் சிசுவைச் சிதைப்பது சிரமமே அல்ல. ஆனால், எங்கள் தாம்பத்தியத்தின்

அடையாளம் அந்த சிசு. ரத்தச் சுவடுகளுடன் கர்ப்பப்பையில் வளரும் அபாக்கியக் குழந்தை அது. என் வாரிசுக்கு ஏதும் ஆகிவிடக் கூடாது என்கிற அவஸ்தையில், எதற்கும் ஒப்புக்கொள்ளும் மனநிலைக்கு நான் தள்ளப்பட்டேன்.

# 3

# சிசுவை சிதைப்பதுதான் விசாரணையா?

**க**டந்த 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம்... இப்போதும் என் மனதுக்குள் அட்சதை தூவும் சத்தம் கேட்கிறது. நானும் நளினியும் திருப்பதியில் திருமணம் செய்துகொண்டு புதுமணத் தம்பதியாக சென்னை திரும்பினோம்.

மனதுக்குள் ஆயிரமாயிரம் கற்பனைகள். சினிமா காதலுக்கே உரிய கனவுகளைப் போல் நிறைய குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவும், கொஞ்சி மகிழவும் ஆசைப்பட்டோம். ஆனால், தலை பிள்ளையைத் தக்கவைக்கக்கூட போராட வேண்டிய நிலை வரும் என்பதை எந்த சொப்பனமும் எங்களுக்குச் சொல்லவில்லை. அதிகாரிகளின் ஆசை வார்த்தைகளுக்கு நானும் நளினியும் மசியாத நிலையில்... அவர்களின் கவனம் எங்களின் இரண்டரை மாத சிசுவின் மீது திரும்பியது.

'இதுவரை நடந்த விசாரணைகள் எல்லாம் சாதாரணம்தான்... இனிதான் மொத்தச் சித்ரவதைகளும் இருக்கு. மரியாதையா இப்பவே உன் வயித்துல வளர்ற குழந்தையைக் கலைச்சிடு. இல்லைன்னா, நாங்களே கலைச்சிடுவோம். அது இன்னும் மோசமா இருக்கும்!' என அதிகாரிகள் மிரட்ட, நளினிக்கு குலைநடுங்கி விட்டது.

இதுபற்றி அவள் என்னிடம் கலந்து ஆலோசிக்கக்கூட வழி இல்லாத அளவுக்கு பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகப்படுத்தினர்.

'உங்களோட அத்தனை சித்ரவதைகளையும் நாங்க பல்லைக் கடிச்சுக்கிட்டு பொறுத்துக்கிறதுக்குக் காரணமே, என் வயித்துல வளர்ற சிசுதான். நீங்க என்ன சொன்னாலும் அதைக் கலைக்க மாட்டேன்!' என முடிந்த மட்டும் போராடி இருக்கிறாள் நளினி.

அடுத்தக் கட்டமாக இன்னொரு முயற்சியையும் அதிகாரிகள் நடத்திப் பார்த்தார்கள். என் மாமியார் பத்மாவையும், மைத்துனர் பாக்கியநாதனையும் மிரட்டி, 'குழந்தையை அழிக்கச் சொல்லுங்கள். இல்லையேல், நாங்கள் சொல்வதற்கு எல்லாம் ஒப்புக்கொள்ளச் சொல்லுங்கள்!' எனச் சொல்லி இருக்கிறார்கள். இரண்டரை மாத சிசுவைச் சிதைக்க அதிகாரிகளுக்கு என்ன ஓர் ஆர்வம்!

சிசுவை அழிக்க மட்டும் அல்ல... என்னையும் நளினியையும் கணவன்-மனைவி இல்லை என்று போலியாக நிரூபிக்கவும் அதிகாரிகள் திட்டமிட்டனர். நாங்கள் சைதாப்பேட்டையில் கைதானபோது, நளினியின் கழுத்தில் தாலி இருந்தது. பெர்சனல் சர்ச் மெமோ-வில் (Ex.C.18 என்ற Personal Search Memo) அந்தத் தகவல் பதிவு செய்யப்பட்டு உள்ளது. போலீஸ் கஸ்டடியில், 'நாங்கள் இருவரும் கணவன்-மனைவி' எனச் சொல்லி இருக்கிறோம். ஜுடீஷியல் கஸ்டடிக்கு வந்தவுடன், 'நாங்கள் இருவரும் கணவன்- மனைவி' எனக் குறிப்பிட்டு பல மனுக்களை சிறப்பு நீதிமன்றத்துக்கும், சிறை அதிகாரிகளுக்கும் பல்வேறு பரிகாரம் வேண்டி எழுதி உள்ளோம்.

இவ்வளவு இருந்தும் சி.பி.ஐ., எஸ்.ஐ.டி. அதிகாரிகள், என் மனைவிக்கு எதிராகத் தயார் செய்த ஆவணங்களான எக்ஸ்.பி. 75, 76, 77 (Ex.p.75, 76, 77) கன்ஃபெஷனல் ஸ்டேட்மென்ட் Confessional statement), 78, 634, 1206, 1209, 1422, 1424, 1427, 1428 ஆகிய அனைத்திலும் என் மனைவியை 'மிஸ். நளினி'

என்றுதான் குறிப்பிட்டு உள்ளனர். இது எத்தகைய குரூர வில்லத்தனம்?

எப்படியாவது என் மனைவியை என்னிடம் இருந்து பிரித்துவிடலாம் என்று நம்பியே, ஆவணங்களில் நளினி கல்யாணம் ஆகாதவர்போல் முன்னதாகவே குறிப்பிட்டு இருந்தனர். ஆனால், அந்த முயற்சியிலும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. ஒரு கொலையை விசாரிக்க வேண்டியவர்கள், ஒரு சிசுவை அழிக்கவும், ஒரு குடும்பத்தைச் சீரழிக்கவும்தான் போராடினார்கள்.

அடுத்து, பத்திரிகையாளர்களிடம் அவர்கள் பந்திவைத்த செய்திதான் குரூரத்தின் உச்சம். 'முருகனும் நளினியும் திருமணம் செய்துகொள்ளாமலே உடல் உறவு வைத்துக்கொண்டவர்கள்' என தாம்பத்தியப் புனிதத்தைத் தலை முழுகும் கொடூரத்தைப் பரப்பினார்கள். என் மனைவியை வேறு சில ஆண்களுடன் தொடர்புபடுத்தியும் கொச்சைப் பரப்புதலில் குளிர் காய்ந்தார்கள். இவை குறித்தெல்லாம் டிரையல் கோர்ட்டில் சி.ஆர்.பி.சி. செக்ஷன் 313-ன் கீழ் சமர்ப்பித்த வாக்குமூலத்தில் கண்ணீரோடு சொன்னோம். ஆனால், நிம்மதிக்காக ஏங்கிய எங்களின் குரல் நீதிமன்றத்தின் கம்பீரக் கதவைத் தட்ட முடியாமல் தோற்றுத் திரும்பின.

அடுத்தடுத்த நாட்களில் தினசரிகளைப் புரட்டினால், பக்கத்துக்குப் பக்கம் முருகனும் நளினியும்தான்... 'நளினியின் வயிற்றில் உள்ள குழந்தைக்குத் தகப்பன் யார்?', 'புலிகளின் மூத்த தளபதிதான் நளினியின் காதலன்' என நெஞ்சை நொறுக்கும் தலைப்புகள். எங்களுக்காக ஒரு குவளை நீர்கூட கொடுக்காத அதிகாரிகள், அந்தச் செய்திகளைத் தாங்கி வந்த தினசரிகளை வலிய வந்து கொடுத்தார்கள். அதைப் படித்துவிட்டு நாங்கள் துடித்தத் துடிப்பை ரசித்தார்கள்.

மனம் மரத்துப்போகிற அளவுக்கு அத்தனை அவதூறுகளையும் எழுதவைத்தார்கள். 'என்ன எழுதினாலும் சரி, நான் என் மனைவிக்கும், என் மனைவி எனக்கும் உண்மையாக இருக்கிறோம். இதை எந்தக் கொம்பனாலும் பிரிக்க முடியாது!' என நெஞ்சுக்குள் தைரியம் வார்த்துக்கிடந்தோம். அப்போதுதான் அவதூறின் அடுத்தக் கட்டத் தாக்குதல் மீடியாக்களில் ஆரம்பித்தது. 'நளினியின் குழந்தையைக் கொல்ல முருகன் முயற்சி' எனத் தலைப்பிட்டு, உள்ளே நா கூசும் கற்பனைகளைக் கடைவிரித்தனர்.

எழுத்தால் - பிரம்பால் - அவதூறால் - ஆணவத்தால் எங்களை அழிக்க அதிகாரிகள் தீட்டிய அத்தனை திட்டங்களையும் தவிப்போடு தாங்கிக்கொண்டோம். 'இனி அழக் கண்ணீர் இல்லை' என்கிற நிலையும், 'இனி எம் மீது பாய்ச்ச அதிகாரிகள் எங்காவது போய் சித்ரவதைகளைக் கற்றுக்கொண்டு வந்தால்தான் உண்டு' என்கிற சகலத்தையும் கடந்த சலிப்பும் எங்களை உறுதிகொள்ள வைத்தன.


இத்தனை தடைகளையும் தாண்டி, நளினியின் வயிற்றில் ஆரித்ரா பிறந்தாள். சிறைக்குள் பிறந்தது, அவள் எந்தப் பிறவியில் செய்த பாவமோ... ஆனால், எங்கள் வயிற்றில் அவள் பிறந்தது பெரும்பாவம். சிறையில் குழந்தை பிறந்தால், பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வது எமது சட்ட ரீதியான உரிமை. ஆனாலும், எமக்கு அது மறுக்கப்பட்டது. அதனால், ஆறு நாட்கள் தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்தோம். கைக்குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, பட்டினிக்கிடப்பது எத்தகைய கொடூரம் என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். பால் வற்றிப்போனது; ஈரக்குலையின் ஈரம் இற்றுப்போய் தண்ணீருக்காக ஏங்கத் தொடங்கியது. தாயும் மகளும் மடிகிற நிலையானால் சிக்கல் வந்துவிடுமே எனப் பயந்து, என் குழந்தைக்குப் பிறப்புச் சான்றிதழ் கொடுத்தார்கள். நாங்கள் கைது செய்யப்படுவதற்கு முன்பு இந்து திருமண சட்டப்படி

செய்துகொண்ட திருமணத்தை சட்டப்படி பதிவு செய்ய மறுத்த கதையும் நடந்தது. அதற்காக அடுத்தக் கட்ட உண்ணாவிரதம்!



சிறைக்குள் முருகன் வரைந்த படம்

பட்டினி கிடப்பதுதான் எமக்கான தீர்வைப் பெற்றுத் தரும் ஒரே ஆதாரமாக விளங்கியது. உடலை வருத்தி, உணவுக்குடலைச் சுருக்கி, நா வறண்டு, 'இதுதான் கடைசி நாளோ?' எனக் கண்களுக்குள் பயம் படர்ந்து... மொத்தமாக 25 நாட்கள் உண்ணாவிரதம். சாகும் நிலை வரப்போகிறது எனத் தெரிந்த பிறகுதான், அதிகாரிகளின் மனதில் மாற்றம் பிறந்தது.



1995-ம் ஆண்டு எங்களுடைய திருமணத்தை சட்டப்படி பதிவு செய்துகொண்டோம். ‘குற்றவாளிகள் இல்லை’ எனப் போராடி இருக்க வேண்டிய நாங்கள், ‘உண்மையான தம்பதி’ என்பதை நிரூபிக்கவும், எங்கள் மகளைக் காக்கவுமே படாத பாடுபட்டோம்.

நினைத்துப் பார்க்க முடியாத அத்தனை கொடூரங்களையும் கருவிலேயே சந்தித்துவிட்ட என் மகள் ஆரித்ரா, இன்றைக்கு லண்டனில் பயோ மெடிக்கல் சயின்ஸ் முதல் வருடம் படிக்கிறாள். மிருகங்களுக்கு மத்தியில் சிக்கிய சினை ஆடாக, வயிற்றுக்குள் வைத்து அவளை எப்படிப் பொத்திப்பொத்தி வளர்த்தோம் என்பதை இன்றைக்கு நினைத்தாலும் மலைப்பாக இருக்கிறது. வயிற்றுக்குள் இருந்தபோது மட்டும் அல்ல... வளர்ந்து ஆளாகி அவள் நிற்கும் வேளையிலும் ‘மகளே...’ என வாய் நிறைய

அழைக்க முடியாமலும், அவள் முகத்தைப் பார்க்க முடியாமலும் நாங்கள் படும்பாடு, ஆயிரம் தண்டனைகளுக்குச் சமம்!

எனக்கு தூக்குக்கான தேதி அறிவிக்கப்பட்டது குறித்து ‘விகடன்’ நிருபர் ஆரித்ராவிடம் பேட்டி எடுத்தபோது, ‘அப்பாவை முதல் முறையா சந்திச்சப்ப, ‘ஏம்ப்பா இப்படிப் பண்ணினீங்க?’னு கேட்டேன். இன்னிக்குப் புரியுது... நான் கேட்டது எவ்வளவு பெரிய தப்புன்னு... அப்பா, என்னை மன்னிச்சிடுங்கப்பா’னு ஆரித்ரா பதில் சொல்லி இருந்தாள்.

ஒரு தாய், தகப்பனாக ஆரித்ராவுக்கு எதுவும் செய்ய முடியாமல், ‘கொலைகாரனின் மகள்’ என்கிற பழிப் பெயரை வாங்கிக்கொடுத்த நாங்கள்தான் ஆரித்ராவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். எந்த சிசுவை அழிக்க நினைத்தார்களோ... அதுதான் இன்றைக்கு எங்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை. அவள் உலகத்தின் ஏதோ ஒரு திசையில் இருந்தாலும், எங்களின் வாரிசாக இருக்கிறாள் என்கிற ஆறுதலே எமக்குப் போதும்.

# 4

# காவு வாங்கும் கையெழுத்து!

இலங்கையில் நான் இருந்தபோது, போலீஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டதுகூட இல்லை. காரணம், அங்கே அந்தக் கட்டமைப்புகள் அரிது. ஆனால் ராஜீவ் வழக்கில் சிக்கி, அனுதினமும் போலீஸின் கையில் நான் அனுபவித்த சித்ரவதைகளும், ஏறி இறங்கிய நீதிமன்ற அவஸ்தைகளும் கொஞ்ச நஞ்சம் அல்ல.

‘குற்றம் சாட்டுபவர்கள் அதற்குரிய தகுந்த, நம்பகமான உண்மைகளை/சாட்சியச் சான்றுகளை முன்வைத்து நிரூபணம் செய்ய வேண்டும்!’ என்பதுதான் உலகம் முழுக்கப் பின்பற்றப்படும் குற்ற நடைமுறைச் சட்டங்களின் அடிப்படைக்கூறு! ஆனால், எமது விடயத்தில் இந்த அதிமுக்கியமான மனித சமூக விழுமியத்தைப் பாதுகாக்கும் இந்த சட்டக் கோட்பாடு, கருணை இன்றி தவறாகக் கையாளப்பட்டது.

சட்டக் கோட்பாடு மீறப்பட்டதற்கும், அதன் குரூர நாக்குகள் எங்களைக் கொத்தியதற்கும் காரணம், எம்மையோ அல்லது வேறு யாரையோ தண்டித்துவிட வேண்டும் என்ற அதிகாரப் பேராசைதான்! ஒரு மனிதன், தான் செய்யாத தவறுக்கு அநேகமான சூழ்நிலைகளில் சாட்சிய சான்றுகள் காட்ட முடியாது என்பது இயற்கையின் நியதி மட்டும் அல்ல; அறிவியல், தர்க்கவியல் உண்மையும்கூட!



குழந்தையுடன் நளினி, முருகன்

குறிப்பிட்ட குற்றம் நடந்த இடத்தில் நான் இல்லை என்றும், அந்த நேரத்தில் நான் என் வீட்டில்தான் இருந்தேன் என்றும் நிரூபணம் செய்ய, என் வீட்டார்தான் சாட்சியம் சொல்ல வேண்டும். ஆனால், என் வீட்டாரையே குற்றவாளிப் பட்டியலிலும் அரசுத் தரப்பு சாட்சிப் பட்டியலிலும் சேர்த்துவிட்டு, 'உன்னை நிரபராதி என நிரூபி' என்றது சட்டம். யாரைப் பிடித்து நான் நிரூபிக்க முடியும்? நடந்தது சாதாரண சம்பவம் அல்ல. நாட்டையே குலுங்கவைத்த கொலை. தமிழகத்தின் சட்ட நிலைமைகள், நீதிமன்ற விவகாரங்கள், போலீஸ் நடவடிக்கைகள் எல்லாம் எப்படி இருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாது. சிக்கிச் சின்னாபின்னமாகி, மரணத்தின் வாசலை அனுதினமும் தொட்டுத் திரும்பிய வேளையில்தான், போலீஸ் நடவடிக்கைகள் எப்படிப்பட்டவை என்பது புரியத் தொடங்கியது.

அதில், அதிகாரிகளின் குரூரச் சித்ரவதை ஒன்றை உங்களிடம் அவசியம் சொல்ல வேண்டும். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் வற்புறுத்திக் கையெழுத்து வாங்குவதற்காக அதிகாரிகள் இந்தச் சித்ரவதையை என் மீது பாய்ச்சினார்கள். அதாவது, ஒரு மேஜை

மீது என்னைக் குப்புறத் தள்ளி, இரு பாதங்களும் வெளியே தொங்கும்படி படுக்கவைத்து, இரு கால்களையும் கட்டுவார்கள். பின்னர் என் மீது நாலைந்து பேர் ஏறி அமர்ந்துகொள்ள, குதியில் (பாதத்தில்) கட்டையால் தொடர்ச்சியாகப் பலமாக அடிப்பார்கள். உச்சி மண்டையே உடைந்து சிதறும் அளவுக்கு வலி பெருக்கெடுக்கும். இன்னும் ஓர் அடி அடித்தால் உயிர் நின்றுவிடும்போல் தோன்றும். இந்தச் சித்ரவதையின் விளைவு என்ன என்றால், குறைந்தது மூன்று நாட்களுக்கு எழுந்து நிற்கவே முடியாது. காலைத் தரையில் வைத்தால் உயிரே போய்விடும். அது மட்டும் அல்ல... இந்த சித்ரவதைக்கு அடிக்கடி ஆளாகுபவர்களால் ஜென்மத்துக்கும் ஓடவோ, வேகமாக நடக்கவோ முடியாது. பாத நரம்புகள் முழுமையாக செயல் இழந்துவிடும்.



சிறையில், முருகன் வரைந்த
ஆரித்ராவின் ஓவியம்

இந்தச் சித்ரவதையின் இன்னொரு பகுதியாகத் தலைகீழாக அந்தரத்தில் கட்டித் தொங்கவிட்டு அடிப்பார்கள். பின்பக்கம் பழுத்து வீங்கிவிடும். அன்றாடக் கடன்களைக் கழிக்கக்கூட திண்டாடித் தவிக்க வேண்டிய நிலையாகிவிடும். ஒருவரை

அடிக்கும்போது, மற்ற எதிரியை அழைத்துவந்து காட்டுவார்கள். அப்போது ஏற்படும் பீதி, அடி வாங்குவதைவிடக் கொடுமையானது.

என்னைத் தலைகீழாகக் கட்டும்போது மரண ஓலமிடத் தோன்றும். ஆனாலும், பல்லைக் கடித்தபடி அடக்கிக்கொள்வேன். காரணம், என் அலறல் என் கர்ப்பிணி மனைவிக்குக் கேட்டுவிடக் கூடாது என்பதற்காக. ஆனால், நகக் கணுவின் இடுக்கைக்கூட ஆராய்ந்து கண்டுபிடித்துவிடும் அதிகாரிகளுக்கு நான் அலறாமல் இருப்பதற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியாதா? தலைகீழாகத் தொங்கவிட்டு, அடி, உதைகளை அரங்கேற்றியபடியே, 'உன் எதிரே யார் நிக்கிறதுன்னு பார்' என்றார்கள். அடி, உதையின் மயக்கமும், தலைகீழாகத் தொங்கும் அவஸ்தையும் கண்களைக் கிறுகிறுக்க வைத்திருக்க, எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. விம்மி வெடிக்கும் அழுகுரல் கேட்டு, கண்களைத் திறந்தால் எதிரே என் கர்ப்பிணி மனைவி நளினி.

'என்னை எவ்வளவு வேண்டுமானாலும் அடியுங்கள்... கொல்லுங்கள். ஆனா, அவளை அனுப்பிடுங்க சார்... அவளால தாங்க முடியாது!' எனக் கதறினேன். அந்தக் கதறல் அதிகாரிகளுக்குப் பிடித்திருந்தது. நளினியை பார்க்கவைத்தபடியே தொடர்ந்து என்னை அடித்தார்கள். கதறக் கதற எனது விரல்களைப் பின்னோக்கி வளைத்தார்கள். இதேபோல் எந்தப் பக்கம் எல்லாம் வளைக்க முடியாதோ, விரிக்க முடியாதோ... அந்தப் பக்கம் எல்லாம் உறுப்புகளை வளைத்து அலற வைத்தார்கள்.

என் விரல் இடுக்குகளில் குச்சிகள், பென்சில்கள், பேனாக்களை வைத்து புண்ணாகும் வரை நெரித்தார்கள். இந்தச் சித்ரவதைகளை நளினிக்கும் செய்தார்கள். சிமெண்ட் தரையில் சிறு கற்களைத் தூவி அதன் மீது முட்டிபோட்டு, மணிக்கணக்கில் கைகளை முன்பே நீட்டியபடி நிற்க வைப்பார்கள். கற்கள் முழங்கால்களை ரத்தமாக்க, கைகள் ஒடிந்துவிடுவதுபோல் வலிக்கும். முழங்காலை

ஒரு பாகை கோணத்தில் மடித்து கைகளை முன்பே நீட்டிய வண்ணம் (நாற்காலி வடிவில்) மணிக்கணக்கில் நிற்க வைப்பார்கள். ஆரம்பத்தில் ஏதோ உடற்பயிற்சி போலத்தான் இருக்கும். ஆனால், நேரம் ஆக ஆக நரம்புகளே அறுந்துபோகிற அளவுக்கு வலி எடுக்கும். சிறிது நேரத்திலேயே நிற்க முடியாமல் கீழே விழுந்துவிடுவேன். அதற்காகவே காத்திருந்தவர்களைப்போல் சரமாரியாகத் தாக்குவார்கள்.

இன்னொரு விசாரணை அதிகாரிக்கு, சினிமாக்களில் வரும் சண்டைக் காட்சிகளைப்போல் செய்து காட்ட ஆசை. அதற்காக என்னை நிலத்தில் அமரவைத்து, அவர் ஒரு சுழல் நாற்காலியில் அமர்ந்துகொள்வார். அவர் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போதே, 'எங்கிட்டேயே பொய் சொல்றியா நாயே...' என்றபடியே நாற்காலியைச் சுழற்றிச் சுழற்றி காலால் உதைப்பார். முடிவில், பெரிதாக எதையோ சாதித்துக் கிழித்துவிட்டவரைப்போல், 'எப்படி நம்ம அடி?' என என்னிடமே கருத்துக் கேட்பார்.

விசாரணை அலுவலகத்தில் வெறும் ஆறு அடி நிலப்பரப்பில்தான் என் வாழ்க்கை. புரண்டு படுக்கக்கூட இடம் இருக்காது. போய்ச் சேரும் காலத்தில்தான் ஆறு அடி நிலம் தேவை என்பார்கள். வாழும் காலத்திலேயே அந்த அவஸ்தையை அனுபவித்தவன் நான். மூன்று பக்கம் இரும்பு அலமாரியின் கதவுகளும், ஒரு பக்கம் நாற்காலியும் போடப்பட்டு இருந்தன. தொடர்ந்து 60 நாட்களாக அதே குறுகிய இடம்தான்... அதே அவல வாழ்க்கைதான்!

கையில் விலங்கு மாட்டி, அதற்கு ஒரு தொடர்பு சங்கிலி போட்டு அருகில் உள்ள நாற்காலியின் காலில் கட்டி வைத்திருந்தனர். சாப்பிடும்போதுகூட என் இரு கைகளிலும் அந்த விலங்கு அப்படியே இருக்கும். 15 நாட்கள் வரை என்னைக் குளிக்கக்கூட அனுமதிக்கவில்லை.

எங்களுக்கான சித்ரவதைகள் எப்படிப்பட்டவை என்பதைச் சொல்ல ஒரே ஆதாரம் கோடியக்கரை சண்முகம். ராஜீவ் கொலை வழக்கில் தானாக முன்வந்து சரண் அடைந்த தொழில் அதிபர் அவர். 14.6.91 அன்று முதல், நாங்கள் அவருடன் போலீஸ் காவலில் வைக்கப்பட்டு இருந்தோம். சண்முகம் பெரிய பணக்காரர். அரசியல்வாதிகள் மத்தியில் அவருக்கு நல்ல செல்வாக்கு உண்டு. அவர் மர்மமான முறையில் 19.7.91 அன்று இறந்துபோனார். அவர் இறந்த பின்னணி குறித்து அப்போதே மீடியாக்கள் பலவிதமான சந்தேகங்களையும் பட்டியல் இட்டன.

சண்முகம் மரணத்துக்குப் பின்னர் அவர் குடும்பத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வீரசேகரன் மீது தடா வழக்கின் கீழ் பொய் வழக்குப்போட்டு கைது செய்து சிறையில் அடைத்தனர். மிகுந்த பண வசதியும், செல்வாக்கும்கொண்ட சண்முகத்துக்கும், அவருக்காக ஆஜரான ஒரு வழக்கறிஞருக்குமே இப்படியான கதி என்றால், என்னைப் போன்ற வெகு சாதாரண ஜீவன்களை எல்லாம் ஒரு புழுவுக்கு நிகராகத்தானே அதிகாரிகள் பார்த்திருப்பார்கள்?!

60 நாள் போலீஸ் காவல் முடிவதற்கு முதல் நாள் ‘ஒப்புதல் வாக்குமூலம்’ எனப்படும் தாள்களில் என்னிடம் கையெழுத்து வாங்க வந்தார்கள். அதாவது, அடிக்க வேண்டிய அத்தனைவிதமான அடிகளையும் அடித்து, உடலின் அத்தனை பாகங்களையும் சொரணை இழக்கவைத்து, ‘உயிர் மட்டுமே மிச்சம்’ என்கிற நிலையில் 8.8.91 அன்று மாலை 6.30 மணி அளவில் ஓர் அதிகாரி முன்னிலையில் என்னைக் கொண்டுபோய் விட்டனர். என்னை எதிரே நிற்க வைத்துவிட்டு, அவர் வெள்ளை பேப்பரில் அவர் மனதுக்குத் தோன்றிய கற்பனைகளை எல்லாம் எழுதினார். எழுதிய பகுதிகளை என்னிடம் காட்டாமல் மறைத்தபடி என்னிடம் கையெழுத்துக் கேட்டார். அவர் எழுதியதை என்னிடம் காட்டாவிட்டாலும், என்னை வசமாகச் சிக்கவைக்கும் விதமாகவே

அது எழுதப்பட்டுள்ளது என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. அதனால், கையெழுத்துப்போட மறுத்துக் கதறினேன்.

கேட்கக் கூசும் ஆபாச வார்த்தைகளால் என் மனைவியையும், தாயாரையும் கேவலப்படுத்திப் பேசினார்கள்.

'இத்தனை நாள் அடி வாங்கியும் நீ திருந்தலையா... உன்கிட்ட எப்படிக் கையெழுத்து வாங்குகிறேன் பார்!' என்றபடி என்னைத் தனி அறைக்கு அனுப்பிவைத்தார். மீண்டும் இரவு 8 மணிக்கு என்னை அழைத்தார். அந்த அறையில் அவரது கையின் அருகில் ஏற்கெனவே என்னை அடித்து சிதைந்துபோன ஒரு தடியும், ஒரு புதிய தடியும் வைக்கப்பட்டு இருந்தன. அவருடன் என்னை மிகக்கொடுமையாக அடித்த இன்னோர் அதிகாரியும் இருந்தார். அவர்களின் விஷமத்தனமான பார்வையே அவர்கள் நிகழ்த்தப் போகும் பேராபத்தை எனக்குப் புரியவைத்தது. கையெழுத்துப் போடாவிட்டால், அந்த இடத்திலேயே என்னைக் கொலை செய்ய முடிவு எடுத்துவிட்டார்கள்.

'கையெழுத்துப் போடுறியா... இல்லை, உயிரை விடுறியா?' என உக்கிர வெறியோடு கேட்டார்கள். உயிரை விடுவதற்கா இத்தனை நாட்கள் இவர்களிடம் உதை வாங்கிக்கிடந்தேன்? சிறு குழந்தையாக நளினியின் வயிற்றில் வளரும் என் தளிரின் முகத்தை எப்போது பார்ப்பேன்... சிறைக் கொட்டடியில் இருந்து என் தளிரை வெளியே அனுப்பிவைக்கும் வரை எப்படி என் உயிரை இழப்பேன்? என் குழந்தையின் முகத்தைக் காணும் வரை என்னைக் கொன்றுவிடாதீர்கள் என்று அவர்களிடம் எப்படிச் சொல்வேன்? இனியும் தயங்கினால், கோடியக்கரை சண்முகத்துக்கு ஏற்பட்ட சாவே எனக்கும் ஏற்படும் என்பது உறுதியானது.

என் வாரிசின் முகம் பார்க்காமல் உயிரைவிட எனக்கு விருப்பம் இல்லை. அதேநேரம், அவர்கள் அடித்தே கொன்றுவிடுவார்களே என்கிற பயத்துக்கும் பதில் இல்லை. என்னைக் காத்துக்கொள்ள அப்போது எனக்கு இருந்த ஒரே வழி... அவர்கள் சித்திரித்திருந்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போடுவதுதான். ‘ஏதோவோர் ஆபத்து என்னைச் சூழ்கிறது’ என்கிற நடுக்கத்துடனேயே கைகள் துடிக்கக் கையெழுத்துப் போட்டேன். எட்டு வருடங்களுக்கு முன்னால் என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நான் போட்ட கையெழுத்தே, என் உயிரைக் காவு வாங்கும் சாட்சியாக மாறிப்போனதுதான் என் ஜென்மத் துயரம்!

# 5

# ஒப்புதல் வாக்குமூலம்... உலுக்கும் உண்மைகள்!

**ஒ** ப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்துப் போட்டதுதான் நான் செய்த பெரும் பிழை. எவ்வளவோ அடி, உதை சித்ரவதைகளைச் சுமந்தவன் அன்றைக்கும் பல்லைக் கடித்தபடி அவர்களின் தாக்குதலைத் தாங்கி இருக்கலாம்; இல்லையேல், அவர்களின் தாக்குதலில் உயிரையே விட்டிருக்கலாம். அன்றைக்கே மண்ணோடு மண்ணாகிப் போயிருந்தால், இன்றுவரை மரணத்தின் துரத்தலுக்கு ஆளாகித் தவித்திருக்க வேண்டியது இல்லை. ஒவ்வொரு நாளும் செத்துச் செத்துப் பிழைப்பதைவிட செத்து ஒழிந்துவிடுவதே மேல்.

'ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்துப் போட்டதன் மூலமாக ராஜீவ் கொலை விவகாரத்தில் தனக்கு இருக்கும் பங்களிப்பை முருகன் ஒப்புக்கொண்டு இருக்கிறார்' என மீடியாக்களிடம் அறிக்கை வாசித்தார்கள் அதிகாரிகள். எத்தனையோ சித்ரவதைகளை நடத்தி, அவர்களின் புனைவுக் கதைகளுக்குக் கையெழுத்து வாங்கினார்கள் என்பது எங்களுக்குத்தான் தெரியும்.

பிரம்புகளின் பின்னணியில் எங்களிடம் கையெழுத்து வாங்கப்பட்ட அன்றைய சூழலிலும்கூட நான் சமயோசிதமாக ஒரு காரியத்தைச் செய்தேன். என் கையொப்பம் நான் விரும்பிப் போட்டது அல்ல என்பதை நிரூபிக்க, ஐ.பி.சி. செக்ஷன் 29 மற்றும்

இண்டியன் எவிடென்ஸ் ஆக்ட் செக்ஷன் 15-ன்படி எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய சான்றுக் குறியீடுகளைப் போட்டு வைத்தேன். அந்தக் குறியீடுகளைப் பற்றி என்னிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். அங்கும் இது கேட்கப்படவில்லை.

'விசாரணையின்போது நடந்த சித்ரவதைகளைப் பற்றி நீதிபதியிடம் முறையிட்டு இருக்கலாமே?' என்று சிலர் கேட்கிறார்கள். நியாயமான கேள்விதான். ஒரு எலியைப் பூனையின் காவலில் வைத்துவிட்டு, அந்த எலியிடமே 'பூனை உன்னை துன்புறுத்தியதா?' என வீட்டு எஜமான் கேட்டால் எப்படி இருக்கும்? அதுபோல்தான் அப்போது எனக்கு இருந்த நிலையும். அதிகாரிகளின் சித்ரவதைகளைப் பற்றிச் சொல்லிவிட்டு திரும்பவும் அவர்களின் பிடிக்குத்தானே நாங்கள் வரவேண்டும்! அப்படியிருக்க, வாய் திறந்த பாவத்துக்காக மேலும் தாக்குவார்களே..! உடல் முழுக்கக் காயங்கள் இருந்தாலும், வாய்விட்டுக் கதறக்கூட அப்போது எங்களுக்குத் தைரியம் இல்லை.

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எங்களால் நீதிபதியின் முகத்தைக்கூட தெளிவாகப் பார்க்க முடியவில்லை. தவறியும் அவர் எங்களையோ, நாங்கள் அவரையோ பார்த்துவிடாதபடி 10-15 அதிகாரிகள் எங்களை வளையம்போல் சுற்றி நின்றனர். நீதிமன்றம் என்றுகூடப் பார்க்காமல், 'ஏதாச்சும் பேசுனீங்கன்னா......!' என மிரட்டினார்கள். அதையும் மீறி என் மனைவி நளினி, நீதிபதியின் முகத்தைப் பார்க்கப் போராடியபடி இருந்தாள். அடி, உதைகள் இல்லாத ஒரே இடம் எங்களுக்கு அந்தக் கூண்டுதான். எங்களின் சோகத்தைச் சொல்வதற்கான கடைசி வாய்ப்பிடமும் அதுதான். நீதிபதியைப் பார்க்க என் மனைவி போராடுவதும், அதிகாரிகள் சுற்றிச் சுற்றி அவரை மறைப்பதுமாக இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில், ‘அரசாங்க செலவில் எங்களுக்கு வக்கீல் நியமிச்சு கொடுங்க...’ என நீதிபதியிடம் கைகூப்பியபடி வேண்டினாள் நளினி. இத்தனைப் போராட்டங்களைக் கடந்து அந்தக் குரல் வருகிறது என்பதை அந்த நீதிபதி அறிந்திருக்க வாய்ப்பில்லை. ‘பார்க்கலாம்’ என்றபடியே ஏதோ எழுதினார். ஆனால், அடுத்த ஒரு வருடம் முடியும் வரை அதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

நீதிபதி முன் எங்களை ஆஜர்படுத்த அழைத்துவரும்போது எல்லாம் அதிகாரிகளின் பூச்சாண்டித்தனம் அப்பட்டமாகவே தெரியும். ‘நீதிபதியிடம் ஏதாவது சொன்னா, சண்முகத்துக்கு ஏற்பட்ட நெலமைதான் உங்களுக்கும்’ என மிரட்டுவார்கள். அடி, உதைகள் வாங்கி மிரண்டு கிடக்கும் எங்களால் இதையும் தாண்டி என்ன பேசிவிட முடியும்?!

3.8.91 அன்று ஒப்புதல் வாக்குமூலத் தாள்களில் எனது கையொப்பத்தை பெற்றுவிட்டு மறுநாள் எம்மை ஒருவர் முன் ஆஜர்படுத்தினார்கள். அதற்கு முன்னர் அவரை நான் பார்த்தது இல்லை. சைதாப்பேட்டை சிறையில் சிறிய அறையில் ஒரு பக்கம் அரசு வக்கீலும், இன்னொரு பக்கம் வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரியும் அமர்ந்து இருந்தனர். புதுமுகமாகத் தெரிந்த அவர், தலை குனிந்தபடி எமது காவல் நீடிப்பு தேதியைச் சொன்னார். உண்மையில் அவர்தான் நீதிபதி என்றே எனக்குத் தெரியாது. அவர் உத்தரவிட்டது போலீஸ் காவலுக்கா அல்லது நீதிமன்றக் காவலுக்கா என்பதும் எனக்கு விளங்கவில்லை.

நான் நிறுத்தப்பட்ட இடம் ஒரு நீதிமன்றம் என்பதுகூட எனக்குத் தெரியாது. அங்கே அப்படி ஒரு சூழ்நிலையும் இல்லை. எங்கே கொண்டு செல்லப்படுகிறோம் என்பதை அதிகாரிகள் தொடர்ந்து ரகசியமாகவே வைத்திருந்தார்கள். நீதிமன்றம் எனச் சொன்னால் அங்கே சகலத்தையும் கொட்ட நாங்கள் ஆயத்தமாகிவிடுவோம் என்கிற பயம் அதிகாரிகளுக்கு.

ஜுடிஷியல் கஸ்டடியில் சிறைக்கு அனுப்பப்பட்ட பின்புகூட அங்கு அதிகாரி ஒருவர் வந்து எங்களை மிரட்டினார். ஜுடிஷியல் கஸ்டடிக்கு வந்த பின்னர் போலீஸார் எங்களைச் சித்ரவதை செய்தது பற்றியும், பல தாள்களில் எமது கையொப்பத்தை அனுமதி இன்றிப் பெற்றது பற்றியும் முறையீட்டு மனு அனுப்பினோம். இந்த மனுக்களின் நகல் மற்றும் அதன்மீது நீதிமன்றம் போட்ட உத்தரவு நகல் ஆகியவை அனைத்தையும் C2.p.c.313 செக்ஷன் கீழ் சமர்ப்பித்த வாக்குமூலத்தின் கீழ் சேர்த்து இணைத்துள்ளோம்.

இந்த வழக்கில் 20.5.1992 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். 16.5.92 வரை இந்த வழக்கில் 20 எதிரிகள்தான் சேர்க்கப்பட்டு இருந்தனர். அவர்களில் 16 பேர்களிடம் ஒப்புதல் வாக்குமூலத் தாள்களிடம் கையொப்பம் பெற்று இருந்தனர். (ஏ-7) கனகசபாபதி, (ஏ-14) பாஸ்கரன், (ஏ-22) சுபா சுந்தரம், (ஏ-26) ரங்கநாத் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலக் கையெழுத்து வாங்கப்படவில்லை. கனகசபாபதி, பாஸ்கரன் இருவரும் மிகவும் வயதானவர்கள். சுபா சுந்தரம் வயோதிகப் பருவத்தை நெருங்கிக்கொண்டு இருந்தவர். நமது கால நேரத்துக்கு எதுவெல்லாம் கைகொடுக்கும் என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். சுபா சுந்தரத்தை அதிகாரிகள் பெரிதாக விசாரிக்கவில்லை. எங்கள் மீது பாய்ச்சப்பட்டது போன்ற கொடூர சித்ரவதைகளுக்கும் அவரை ஆளாக்கவில்லை. காரணம், அப்போது அவருடைய உடல் எடை 130 கிலோ. அதனால், அவரைப் பிறர் உதவி இல்லாமல் எழ வைக்கவோ, அமர வைக்கவோ முடியாது. அதனாலேயே அவர் கொடூர சித்ரவதைகளில் இருந்து தப்பினார்.



நளினி, குழந்தையுடன்...

கனகசபாபதி ஓர் அரசு ஊழியர், சுபா சுந்தரம் ஒரு பத்திரிகையாளர் என்பதால் விசாரணை அதிகாரிகள் காட்டிய இடங்களில் கையெழுத்துப் போட அவர்கள் ஒத்துழைக்கவில்லை. கையெழுத்து என்று ஒன்று கிடைத்துவிட்டால், அதை வைத்தே எத்தகைய திரைக்கதையையும் அதிகாரிகள் அச்சேற்றுவார்கள் என்பதை அந்த இருவரும் அறிந்து வைத்திருந்தார்கள்.



ரங்கநாத் (ஏ-26) அவர்களை பெங்களூரு நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, தனக்கு நேர்ந்த சித்ரவதைகளை அவர் ஆதாரத்துடன் சொன்னார். அவருடைய பல் உடைக்கப்பட்டதை அவர் ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டினார். இதனாலேயே ஒப்புதல் வாக்குமூலத்தில் ரங்கநாத்திடம் கெடுபிடி காட்டப்படவில்லை. அவரது மனைவியையே அவருக்கு எதிராக மாற்றி வாக்குமூலம் கொடுக்க வைத்துவிட்டதால், அவர்களுக்கு ரங்கநாத்தின் ஒப்புதல் வாக்குமூலம் தேவை இல்லாமல் போய்விட்டது.

மேற்படி 16 எதிரிகளும் 60 நாட்கள் வரை போலீஸ் காவலில் வைக்கப்பட்டு இருந்தோம். ஒவ்வொருவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி அதிகாரிகள் எழுதி இருந்த விவரங்களைப் பார்த்தோம். மூன்று மணி நேரம் முதல் ஒன்பது மணி நேரம் வரை ஒப்புதல் வாக்குமூலம் வாங்கச் செலவானதாக அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை நாமாக முன்வந்து சொல்லியிருந்தோம் என்பது உண்மையானால், அதே தகவல்களை போலீஸாரிடம் சொல்லவும் அதே அளவு நேரம்தான் செலவாகி இருக்க வேண்டும். அதிகபட்சம் அதைப்போல் 10 மடங்கு நேரம் செலவானது எனக் கொண்டால்கூட மொத்தம் ஆறு நாட்கள்தானே ஆகும். ஆனால், ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்க 60 நாட்களாக போலீஸார் எங்களைப் படுத்தி எடுத்தது ஏன்?

அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதால்தானே... பொய்யான கற்பனைகளில் நாங்கள் கையெழுத்திட மாட்டோம் என்பது தெரிந்துதானே இத்தனை சித்ரவதைகள்! இந்த 60 நாட்களில் எங்களின் உடலும் மனமும் எத்தனைவிதமான குரூரங்களுக்கு ஆளாகி இருக்கும்? மரணத்தையும்

ஒப்புக்கொள்ளும் மனநிலையை உருவாக்கத்தான் அதிகாரிகளுக்கு இந்த 60 நாள் அவகாசமா?

16.05.92-ல் இந்த வழக்கில் சேர்க்கப்பட்ட ஆறு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர். அதிலும் நால்வர், எந்த வகையிலும் ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல எனச் சொல்லி விடுவிக்கப்பட்டனர். நியாயமாக, நாங்கள் சொல்லிய உண்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டிருந்தால், இவர்களைப்போல் வெளியே வந்திருக்க வேண்டியவர்கள்தான் நாங்களும்... ஆனால், சித்திரிப்புகளுக்கும், சித்ரவதைகளுக்கும் எங்களைப் பலிகொடுக்க அதிகாரிகள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற்றுவிட்டன. ஒப்புதல் வாக்குமூலம் என்கிற பெயரில் அதிகாரிகள் எங்களின் தலை எழுத்தை தண்டனைகளாலேயே நிரப்பினர்.

மரணம், பனை மர நிழலைப்போல் எங்களைச் சுற்றி அங்கும் இங்குமாக நகர்ந்து வருகிறது. அதன் துரத்தலுக்குப் பயந்து நாங்களும் அங்கும் இங்குமாக ஓடுகிறோம். இன்னும் முழுவதுமாக மரண பயம் எங்களைவிட்டு நீங்கவில்லை. குற்றவாளிகளாக நாங்கள் கொத்தாக வளைக்கப்பட்ட நேரம் நெஞ்சத்துக்குள் அப்படியே நீள்கிறது. ராஜீவ் காந்தி, இந்தியாவின் பலம் பொருந்திய தலைவர். அவர் கொலை செய்யப்பட்ட செய்தி பரவியபோது மொத்த இந்தியாவும் ஸ்தம்பித்துப் போனது. தமிழ்நாடு முழுக்க கொந்தளிப்பு... பல இடங்களில் நாசகார வேலைகள் நிகழ்ந்தன. வீதிகள் முழுக்க வெட்டுக் குத்து... தீக்குப் பயந்து பேருந்துகள் பதுங்கிக்கொண்டன. ‘அவ்வளவு பெரிய தலைவரைக் கொன்னுட்டாங்களே...’ என்கிற ஆதங்கமும் பரிதவிப்பும் எல்லோருடைய மனங்களிலும் எதிரொலித்த நேரம்.

அப்போதுதான் நாங்கள் ராஜீவ் கொலையின் காரண கர்த்தாக்களாக வளைக்கப்பட்டோம். நாடே கோப ஆவேசமாகி இருந்த நிலையில் எங்களை நோக்கியப் பார்வை மக்களுக்கு

எப்படி இருந்திருக்கும்? 'தலைவரைக் கொன்ன பாவிகள் இவங்கதானா?' எனப் பத்திரிகைகளில் வெளியான எங்களது படங்களைப் பார்த்து மக்கள் எப்படி எல்லாம் கர்ஜித்து இருப்பார்கள்?

அந்த நேரத்தில் நாங்கள் எந்தவித நியாயத்தைச் சொன்னாலும், அது மக்களால் ஏற்கப்பட்டிருக்காது. எங்களுக்காக ஆஜராக வழக்கறிஞர்கள் முன்வரவில்லை. ராஜீவ் கொலையின் நிஜப் பின்னணி என்ன என்பதை அறிந்துகொள்ளக்கூட வழக்கறிஞர்கள் ஆர்வம் காட்டவில்லை. அப்படியே அவர்கள் எங்களுக்காக ஆஜராகி இருந்தாலும், மக்கள் மன்றத்தில் அவர்களையும் அவமானப்பேய் சூழ்ந்திருக்கும்.


மிகப் பெரிய தலைவர் கொல்லப்பட்ட பரபரப்பும் பதற்றமும் நிலவிய நிலையில், கண்ணியில் சிக்கியக் காடைக் குருவிகளாக நாங்கள் அதிகாரிகளின் பிடியில் இருந்தோம். கதறினால்கூட தவறு என்கிற நிலையில், எங்களால் என்ன செய்திருக்க முடியும்? எங்களை விசாரித்த அதிகாரிகள் இந்நேரம் பணி ஓய்வில் வீட்டுக்குப் போயிருப்பார்கள். ஆனால் எங்களின் வாழ்க்கையில் அதிகாரம் அள்ளிப்போட்ட மண், மரண மேடாக எங்களை விழுங்கத் துடிக்கிறது. மரணம் வெல்கிறதோ, வீழ்கிறதோ... அதற்குள், எங்கள் நெஞ்சக் கூட்டுக்குள் இருக்கும் அத்தனை உண்மைகளையும் உரக்கச் சொல்லிவிட வேண்டும் எனத் துடிக்கிறது மனது!

6

# அனுதின அலறல்கள்!

என் மனைவி நளினி கைது செய்யப்பட்டபோது, 50 கிலோ எடை இருந்தார். நான் 60 கிலோ. இரண்டு மாத கர்ப்பிணியாக 'மல்லிகை'யின் குரூர அறைகளுக்குள் அடி எடுத்துவைத்த நளினி, அடுத்த இரண்டு மாதங்கள் கழித்து ஜூடிஷியல் கஸ்டடியில் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். அப்போது நளினியின் எடை எவ்வளவு தெரியுமா? வெறும் 35 கிலோ. 15 கிலோ எடையைக் குறைக்கிற அளவுக்கு சித்ரவதைகள் குரூரமாகவும் கொடுமையாகவும் இருந்தன. நான் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டபோது, வெறும் 30 கிலோதான் இருந்தேன். பாதியாக என்னைக் கழித்து, வெறி தீர்த்திருந்தார்கள்.

வெறும் வார்த்தைகளுக்காக இதை நான் சொல்ல வில்லை. ராஜீவ் வழக்கில் நாங்கள் வளைக்கப்பட்ட போது எவ்வளவு எடை இருந்தோம், சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டபோது எந்த அளவுக்கு எடை குறைக்கப்பட்டு இருந்தோம் என்பதற்கு அரசுத் தரப்பு குறிப்புகளே ஆதாரமாக இருக்கின்றன.



பிரிசன் அட்மிஷன் ரெஜிஸ்டரில் எங்களின் எடை அளவு குறிக்கப்பட்டு உள்ளது. மல்லிகை விசாரணைகளுக்குப் பிறகு சப்பி எறியப்பட்ட மாங்கொட்டையாகத்தான் நாங்கள் சிறைக்குள் தள்ளப்பட்டோம். கைதுக்கு முன் நாங்கள் எடுத்துக்கொண்ட புகைப்படமும், போலீஸ் காவலின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே, நாங்கள் எப்படி எல்லாம் சிதைக்கப்பட்டோம் என்பது புரியும்.

ராஜீவ் கொலை வழக்கில் நான் வளைக்கப்பட்டபோது, வாழைக்குருத்து வயது. கோபம் பொறுக்காது ஆவேசம் பொங்கி எழுகிற வயது. மல்லிகை அலுவலகத்தில் நடந்த கொடூரங்கள் என் வயதுக்குரிய கோபத்தையும் ஆவேசத்தையும் பொசுக்கிப் போட்டது. என்ன செய்தாலும் தாங்கிக்கொள்ளக்கூடிய சொரணையற்ற மனப் பக்குவத்தைப் பழகவைத்தது. ‘கத்திக்

கதறினாலும் யாருக்குமே கேட்காது' என்கிற கையறு நிலையை என் நாடி நரம்புகள் பழகிக்கொண்டன. மரணத்தைவிடக் கொடூரமானது மரண பயம் என்பதை நினைத்து நினைத்து என் அனுதினங்கள் அலறத் தொடங்கின.

இரவானால், தூக்கம் வராது. அதிகாரிகள் கயிறோடு துரத்துவதைப்போல் இருக்கும். எங்கேயோ தப்பி ஓடுகிற என்னை அதிகாரிகள் சுலபமாக வளைத்து விடுவதுபோல் கனவு வரும். தூக்குக் கயிற்றின் முன்னால் என்னை நிறுத்தி அதிகாரிகள் கைகொட்டிச் சிரிப்பது கனவாக விரியும். கனவில்கூட துயரத்தின் துரத்தல்களையே அனுபவித்த அபாக்கியவான் நான். என் வடுக்களையும் வருத்தங்களையும் இங்கே இறக்கிவைக்கிற நேரத்தில், சிறு ஆறுதலை என் சிறகுகள் சுமப்பது போன்ற நிம்மதி!

சில தினங்களுக்கு முன் வேலூர் சிறையில் என்னைப் பார்க்க இளம் வயதுக்காரர் ஒருவர் வந்திருந்தார். 'ஜூ.வி-யில் உங்களைப் பத்திப் படிச்சேண்ணா... தாங்க முடியலை. இப்படி எல்லாம் குரூரமா அதிகாரிகள் செயல்பட்டதை நம்பவே முடியலை. இவ்வளவு சித்ரவதைகள் கடந்து நீங்க நிக்கிறதைப் பார்க்கிறப்ப, ஏதோ மறுஜென்மம் மாதிரி இருக்கு!' என்றார் கலங்கிய கண்களோடு.

நான் இறக்கிவைப்பது வெளியே சொல்லக்கூடிய துயரங்களை மட்டுமே. சொல்ல முடியாததைப் பற்றி நினைத்தாலோ, அவற்றை எழுத்தில் வார்த்தாலோ என்னுடைய சிறு நிம்மதியும் சிதைந்துபோகும். இன்றைக்கும் ஈரக்குலையைத் துடிக்கவைக்கும் கோரங்கள் எத்தனையோ இருக்கின்றன. ராஜீவ் கொலை வழக்கின் புலனாய்வின்போது மொத்தமாக 35 பேர் வரை தற்கொலை செய்து கொண்டனர். அதிகாரிகளின் சித்ரவதைகளுக்கு ஆளாவதைக் காட்டிலும் இறப்பதே மேல் என எண்ணியதால்தானே இத்தனை தற்கொலைகள்!

ஒவ்வொரு நாள் உறங்கச் செல்லும்போதும் சில கேள்விகள் என்னை வருத்தும். குற்றச்சதிக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பது எங்களை விசாரித்த அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் எங்களைச் சிக்கவைக்க அவர்கள் இவ்வளவு வெறித்தனம் காட்டியது ஏன்? எங்களைப் பலிகடாவாக்க அவர்கள் இந்த அளவுக்குப் போராடியது ஏன்?

ராஜீவ் என்கிற மாபெரும் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் குற்றவாளிகள் யாரையும் பிடிக்க இயலாமல் போனது, அவர்களுக்குப் பெருத்த அவமானமாகிவிட்டது. அவர்களின் தேடுதலுக்கு நாங்கள் தீனியாகிப்போனோம். அவர்களுடைய வெறித்தனமான விளையாட்டுக்கு எங்களின் முதுகுகள் தோதான களமாகிவிட்டன.

இந்த விவகாரத்தில், தடா வழக்கின் கீழ் போலீஸ் அதிகாரிகளால் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் இல்லை என்றால், ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் யாரையும் தண்டித்திருக்க முடியாது.

ஒப்புதல் வாக்குமூலங்கள் வாங்கப்பட்டப் பின்னணியை அறிந்தவர்களாகச் சொல்லுங்கள்... இந்த விவகாரத்தில் நாங்கள் பலிகடாவாக்கப்பட்டதை உங்களால் உணர முடிகிறதா? சித்ரவதைகளும் குரூரங்களும்தான் எங்களைக் குற்றவாளிகளாக நிற்கவைத்ததே தவிர, உண்மைகள் இல்லை. சாட்சி, ஆதாரம் என எங்களுக்கு எதிராக எதையுமே சமர்ப்பிக்க முடியாதவர்கள், எங்களின் ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்தே மரண நிழலில் எங்களை நிறுத்தினார்கள். அது எங்களின் ஒப்புதல் வாக்குமூலம் அல்ல... ஒப்புக்காக வாங்கப்பட்ட வாக்குமூலம். அதிகாரிகளின் அளவற்ற கற்பனைக் கதைகளுக்கு எங்களின் உயிர் விற்பனைப் பொருளானது.

சாட்சியங்கள், சான்றுகள், ஆவணங்கள் ஆகியவை இந்த வழக்குக்காகவே பொய்யாக உருவாக்கப்பட்டன. உதாரணமாக,

இரண்டு சான்றுக் குறிப்புகளைச் சுட்டிக் காட்டுகிறேன்...

**கி** ளாட் ஃபெர்னாண்டஸ் என்பவர் ஒரு மருத்துவர். இவர் என்னை ஒருபோதும் பார்த்தது கிடையாது. ஆனால், எனக்கு செயற்கைப் பல் ஒன்றைக் கட்டியதாக அவர் சாட்சியத்தில் சொல்லி இருந்தார். எனக்கு அனைத்துப் பற்களுமே நல்ல நிலையில் இருக்கின்றன. இதுவரை நான் செயற்கைப் பல் கட்டிக்கொண்டது கிடையாது. இது பற்றி மேற்படி சாட்சியிடம் எனது இயற்கைப் பல்லைக் காட்டி விவரமாகக் குறுக்கு விசாரணை செய்துள்ளேன். எம்மிடம் நீதிபதி கேள்வி கேட்டபோதும், எனக்கு அந்த மருத்துவர் பிடுங்கியதாகச் சொல்லும் இடத்தில் எனது இயற்கைப் பல் இருப்பதைச் சுட்டிக் காட்டினேன். இன்றைக்கு வேண்டுமானாலும் அதிகாரிகள் என் பல்லைப் பரிசோதனை செய்து கொள்ளட்டும்.



சிறையில், முருகன் வரைந்த ஓவியம்

**தி**ருநாவுக்கரசு என்பவர் கர்நாடகத் தடயவியல் (மருத்துவப் பிரிவில்) கல்லூரியின் பேராசிரியர். இவரும் ஒரு முன்னாள் மருத்துவ இயக்குநர்தான். இவர், தனது சாட்சியத்தில் பக்கம் 41-ல் (தானாக முன்வந்து) என் மனைவி நளினியை பெங்களூரு விக்டோரியா மருத்துவமனைக்கு அதிகாரிகள் அழைத்து வந்ததாகவும், அங்கு இறந்து கிடந்த சிவராசன், சுபா ஆகியோரை நளினி அடையாளம் காட்டினார் எனவும் சாட்சியம் சொல்லி இருந்தார். பின்பு அரசுத் தரப்பு வழக்கறிஞரின் மறுவிசாரணையில் 'இந்தப் பெண்ணைத்தான் எஸ்.ஐ.டி-யினர் விக்டோரியா மருத்துவமனைக்கு அழைத்து வந்து அடையாளம் காட்ட வைத்தனர்' என என் மனைவி நளினியைச் சுட்டிக்காட்டி நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

ஆனால், 9.8.91-ல் இருந்து 1992 இறுதி வரை நானும் என் மனைவியும் செங்கல்பட்டு சிறையில் இருந்தோம். என் மனைவியைக் குறிப்பிட்ட காலத்தில் மேற்படி மருத்துவமனைக்கு யாரும் அழைத்துப் போகவும் இல்லை; யாரையும் அடையாளம் காட்டவும் இல்லை. இதை இந்த வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரியே குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டு உள்ளார். சிறையைவிட்டே வெளியே வராத நளினி, சிவராசன், சுபாவை அடையாளம் காட்டினார் என்றால், அதிகாரிகளின் ஜோடிப்புக்கு ஓர் அளவு இல்லையா?

# 7

# பொட்டு அம்மான் பேசினாரா?

**மே**ஜர் சபர்வால் என்பவர், இந்திய ராணுவத்தின் உயர் அதிகாரிகளில் ஒருவர். வெடிகுண்டு, வெடி மருந்துத் துறையில் முக்கிய வல்லுநரும்கூட. இவர் தனது அறிக்கையில், 'ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் புலிகளின் பயிற்சி முகாம்கள் இயங்கிவந்தன' என்றும், 'ராஜீவ் காந்தியைப் புலிகள்தான் கொன்றனர் என முடிவு செய்துகொள்ள இதுவும் ஒரு காரணம்' எனவும் குறிப்பிட்டு உள்ளார். ஸ்ரீபெரும்புதூர் என்பது, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கியப் பகுதி என்று அவர் நினைத்திருப்பார் போலும்!

ஆனால், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய ஆய்வாளரும், இந்த வழக்கில் எஃப்.ஐ.ஆர். தாக்கல் செய்தவருமான மதுரம் என்பவர், 'ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் ஒருபோதும் புலிகளின் பயிற்சி முகாம் இருந்தது கிடையாது!' என உறுதியாக எனது குறுக்கு விசாரணையில் கூறி இருக்கிறார்.

தவறான சாட்சியங்களை வழங்கிய மருத்துவர் கிளாட் ஃபெர்னாண்டஸ், தடயவியல் பேராசிரியர் திருநாவுக்கரசு, மேஜர் சபர்வால் ஆகிய மூன்று நபர்களுமே சாதாரண அந்தஸ்தில் உள்ளவர்கள் அல்ல. யாருக்கும் பயப்படக்கூடியவர்களும் அல்ல. இவர்களுக்கு என்மீது தனிப்பட்ட விரோதம் ஏதும் கிடையாது. அப்படி இருந்தும், எனக்கு எதிராக இவர்கள் ஏன் அப்பட்டமான பொய் சாட்சியம் சொல்ல வேண்டும்? சட்டத்தின் மாண்பு அறிந்த

இத்தகைய உயரிய புள்ளிகளையே எனக்கு எதிராகப் பொய் சாட்சியம் சொல்லவைக்க அதிகாரிகளால் முடிகிறது என்றால், ஏழைகளையும், அறியாமையில் உள்ளவர்களையும், பயந்த சுபாவம் கொண்டவர்களையும், பணம், பதவிகளுக்கு ஆசைப்படுபவர்களையும் ஏன் எனக்கு எதிராக சாட்சியம் சொல்லவைக்க இயலாது?

எனக்கு எதிரான சித்திரிப்புகள் எவ்வளவு குரூரமாக நடத்தப்பட்டன என்பதற்கான சாட்சியமாகவே இந்த உதாரணங்களை உங்களிடம் சொல்கிறேன். எந்த சாட்சியத்தையும் குற்றம் சொல்வது என் நோக்கம் அல்ல; எத்தகைய புள்ளிகளையும் எனக்கு எதிராக நிற்கவைக்கும் சக்தி அதிகாரிகளுக்கு இருந்தது என்பதை மட்டுமே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாட்சியங்களில் மட்டும் அல்ல... நாங்கள் கொடுத்ததாகச் சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களிலும் நிறையக் குளறுபடிகள்! எதிரிகளிடம் இருந்து பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முக்கியமான விடயங்கள் அனைத்தும் மற்ற சான்றுகளுடன் ஒத்துப்போக வேண்டும். முரண்பாடுகள் கொண்டதாக இருந்தால், அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கிய சட்ட விதி. என்னுடைய வாக்குமூலத்திலும் நளினியின் வாக்குமூலத்திலும் சுமார் 35 முக்கிய முரண்பாடுகள் உள்ளன.

23.5.91 அன்று ராயப்பேட்டை வீட்டில் (என் மாமியார் பத்மா, நிரந்தரமாகத் தங்கியிருந்த வீடு) நான் தங்கி இருந்ததாகவும், மறுநாள் நானும் நளினியும் வில்லிவாக்கம் வீட்டுக்கு (நளினி வாடகைக்கு எடுத்து தங்கி இருந்த வீடு) சென்று தங்கியதாகவும், 25.05.91 அன்று திருப்பதி போனதாகவும் என்னுடைய வாக்குமூலத்தில் எழுதப்பட்டு உள்ளது. ஆனால் அரசு சாட்சிகளில் ஒருவரான ராணி என்பவர், 23.05.91 அன்று அவரும் நளினியும்

வில்லிவாக்கம் வீட்டில் தங்கி இருந்ததாகச் சொல்லி இருக்கிறார். 96-வது அரசு சாட்சி சுஜா என்பவர், ‘24.05.91 அன்று நளினி வழக்கம்போல் அலுவலகம் வந்து வேலை செய்துவிட்டு மாலை வீட்டுக்குத் திரும்பினார்’ என்று சொல்லி இருக்கிறார். எவ்வளவு முரண்பாடுகள் பாருங்கள்.

18.5.91 அன்று சென்னை திரும்பி நளினியின் அலுவலகத் தொலைபேசி மூலம் அவரிடம் தொடர்புகொண்டு நான் பேசியதாகவும், அன்று இரவு அவரது வில்லிவாக்கம் வீட்டில் தங்கியதாகவும், மறுநாள் 19.5.91 அன்று ராயப்பேட்டை வீட்டுக்கு, சிவராசன், சுபா, தணு ஆகியோர் வருவதாக இருந்ததால், நான் அங்கு போனதாகவும் எழுதப்பட்டு உள்ளது.

18.5.91 அன்று, மாதத்தின் 3-வது சனிக்கிழமை. அன்றும் முதலாவது சனிக்கிழமையும் அலுவலக விடுமுறை என்பது அந்த அலுவலக நடைமுறை விதி. அப்படி இருக்க, நான் எப்படி அவருடன் அலுவலகத் தொலைபேசியில் பேசியிருக்க முடியும்? எப்படி அவருடைய வீட்டுக்கு நான் போயிருக்க முடியும்?

18.5.91 அன்று நளினி, வில்லிவாக்கம் வீட்டில் தங்கி இருந்ததாகவும், அங்கு சிவராசன், சுபா, தணு ஆகியோர் வந்ததாகவும், அன்று மாலை சுபா, தணுவுடன் சினிமா பார்க்கப் போனதாகவும், இரவு அங்கு தங்கிவிட்டு மறுநாள் (19.5.91) மூவரும் மகாபலிபுரம் போனதாகவும், மாலை வில்லிவாக்கம் வீட்டுக்கே திரும்பியதாகவும் அரசுத் தரப்பு ஆவணங்களில் எழுதப்பட்டு உள்ளது.

மேற்படி உள்ளவற்றில் நான் (மட்டும்) 18.5.91 அன்று இரவு முதல் நளினியுடன் தங்கி இருந்தேன் என்பது உண்மையா? அல்லது நளினியுடன் அன்று நான் இல்லாது சுபா, தணு மட்டும் தங்கி இருந்தார்கள் என்பது உண்மையா? அடுத்து 18.5.91 அன்று நளினி அலுவலகத்தில் இருந்தார் என்பது உண்மையா? அல்லது அன்று அவர் சுபா, தணுவுடன் தனது வீட்டில் இருந்து

சினிமாவுக்குப் போய் வந்தார் என்பது உண்மையா? 19.5.91 அன்று சுபா, தணு ஆகியோர் வில்லிவாக்கம் வீட்டில் இருந்தார்கள் என்பது உண்மையா? அல்லது அன்று வேறு இடத்தில் இருந்து ராயப்பேட்டை வீட்டுக்கு சுபா, தணு, சிவராசன் ஆகியோர் வந்தார்கள் என்பது உண்மையா?

அரசுத் தரப்பு சித்திரிப்புகள் சிலவற்றைப் படிக்கும்போதே எத்தனை விதமான குழப்பங்கள் வருகின்றன பார்த்தீர்களா? ஒரே தேதியில் ஒன்பது விதமான நிகழ்வுகளை அதிகாரிகள் சித்திரித்தார்கள். அத்தனையும் லாஜிக்கே இல்லாத சித்திரிப்புகள்.

என் விவகாரத்தில் மட்டும் அல்ல... தம்பி பேரறிவாளனும் இத்தகைய சித்திரிப்புகளுக்குத் தப்பவில்லை. அரசுத் தரப்பு ஆவணங்களில், ‘21.5.91 அன்று சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பிய அறிவு, தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கிப் பார்த்தார்’ என்று எழுதப்பட்டு உள்ளது. ஆனால், அதே வீட்டில் தங்கி இருந்த அரசாங்க சாட்சியான பாரதி என்பவர், ‘21.5.91 அன்று இரவு வீடு திரும்பிய அறிவும் பாக்கியநாதனும் மின் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துவிட்டார்கள்’ என எழுதப்பட்டு உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் இந்த விஷயத்தில் அதிக முரண்பாடு ஏதும் இல்லை என்றுதான் தோன்றும். ஆனால், மேற்படியான சூழ்நிலையை வைத்தே, எனக்கு எதிரான சில விளையாடல்களை அரசுத் தரப்பு செய்தது. சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்களே... அதேபோல் சிறுசிறு சித்திரிப்புகளும் ஒருவனைச் சிதைக்க உதவும் என நம்பியது அரசுத் தரப்பு.



வேலூர் கோட்டைச் சிறையின் கட்டமைப்பு மற்றும் இட அமைவு ஆகியவற்றின் வரைபடங்களை வயர்லெஸ் தகவல் ஊடாக பொட்டு அம்மானுக்கு நான் அனுப்பியதாக அரசுத் தரப்பு எழுதி உள்ளது. ஆனால், இன்னோர் இடத்தில் வேலூரில் எனக்கு எந்தவித வேலையும் தரப்படவில்லை என்றும், அங்கு நான் எந்த வேலையும் செய்யக் கூடாது என பொட்டு அம்மான் எனக்கு கட்டளை இட்டதாகவும் எழுதப்பட்டு உள்ளது. இதில் எது உண்மை?



வேலூர் சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளுடன், நளினி

பொட்டு அம்மான் அப்படி ஓர் உத்தரவை எனக்குப் பிறப்பித்து இருந்தால், வேலூர் கோட்டை சிறையின் கட்டமைப்பு குறித்து நான் ஏன் அவருக்குத் தகவல் அனுப்ப வேண்டும்? இதில், பெரிய வேடிக்கை என்னவென்றால், வயர்லெஸ் மூலமாக சிறையின் படங்களை நான் அனுப்பியதாக போலீஸ் தரப்பு சொல்கிறது. வயர்லெஸ் என்கிற கருவி மூலமாக தகவல்களை மட்டும்தான் சொல்ல முடியுமே தவிர, எந்த விதமான படங்களையும் அனுப்ப முடியாது. இந்த விஷயத்தைக்கூட போராடித்தான் என்னால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடிந்தது.

அரசுத் தரப்பு வழக்கின்படி சிவராசன் எனக்கு மிகவும் மூத்த உறுப்பினர் என்றும், இங்கு அவர் எனக்கு கமாண்டராகவும் பாஸ் ஆகவும் இருந்தார் எனக் கூறப்பட்டு உள்ளது. ஆனால், அரசுத் தரப்பு ஆவணம் 81-ல் சிவராசனைப் பற்றி குறிப்பு வருகிற இடங்களில் எல்லாம் ‘அவன்’, ‘அவன்’ எனப் பல இடங்களில் நான் சொன்னதாக எழுதப்பட்டு உள்ளது. உண்மையில், சிவராசன் எனக்கு பாஸாகவோ அல்லது கமாண்டராகவோ இருந்திருந்தால், அவரை நான் எப்படி ‘அவன்’ எனக் குறிப்பிட்டு இருப்பேன்?

# 8

# சதியை மறைத்த சிவராசன்!

**நா**ன் ஓர் ஈழத் தமிழன். எமக்கு எனத் தனித்துவமான பேச்சுத் தமிழ் உண்டு. தமிழ்நாட்டுத் தமிழர்கள் பேச்சுத் தமிழில் பயன்படுத்துகிற பல சொற்களை நாம் பயன்படுத்த மாட்டோம். சொற்களைப் பயன்படுத்துவதில் இரு பிரதேசத் தமிழர்களுக்கும் பல வேறுபாடுகள் உண்டு.

நான் தமிழ்நாட்டுக்கு வந்த ஆறு மாத காலத்துக்குள் இங்கு உள்ள பேச்சுத் தமிழ் எனக்குப் பரிச்சயம் ஆகியிருக்க வாய்ப்பு இல்லை. ஆனாலும், அரசுத் தரப்பு சித்திரிப்புகளில் சுமார் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் இலங்கைத் தமிழர் பயன்படுத்தாத, தமிழ்நாட்டில் வழக்கில் உள்ள சொற்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இதில் இருந்தே ஒப்புதல் வாக்குமூலம் எம் சொல்படி எழுதப்படவில்லை என்பதும், அவர்களின் இஷ்டத்துக்குத் தகுந்தபடி எழுதப்பட்டது என்பதும் அப்பட்டமாகத் தெரியவரும்.

'சொற்களின் பிரயோகத்தைக்கூட அப்படியே பதிவு செய்வது அவசியமா?' என யாரும் கேட்கலாம். நடந்தது சாதாரண நபரின் கொலை விவகாரம் அல்ல. இந்தியாவின் மிகப்பெரிய அரசியல் தலைவர். நாட்டையே உலுக்கிய வழக்கில் குற்றவாளியின் ஒப்புதல் வாக்குமூலம் என்பது எந்த அளவுக்கு முக்கியமானது? ஒவ்வொரு வார்த்தையும் மிக நுணுக்கமாகவும், அச்சு அசலாகவும் பதிவு செய்யப்பட வேண்டும் அல்லவா? 'ஒப்புதல் வாக்குமூலம் ஓர் எதிரியால் சொல்லப்படும்போது எந்தவித மாற்றமும் இல்லாமல்,

அவரது சொந்தச் சொற்களில் உரைநடையில் அப்படியே பதிவு செய்யப்பட வேண்டும்' என்பது தடா சட்டத்தின் 15-வது பிரிவின் விதியாகும். இதுபோல், எத்தனையோ விதிமுறை மீறல்கள்... கட்டுக்கதைகள்... தில்லுமுல்லுத் திணிப்புகள்!



ஒருவேளை மேற்சொன்ன அனைத்தும் ஏற்பதற்கு இல்லை என்று சொன்னால்கூட, அரசுத் தரப்பு காட்டிய குற்றச்சாட்டுகளுக்கு போதிய அளவு சாட்சியச் சான்றுகள் உள்ளனவா? அவை, உரிய முறையில் திறந்த மனதுடன், நடுநிலைமையுடன் பரிசீலிக்கப்பட்டனவா? காட்டிய நிரூபணங்கள் சட்டப்படியும், நியாயப்படியும், உண்மையின்படியும் ஏற்கத்தக்கனவா? இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்லும் வல்லமை நெஞ்சுரம் படைத்த எவருக்கேனும் இருக்கிறதா?

இறுதியாக, என் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். ராஜீவ் கொலை வழக்கு உரிய முறையில் விசாரிக்கப்படவில்லை என்பதற்கும், போகிற போக்கில் யாரை எல்லாமோ குற்றவாளிகளாகச் சித்திரித்தார்கள் என்பதற்கும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைவிட வேறு உதாரணம் வேண்டியது

இல்லை. குற்றச் சதியின் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற ஒரே காரணத்தை வைத்தே, நாங்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறோம்.

விடுதலை செய்யப்பட்டவர்களுக்குச் சொல்லப்பட்ட தீர்ப்பு எங்களுக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தும். ஆனால், குற்றச் சதியின் உறுப்பினர்களாக நாங்கள் நிறுத்தப்பட்டதால், உச்ச நீதிமன்றத்தின் கருணைக் கதவுகள் எங்களுக்காகத் திறக்கவில்லை.

'இந்திரா காந்தி கொலை வழக்கில் ஹேகர் சிங் என்பவருக்கு வெளியார் தலையீடு காரணமாக மரண தண்டனை கொடுத்தேன்; அது எனது மனசாட்சியை இன்றைக்கும் உறுத்துகிறது!' - முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியே மனசாட்சியின் முன்னால் மண்டியிட்டுச் சொன்ன வார்த்தைகள் இவை. அரசியலுக்கும் அதிகாரத்துக்கும் உச்ச நீதிமன்றம் என்கிற உயரிய கோபுரமே தப்ப முடியவில்லை என்கிறபோது, சாதாரண நபர்களாகிய எமக்கு எதிராக அதிகாரங்கள் விளையாடியதில் ஆச்சர்யம் இல்லை.

சரி, என் மீது அப்படி என்னதான் குற்றச்சாட்டு? சிவராசனுக்கும் எனக்குமான தொடர்புதான் புலனாய்வுப் புள்ளிகளின் கண்ணுக்குக் கிடைத்த முதல் பொறி. சிவராசனோடு பேசியதையோ, பழகியதையோ நான் மறுக்கவில்லை. நம்மோடு பழகுபவர்களின் அத்தனை விதமான நகர்வுகளும் நமக்குத் தெரிந்தே நடக்கும் என நினைப்பது எப்படி சாத்தியமாகும்? சிவராசனுக்கும் எனக்கும் எப்படிப்பட்ட தொடர்பு? ராஜீவ் கொலை சம்பந்தமான அத்தனை விடயங்களையும் அவர் என்னிடம் பகிர்ந்துகொண்டாரா? அவர் ராஜீவைக் கொல்லப்போகிறார் என்பது எனக்குத் தெரியுமா... தெரியாதா? இப்படி எத்தனையோ கேள்விகள், 21 வருடங்களாக பதில் இல்லாமல் அலைகின்றன; என்னை அலைக்கழிக்கின்றன.

சிவராசனுக்கும் எனக்குமான பழக்கம் எத்தகையது என்பதை இங்கே மனம் திறந்து உடைக்கப்போகிறேன். சாவின் வாய்க்குள்

தலையைவிட்ட நிலையில் இருப்பவன் எதையும் மறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

அரசுத் தரப்பு தயாரிப்புகளில், 'எதிர்காலத்தில் நல்லெண்ண உறவை வளர்க்க உதவும் என்பதால், ராஜீவ் காந்திக்கு எமது சார்பில் மாலை அணிவிக்க இந்தியப் பெண் ஒருத்தி வேண்டும்' என்று சிவராசன் என்னிடம் மார்ச் மாதம் கேட்டதாகவும், 'முயற்சி செய்கிறேன்' என்று நான் கூறியதாகவும் எழுதப்பட்டு இருக்கிறது. நல்ல உறவை வளர்க்க அவசியம் என்று சொல்லிக் கேட்கும்போது அதற்கு முயற்சி செய்கிறேன் என்று சொல்வதில் என்ன தவறு? நல்ல விடயத்துக்கு என்னால் உதவ முடியாது என்று தடாலடியாக பதில் சொல்வது முறையா?

'ராஜீவைக் கொல்வதற்கு உதவுங்கள்' என சிவராசன் என்னிடம் கேட்டு, அதற்கு நான் உதவி இருந்தால்தானே தவறு? தனது உண்மையான திட்டம் எனக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதில் சிவராசன் உறுதியாக இருந்தார் என்பதற்கு அரசுத் தரப்பு ஆவணங்களே சாட்சி.

கொலைத் திட்டத்தை சிவராசன் என்னிடம் மறைத்து இருந்தாலும், நானே அதைச் சரியாக யூகித்து, 'முயற்சி செய்கிறேன்' என்று சிவராசனுக்கு பதில் சொன்னதாகவும், அதில் இருந்தே அந்தத் திட்டத்தில் எனக்கு உடன்பாடு இருந்ததாக உறுதியாகத் தெரிவதாகவும் அதிகாரிகள் தரப்பு இப்போதும் வாதிடலாம்.

அப்படி எனக்கு (நல்லதோ/கெட்டதோ) உடன்பாடு இருந்து இருந்தால், அந்த சம்பாஷணைக்குப் பிறகு நான் நளினியிடம் இதுபற்றிப் பேசி இருப்பேனே... அந்தத் திட்டத்துக்கு நளினியின் சம்மதத்தைப் பெற்று இருப்பேனே... அதைப் பெருமிதமாக சிவராசனிடம் சொல்லி இருக்கலாமே... இப்படி ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்ததாக அதிகாரிகள் தரப்பால் சொல்ல முடியுமா? என் பெயரில் அதிகாரிகள் இயற்றிய ஒப்புதல் வாக்குமூலத்தில்கூட

இப்படிப்பட்ட சம்பவங்கள் ஜோடிக்கப்படவில்லையே... அவசர கதியில் கதாசிரியர்கள் (அதிகாரிகளைத்தான் சொல்கிறேன்!) மறந்து இருக்கலாம்.

ராஜீவ் கொலைத் திட்டத்தில் தனது உண்மையான செயல்பாடுகள் எனக்குத் தெரியக் கூடாது எனவும், என்னை நம்பவைத்து, தனது வேலைக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சிவராசன் உறுதியாக இருந்தார். என்னுடைய வார்த்தைகளாக இதை நம்ப வேண்டியது இல்லை. என் வழக்கில் அரசுத் தரப்பு அடுக்கி இருக்கும் ஆவணங்களையும், விசாரணைக் குறிப்புகளையும் படித்தாலே, இது தெரியும்.

‘7.5.91 வரை தனக்கும் சுபா, தணு தவிர வேறு யாருக்கும் எமது திட்டம் தெரியாது’ என்று சிவராசன் அனுப்பிய செய்தியை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, ‘மேற்படி மூவரைத் தவிர, அந்தத் தேதி வரை வேறு யாருக்கும் தெரியாது’ என்று பக்கம் 357, 402 ஆகியவற்றில் உறுதிப்படுத்தி உள்ளது. இந்த இடத்தில் சிவராசன் என்னைப் பொய்யாக நம்பவைக்கச் சொன்னவை, செய்தவை உரிய பலனை அளித்துள்ளன என்பதை அப்பட்டமாக உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.

21.05.91 அன்று (என்னை சந்தித்துவிட்டுப் போனபிறகு ) மாலை சுபாவும் தணுவும் தமது கொலைத் திட்டத்தைச் சொன்னதாகவும், ‘கூட வந்தால் சந்தோஷப்படுவோம்’ என அவர்கள் கேட்க, அதற்கு நளினி உடன்பட்டதாகவும் அரசுத் தரப்பில் எழுதப்பட்டு உள்ளது.



படிப்புச் சான்றிதழ் பெறும் முருகன்

மேலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பக்கங்கள் 356, 357 ஆகியவற்றில் 19.05.91 அன்று சிவராசனின் இலக்கு ராஜீவ் காந்திதான் என தான் உணர்ந்ததாகவும், தனக்கு ஒரு பீதி உணர்வு ஏற்பட்டதால், பொதுக் கூட்டத்துக்கு வர நளினி தயங்கியதாகவும் நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், 21.05.91 அன்று மாலைதான் நளினி குற்றச் சதியின் (சுபா, தணு சொல்லி உடன்பட்டபோது) உறுப்பினர் ஆனார் என்றும் நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். அரசுத் தரப்பின் இந்த வாதங்களே நளினி விவகாரத்தில் நான் தலையிடவில்லை என்பதற்கான சாட்சி. நளினியை எந்த இடத்திலும் நான் வற்புறுத்தியது இல்லை. அப்படி இருக்க இந்த வழக்கில் நான் எப்படி குற்றவாளி ஆக்கப்பட்டேன்?

ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிப்பதும், புகைப்படம் எடுப்பதும்தான் அவசியம் என என்னை நம்பவைப்பதற்கு சிவராசன் எவ்வளவு உறுதியாக இருந்தார் என்பதற்கு அரசுத் தரப்பு சாட்சியங்களே சான்றாக உள்ளன. 18.05.91 அன்று மெரினா கடற்கரையில் ராஜீவ் காந்தி மற்றும் ஜெயலலிதா ஆகியோர் பேசிய கூட்டத்துக்கு நான், நளினி, ஹரிபாபு ஆகியோர்

போனதாகவும், அங்கு எடுத்த புகைப்படங்களை சிவராசன் கேட்டுப் பெற்றதாகவும், சிவராசனோடு நான் அங்கே நெருக்கமாகப் பேசி வலம் வந்ததாகவும் அரசுத் தரப்பில் சொல்லப்பட்டு உள்ளன.

7.5.91 அன்று சென்னை நந்தனத்தில் நடந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் பொதுக் கூட்டத்துக்கு, சிவராசன், சுபா, தணுவுடன், நானும், நளினியும், ஹரிபாபுவும் போனதாகவும், அங்கு மேடையில் ஏறி மாலை அணிவிக்கத் தவறியமைக்கும், போட்டோ எடுக்க முடியாமல் போனதற்கும் சிவராசன் என்னையும் நளினியையும் திட்டி எச்சரித்ததாகவும் அரசுத் தரப்பில் சான்றுகள் வைக்கப்பட்டு உள்ளன.

என்னிடமோ, புகைப்படக்காரரர் ஹரிபாபுவிடமோ, சிவராசன் எந்த ரகசியத்தையும் சொல்லவில்லை என்பதற்கு ஒரே சாட்சி ஹரிபாபுவின் மரணம்தான். 'புகைப்படங்கள் முக்கியம்' எனச் சொன்னதால்தான் ஹரிபாபு ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் ராஜீவ் காந்தியை நெருங்கிப் போய் படம் எடுத்தார். தணுவின் உடலில் வெடிகுண்டு பொருத்தப்பட்டு இருப்பது தெரிந்தால், ஹரிபாபு எப்படி அந்த இடத்தில் முன்னேறி இருப்பார்?

தணு, சுபாவுடன் எந்தச் சலனத்தையும் வெளிப்படுத்தாதவராக எப்படி உரையாடி இருப்பார்? என்னை எப்படி நம்பவைத்துத் தனது வேலைகளுக்கு சிவராசன் பயன்படுத்தினாரோ... அதேபோல்தான் ஹரிபாபுவையும் பயன்படுத்தினார். 'யாருக்கும் தெரியக் கூடாது; அதே நேரம் திட்டமும் கச்சிதமாக நிறைவேற வேண்டும்' என்பதில் மட்டுமே சிவராசன் உறுதியாக இருந்தார். குண்டுவெடிப்பு நிகழ இருந்த கடைசி நிமிடம் வரை ஹரிபாபுவுக்கு அப்படி ஒரு சம்பவம் நடக்கப்போவது தெரியாது. இந்த விடயத்தை அரசுத் தரப்புச் சான்றுகளே உறுதியாகச் சொல்கின்றன.

சிவராசனின் வார்த்தைகளுக்காக புகைப்படங்களை நல்லபடி எடுக்க வேண்டும் என நினைத்த ஹரிபாபு சிதறிக்கிடந்த காட்சி

இன்றைக்கும் என்னை உலுக்குகிறது. அவர் எடுத்த புகைப்படங்கள்தான் ராஜீவ் கொலையை யார் செய்தது என்பதற்கான ஒரே சாட்சி. வாழைக் குருத்தாக வாழ்ந்திருக்க வேண்டிய ஹரிபாபு, சடலமாகக் கிடந்த கோலம் இன்றைக்கும் நெஞ்சை அறுக்கிறது.

# 9

# ஏன் மறைத்தார் சிவராசன்?

**ஹ**ரிபாபு நினைவுகளை என்னால் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது! அவரைப்போல் சிவராசன் என்னை அழைத்திருந்தாலும், அன்றைக்கு ஸ்ரீபெரும்புதூருக்கு நானும் போயிருப்பேன். அங்கே ஹரிபாபு உடன் நானும் சிதறித் செத்திருந்தாலும், தினம் தினம் இன்றைக்கு இவ்வளவு உளைச்சலுக்கு ஆளாகிச் சாக வேண்டிய நிலை வந்திருக்காது.

சம்பவ இடத்துக்குப் போயும் உயிர் தப்பியவள் என் மனைவி நளினி. 'ராஜீவ் காந்தியைக் கொலை செய்யப்போகிறார்கள் என்பது நளினிக்குத் தெரியாது. சுபாவும் தணுவும் இலங்கைத் தமிழில் பேசினால் சந்தேகம் வரும் என்பதால்தான், தமிழ்ப் பெண்ணான நளினி அவர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்' என அரசுத் தரப்பு ஆவணங்களிலேயே எழுதப்பட்டு உள்ளது.

சம்பவத்தை நிறைவேற்றும் கடைசிக் கணத்தில்கூட தனது திட்டத்தை சிவராசன் சொல்லவில்லை என்பது இதில் இருந்தே அப்பட்டமாகத் தெரிகிறது. 'நளினிக்குத் தெரியாமல் அது எப்படி நடந்திருக்கும்?' எனக் கேட்பவர்களும் இருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்துக்குப் போனபோது, நளினியின் வயிற்றில் கரு உருவாகி இருந்த நேரம். வெடிச் சத்தத்தைக் கேட்டால்கூட விபரீதமாகும் என்கிற நிலையில்... அப்படி ஒரு சம்பவம் நடக்கும் எனத் தெரிந்திருந்தால் எப்படி நளினி அங்கே போயிருப்பார்? எங்கள் காதலின் அடையாளச் சின்னத்தை நாங்கள் எப்படிப்

பூரிப்போடும் பெருமிதத்தோடும் பார்த்தோம் என்பது எங்களுக்கு மட்டுமே தெரியும். கரு உருவாகி வளர்வது தெரிந்து, வயிற்றின் சிறு மேடு தடவிச் சிலிர்த்த கணங்களை நினைத்துப் பார்க்கிறேன்.

ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டத்துக்கு ராஜீவ் காந்தி வருகிறபோது அலையடித்த மக்கள் கூட்டத்தை வேடிக்கை பார்த்தபடி நின்றவள் நளினி. நல்லெண்ண அடிப்படையில் ராஜீவுக்கு தனு மாலை அணிவிப்பதும், அதைப் புகைப்படம் எடுப்பதும்தான் சிவராசன் நளினியிடம் சொல்லி இருந்த தகவல். ராஜீவ் வந்தபோதோ, மக்கள் ஆரவாரித்தபோதோ இப்படி ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்பது நளினிக்குத் தெரியாது. பதற்றமோ பரபரப்போ இல்லாமல் மிகச் சாதாரணமான முக பாவத்தோடு சிவராசன் இருந்திருக்கிறார். 'ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிப்பது மட்டுமே வேலை' என்பதை நம்பவைக்க பல நாடகங்களையும் அவர் நடத்தி இருக்கிறார். அவருக்கு எதிராக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். நிகழ்ந்த உண்மைகளை இறக்கிவைக்கிற நேரம் இது.

சிவராசனின் செயல்பாட்டில் நல்ல எண்ணம் இருந்தது என்பதை நான் நம்புவதற்கு காரணம் என்ன? அந்த எண்ணத்தில் செயல்பட ஒரு தமிழ்நாட்டுப் பெண்ணின் உதவி எதற்கு? சிவராசன் என்னிடம் உண்மை நோக்கத்தை மறைப்பதில் உறுதியாக இருந்தமைக்கு காரணம் என்ன? எனப் பல கேள்விகள் உங்களிடத்தில் இருந்து எழலாம்.

'சிவராசன், புலிகள் இயக்கத்தில் என்னைவிட மூத்த உறுப்பினர். எனக்கு இங்கு ஒரு கமாண்டராகவும் பாஸாகவும் இருந்தார்!' - இது அரசுத் தரப்பே சொல்லும் விளக்கம். ஒரே இயக்கத்தில் உள்ள என் போன்று கீழ் நிலையில் உள்ளவர்கள், மேல் நிலையில் உள்ள ஒருவரை எப்படி சந்தேகப்பட முடியும்? இயக்கம் கற்றுக்கொடுத்த கட்டுப்பாடும் பக்குவமும் மேல் நிலையில் உள்ளவர்களை சந்தேகப்பட வைக்குமா? மேல் நிலையில் உள்ள

சிவராசனிடம், 'ஏன்... எதற்கு... எப்படி?' என்கிற சந்தேகங்களைக் கேட்பது சாத்தியமா?



'ராஜீவ் காந்தியுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்' என சிவராசன் சொல்கிறபோது, அதில் சந்தேகப்பட ஒன்றுமே இல்லை. காரணம், ராஜீவ் காந்தி இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பியதும், அவர்களின் வெறியாட்டங்கள் எங்கள் மண்ணையும் மக்களையும் துண்டாடியதும், அதனால் அவர் மீது எங்கள் மண் ஆற்ற முடியாத ஆத்திரத்தில் இருந்ததும் எல்லோரும் அறிந்ததுதான். மறுபடியும் ராஜீவ் காந்தியுடன் நல்லெண்ணத்தை ஏற்படுத்த அரசியல் ரீதியான காரணங்கள் இருக்கலாம். அவருக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு நல்லது என நம்பியதால்தானே, சிவராசன் சொன்னதற்கு எல்லாம் நாங்கள் தலையாட்டினோம். 'ராஜீவ் காந்தியைக் கொல்ல வந்த சிவராசன் உன்னை ஏன் சந்திக்க வேண்டும்?' என்கிற கேள்வியும் உங்களிடத்தில் இருந்து எழலாம்.

இப்போது இருக்கும் சூழல் அன்றைக்குத் தமிழகத்தில் இல்லை. உணர்வாளர்களின் எழுச்சியான முன்னெடுப்புகள் விடுதலைப்

புலிகள் மீதான கெடுபிடிகளையும், கண்காணிப்புகளையும் குறையவைத்து இருக்கின்றன. ஆனால், அன்றைக்கு புலி உறுப்பினர்கள் தமிழகத்தில் உலவுவது சாதாரணக் காரியம் இல்லை. மறைமுகமாகவும் ரகசியமாகவும் செய்ய வேண்டிய இக்கட்டுகள் அப்போது இருந்தன.

கோடம்பாக்கத்தில் நடந்த பத்மநாபா கொலைக்குப் பின் இந்தியாவில் இருந்த விடுதலைப் புலிகள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர் என உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயே எழுதப்பட்டு உள்ளது. இலங்கையில் இந்திய ராணுவத்துக்கும் (IPKF), விடுதலைப் புலிகளுக்கும் சண்டை நடந்ததும் அத்தகைய கெடுபிடிகளுக்கு மிக முக்கியக் காரணம்.

கண்காணிப்புகள் அதிகம் இருந்த அப்போதைய காலச் சூழலில், எந்த அரசியல் தலைவருக்கும் பொதுக்கூட்ட மேடையில் மாலை போடுவது சுலபம் அல்ல. அதுவும் இலங்கைத் தமிழர் என்றால் சொல்ல வேண்டியதே இல்லை. எத்தகைய காரணத்தைச் சொன்னாலும், இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகக் காவல் துறை இரக்கம் காட்டாது. இலங்கைத் தமிழர் எனத் தெரிந்தாலே, 'நீ புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன்தானே... யாரைக் கொலை செய்ய இங்கே வந்தாய்... பெட்ரோல் கடத்த வந்தாயா? பால்ரஸ் கொண்டுபோக வந்தாயா?' எனத் துளைத்துவிடுவார்கள். அதனால், சிவராசன், தணு, சுபா மூவராலும் எந்தப் பொதுக்கூட்டத்துக்கும் போய் மாலை அணிவிக்க சாத்தியம் இல்லை.

தமிழ்நாட்டுப் பெண் ஒருவர் உடன் இருந்தால் அதற்கு உதவியாக இருக்கும் என்பதை சிவராசன் சரியாகத் திட்டமிட்டு இருந்தார். அதற்குத்தான் அவர் எங்களைப் பயன்படுத்த நினைத்தார். 'இந்தியாவின் ஆதரவு இன்றி ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வாய்ப்பே இல்லை. அதற்காக இந்தியத் தேசிய அரசியல் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவது எமக்கு அவசியம். அந்த வேலைகளில் நான் தீவிரமாக

இருக்கிறேன்' என சிவராசன் என்னிடம் சொன்னார். அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அந்தக் கருத்தில் நான் மட்டும் எப்படி பிறழ்வு காட்ட முடியும்? இந்திய அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுகிற அளவுக்கு அவர்கள் முன்வந்திருப்பதில் அப்போது எனக்கு ஏகோபித்த மகிழ்ச்சி. அதைத் தாண்டிய சந்தேகங்கள் எனக்கு ஏற்படவில்லை. புலிகள் இயக்கத்தின் கொள்கை குறித்த ஆராய்வுகளையோ, இந்தியத் தேசிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்த பேரறிவோ எனக்கு அப்போது இல்லை. காரணம், அப்போது எனக்கு வயது 20. இளம் பருவத்தில் அடியெடுத்துவைத்த என்னால், அப்போது எந்த அளவுக்கு சிந்தித்திருக்க முடியும் என்பதை மட்டும் மனக்கண்ணில் நிறுத்திப் பாருங்கள்.

'ராஜீவ் காந்தியைக் கொல்லப்போகும் விஷயத்தை சிவராசன், முருகனிடம் ஏன் மறைக்க வேண்டும்? புலிகள் இயக்கத்தைப் பற்றி நன்கு அறிந்த முருகனிடம், ராஜீவ் கொலை குறித்து சிவராசன் ரகசியம் காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே...' எனப் புலனாய்வை மட்டுமே புத்தியாக வைத்திருப்பவர்கள் கேள்வி கேட்கலாம். சந்தேகப்படுவதும் கேள்வி எழுப்புவதும்தான் இங்கே மிகச் சுலபமான வேலை. நம்முடைய கேள்வி அடுத்தவர் மனதை எப்படித் துன்புறுத்தும் என நெஞ்சுக்குள் ஒரு கணம் நினைத்துப் பார்க்கிற பழக்கம் குறைவாகிவிட்டது.

சிவராசனைப் பற்றி இது காலம் வரை நான் வெளிப்படையாகப் பேசவில்லை. இறந்தவர்களை நோக்கிக் கை காட்டுவது ஈனத்தனம் என்பதை இறக்கும் சூழலில் இருக்கிற நான் நன்றாகவே உணர்ந்திருக்கிறேன். 'ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய சிவராசன் ஏன் வந்தார்? அவரை இங்கே அனுப்பியவர்கள் யார்? அவருடைய கண்களில் நான் ஏன் சிக்கினேன்?' இதற்கெல்லாம் என்னிடம் பதில் இல்லை.

ஆனால், சிவராசன் என்னிடம் ராஜீவ் கொலைச் சதியை மறைத்ததற்கு இரண்டு காரணங்களை என்னால் சொல்ல முடியும். ஒன்று, சிவராசன் என்னை நம்பவில்லை; என் மீது அவருக்கு அதிருப்தி இருந்தது. இரண்டாவது, இந்த சதித் திட்டம் மிகவும் பாரதூரமானது. சிறிய அளவில் கசிந்தாலும் குறிக்கோள் நிறைவேறாமல் போகும்.

அதோடு மட்டும் அல்ல... அதன்பிறகு சம்பந்தப்பட்ட ஆளை நெருங்கவே முடியாத அளவுக்குப் போய்விடும். சிவராசனின் பின்னணிகள் தோண்டப்பட்டு, அதன் மூலமாக சம்பந்தப் பட்டவர்களுக்குப் பேராபத்து நிகழவும் வாய்ப்பு இருக்கிறது. அதனால்தான் ராஜீவ் காந்தி கொலைச் சதியை மிகுந்த ரகசியமாகக் காத்தார் சிவராசன்.

இலக்கை மிகச் சரியாக நிறைவேற்றிவிட வேண்டும் என்கிற தீவிரமும் எச்சரிக்கையுமே அவரிடம் இருந்தது. யார் மனம் எல்லாம் நோகும் என்பதை உணரும் நிலையில் அவர் இல்லை. எந்த ஒரு திட்டத்தையும் மிக மிக முக்கியமானவர்களுக்கு இடையிலும், அதை நேரடியாகச் செயல்படுத்துபவர்களுக்கு இடையிலும் மட்டுமே பகிர்ந்துகொள்வது, ஒவ்வோர் இயக்கத்திலும் பின்பற்றக்கூடிய வழக்கம்தான். அநாவசியமாக ஒரு நபரிடம் விஷயம் கசிந்தாலும் அது திட்டத்துக்கான பின்னடைவாக அமைந்துவிடும் என்பதுதான் சதிக் குழுக்களின் பால பாடம்.

இதையொட்டிய கருத்துகளை நீதிபதி தாமஸ் அவர்களே, தீர்ப்பு பக்கங்கள் 84, 85-ல் கூறி இருக்கிறார். அதோடு, ‘எல்.டி.டி.ஈ-யினர் தாம் இலங்கை போலீஸாரால் கைது செய்யப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, இந்தியாவில் தமது அடையாளத்தை மறைத்துச் செயல்படுகின்றனர்!’ என்றும் நீதிபதி தாமஸ் கூறி இருக்கிறார்.

தீர்ப்பில் இதை எல்லாம்விட மிக முக்கியமான பகுதி ஒன்று இருக்கிறது. ‘முருகனுக்கும் நளினிக்கும் இருந்த ரகசிய உறவை அறிந்த சிவராசன், அதுபற்றி மேலிடத்துக்கு புகார் செய்தார்.

அதனால், முருகனை நம்பக் கூடாது என்றும் மேலிடத்துக்கு சிவராசன் செய்தி அனுப்பினார்!' என தீர்ப்பு பக்கம் 320-ல் குறிப்பிடப்பட்டு உள்ளது. சிவராசனுக்கும் எனக்கும் சரியான இணக்கம் இல்லை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவை இல்லை. விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர், பெண்களுடன் உறவு வைத்திருப்பது மிகவும் ஆபத்தானது என்பது அந்தக் காலகட்டத்தில் அனைவரும் அறிந்திருந்த ஒன்று.




படிப்புச் சான்றிதழ் பெறும் நளினி

'பொதுக்கூட்ட இடத்தில் சுபாவோ, தணுவோ பேசக் கூடாது. அவர்களுக்காக நளினிதான் பேசி ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க அனுமதி வாங்க வேண்டும். சுபாவும் தணுவும் இலங்கைத் தமிழர்கள் என்பது அங்கு யாருக்கும் தெரிந்துவிடாமல் இருக்க, நளினி அவர்களை மறைத்தபடி நிற்க வேண்டும்!' என அரசுத் தரப்பு வாதம் சொல்கிறது.

21.05.91 அன்று மாலை சிவராசன் குழுவுடன் ஸ்ரீபெரும்புதூர் செல்ல நளினி உடன்பட்டார் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில்

எழுதப்பட்டு உள்ளது. உண்மையிலேயே நளினி சுய விருப்பத்துடன்தான் சிவராசன் குழுவுடன் ஸ்ரீபெரும்புதூர் சென்றாரா?

# 10

# மகளே, என்னை மன்னித்துவிடு!

**ந** ன்கு தமிழ் பேசத் தெரிந்தவர் என்கிற காரணத்துக்காகவே நளினியை சம்பவ இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக, விசாரணை அதிகாரிகள் சொல்கிறார்கள். சம்பவ இடத்தில் நளினி எப்படி நடந்துகொண்டார் என்பதைப் பார்த்தாலே, இது அவரைச் சிக்கவைப்பதற்காகவே புனையப்பட்ட கதை என்பது புலனாகும்.

அரசுத் தரப்பு ஆவணத்தில் 77-வது பக்கத்தில், ‘சிவராசன் தமிழ்நாட்டுக்காரர் போல் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர்’ என எழுதப்பட்டு உள்ளது. அவரே நன்கு தமிழ் பேசும்போது, மொழிப் பிரச்னைக்காக ஏன் நளினியை அங்கே அழைத்துச் செல்ல வேண்டும்? அரசுத் தரப்பு சான்றுகளின்படி, குற்றமுறு சதியின் உறுப்பினர் ஹரிபாபுவும் (பத்திரிகைப் புகைப்படக்காரர்) அங்கு கூடவே இருந்துள்ளார். அவருக்கும் நன்றாகத் தமிழ் பேசத் தெரியும்.

‘காங்கிரஸ் பிரதேசப் பொறுப்பாளர் லதா கண்ணன் மற்றும் அவர் மகள் கோகிலா ஆகியோர் சம்பவ இடத்தில் நட்பாக இருந்தனர். (இதற்கு ஹரிபாபு எடுத்த புகைப்படமும் ஆதாரமாக உள்ளது). ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க நின்ற கூட்டத்துக்குள் சிவராசன், தணுவை நிறுத்த அவர்கள் முயற்சி செய்தார்கள். அதே நேரம் நளினியும் சுபாவும் கூட்ட இடத்துக்குப் போன பின் அங்கு இருந்த பெண்கள் பகுதியில் போய் அமர்ந்துகொண்டனர். ராஜீவ் காந்தி வந்து இறங்கியவுடன்

நளினியை சுபா அவசரகதியில் பிடித்து இழுத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டு வெகு தூரம் வந்துவிட்டார். அப்போதுதான் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது!' என்று அரசுத் தரப்பு ஆவணங்களிலேயே எழுதப்பட்டு உள்ளது.

சிவராசனுக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே உதவக்கூடிய நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? ராஜீவ் காந்தியை தணு நெருங்க சிவராசனே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். தணு மாலை அணிவிக்க அனுமதி வாங்கியதும், ராஜீவ் காந்தி அருகில் அவர் நெருங்க மறைப்புக் கொடுத்ததும் சிவராசன்தான். ராஜீவ் காந்தி வந்து இறங்கிய உடனேயே நளினி அந்த இடத்தில் இருந்து சுபாவினால் வேகமாகக் கூட்டி வரப்பட்டார். இத்தனை விடயங்களையும் அடித்துச் சொல்லும் அரசுத் தரப்பு, எந்த விதத்தில் ராஜீவ் கொலையில் நளினிக்கும் பங்களிப்பு இருப்பதாகச் சொல்கிறது? நளினிக்கே கொலைச் சதி தெரிந்திருக்கவில்லை என்கிறபோது, எனக்கு எப்படி இதுபற்றித் தெரிந்திருக்கும்? நான் எந்த விதத்தில் அவரைக் கட்டாயப்படுத்தி இருக்க முடியும்?

7.5.91 அன்று சிவராசன், சுபா, தணு ஆகியோருடன் நானும் நளினியும் சென்னையில் நடந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பொதுக் கூட்டத்துக்குப் போனோம் என்றும், அங்கே கொலைச் சதிக்கான ஒத்திகை பார்க்கப்பட்டதாகவும் சித்திரிக்கிறது அதிகாரிகள் தரப்பு. அந்தக் கூட்டத்துக்குப் போனோம் என்பதற்கு எங்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும்தான் அதிகாரிகள் ஆதாரமாக வைக்கிறார்கள்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய அந்தக் கூட்டத்தில் ஒத்திகை நடந்ததாகச் சொல்வது கொஞ்சமாவது பொருந்தக்கூடியதா? சரி, சிவராசன் அதனை ஒத்திகைத் தளமாகவே பாவித்து இருந்தாலும், அதை உறுதியாகச் சொல்ல

அரசுத் தரப்பில் என்ன சாட்சி இருக்கிறது? ஆனால், என்னையும் நளினியையும் திட்டமிட்டு ஏமாற்றவே வி.பி.சிங் கூட்டத்துக்கு சிவராசன் அழைத்துக்கொண்டு போனார் என்பதற்கு நிறையச் சான்றுகள் இருக்கின்றன. கொடூரப் படுகொலையை நிகழ்த்த தான் வரவில்லை என்பதையும், அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுதான் தனது எண்ணம் என்பதையும் சிவராசன் எங்களிடம் ஏற்படுத்த முயன்று இருக்கிறார். அதில், வெற்றியும் பெற்றார். 'வி.பி.சிங் கூட்டத்துக்குப் போனது மாதிரிதான் ராஜீவ் காந்தி கூட்டத்துக்கும் போக இருக்கிறோம்' என்பதையும் சிவராசன் நம்பவைத்தார்.



குழந்தை ஆரித்ராவுடன் முருகன்

சிவராசன் மேலிடத்துக்கு அனுப்பிய வயர்லெஸ் செய்தியைச் சுட்டிக்காட்டும் அரசுத் தரப்பு, 'எதிர்காலத்தில் இயக்கத்துக்கான ஆதரவை வளர்க்க மாலை அணிவித்து புகைப்படம் எடுக்கிறோம் என்றுதான் சொல்லி இருக்கிறோம். எம் மூவரைத் தவிர (சிவராசன், தணு, சுபா) வேறு யாருக்கும் விஷயம் தெரியாது' என

7.5.91 அன்று வி.பி.சிங் பொதுக் கூட்டத்துக்குப் போய் வந்த பிறகு தகவல் அனுப்பியதாக சொல்லப்பட்டு இருக்கிறது. கொலைச் சதி குறித்தோ, அதற்கான ஏற்பாடுகள் குறித்தோ சிவராசன் எங்களிடம் ஏதும் சொல்லவில்லை என்பதற்கு, இந்த வார்த்தைகள் போதாதா?

போலிப் புகைப்படக்காரர் அடையாள அட்டை, ஹரிபாபுவால் எனக்குத் தயார் செய்து தரப்பட்டதாக அரசுத் தரப்பு சொல்கிறது. எனக்கு எதற்காக அந்த அடையாள அட்டை? அதை எங்கு, எப்போது, யார் தயார் செய்து கொடுத்தது? அதில் உள்ள எனது புகைப்படம் எங்கிருந்து எடுக்கப்பட்டது? யாரால் எடுக்கப்பட்டது? அதில் உள்ள கையொப்பம் யாருடையது? எனது கைரேகை ஏதும் இருந்ததா? இப்படி எத்தனை எத்தனைக் கேள்விகள்...

இது குறித்த விசாரணைகளை அதிகாரிகள் ஏன் மேற்கொள்ளவில்லை? சரி, அதெல்லாம் கிடக்கட்டும். ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தில் அந்த அடையாள அட்டையை எந்த விதத்தில் நான் பயன்படுத்தினேன்? இந்தியாவின் மிக உயரிய தலைவர் கொலையான விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒருவனின் போலியான அடையாள அட்டை கிடைத்தால், அது சம்பந்தமான அனைத்து ரிஷிமூலங்களையும் அதிகாரிகள் தோண்டித் துருவி இருக்கமாட்டார்களா?



எங்களைக் குற்றவாளியாக்க வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக, விசாரணை அதிகாரிகள் விரித்த வலைகளில் ஒன்றுதான் அந்த அடையாள அட்டையும். இதை எல்லாம் சொல்வதால், என் மீதான தவறுகளை நான் சரிக்கட்ட நினைப்பதாகவோ, சிவராசன் மீது பழிபோட்டுத் தப்பித்துக்கொள்வதாகவோ தயவுசெய்து யாரும் நினைக்க வேண்டாம்.

இனி தப்பித்து நாங்கள் என்ன செய்யப்போகிறோம்? காலையில் அலுவலகத்துக்கு வந்து மாலை 6 மணிக்குள் இல்லம் திரும்பத் தாமதமானால் உங்கள் மனம் எப்படி எல்லாம் தவித்துவிடுகிறது... ‘அப்பா கிளம்பிட்டேன்டா செல்லம்... 10 நிமிஷத்தில் வந்துடுவேன்’ எனக் குழந்தைகளை சமாதானப் படுத்துவதும், ‘கோவிச்சுக்காதம்மா, இந்தா வந்துட்டேன்’ என மனைவியிடம் உருகுவதும் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் நடத்தும் பாசப் பகிர்வுதானே!

21 வருடங்களாக என் குடும்பத்தைப் பிரிந்துகிடக்கிற நான், எத்தகைய வார்த்தைகளால் அவர்களை சமாதானப்படுத்த முடியும்?

‘அப்பா...’ எனத் தெளிவான உச்சரிப்பில் அழைக்கும் குரலைக் கேட்பதற்கு முன்னரே மகளைப் பிரிந்து தவித்தோமே... இரண்டு வயதில் எங்களிடம் இருந்து ஆரித்ரா பிரித்து அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்வை ஒரு தகப்பனாக தயைகூர்ந்து நினைத்துப் பாருங்கள்.

உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் அவள் இருக்கிறாள் என்பதைத் தவிர்த்து, எங்களுக்கு என்ன ஆறுதல்? ஒருவன் கொலையே செய்திருந்தாலும், அதற்கான தண்டனையைக் காட்டிலும் அதிகமான தண்டனையை நாங்கள் அனுபவித்துவிட்டோம். இளமை தொலைத்து - இல்லம் இழந்து - உலகம் பாராது - உணர்வுகள் மழுங்கிய உயிராக வாழும் வாழ்வெல்லாம் ஒரு வாழ்வா? அடைபட்டு வாழ்தல்தான் அதிகபட்சத் துயரம். உலகத்தின் மிகச் சிறிய கூண்டுக்குள் முடங்கி, எதையுமே பாராது வாழும் வாழ்க்கை எவருக்குமே அமையக் கூடாது.

‘நல்லவர்கள்’ எனச் சொல்லி இனி தப்பிப்பதால் மட்டும் நாங்கள் இழந்த எல்லாமும் எங்களுக்குக் கிடைத்துவிடப்போகிறதா? விசாரணை அதிகாரிகளிடம் எவ்வளவோ விளக்கிச் சொல்லியும், கடிதமாக மனுவாகக் கதறித் தீர்த்தும் நீங்காத எங்களின் சோதனை இப்போது விளக்கமாக எழுதுவதால் நீங்கப்போகிறதா? தண்டனைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக எங்களின் நியாயங்களை நாங்கள் எழுதவில்லை. மரணமே நிகழ்ந்தாலும், என்றைக்காவது எங்களின் விளக்கம் ஏற்கப்படும் என்கிற நிறைவுக்காகவே இதைச் சொல்கிறேன்.

நாங்கள் அணு அணுவாக மரணத்தை அனுபவித்தாயிற்று... ‘இன்று, நாளை’ என ஏங்கி ஏங்கியே எல்லாத் துயரங்களையும் கடந்தாயிற்று... வெளியே வந்தாலும் ‘உயிர் மட்டும் மிச்சம்’ என்கிற எண்ணத்தைத் தவிர, எங்களிடத்தில் வேறு என்ன

உணர்வு ஏற்பட்டுவிடப் போகிறது? ஆனாலும், இந்த உலகத்தின் வெளிப்பரப்பில் நீந்த முடியாதா என்கிற ஏக்கம் அடிமனதில் இப்போதும் கிடக்கிறது. அதற்குக் காரணம், எங்களின் அன்பு மகள் ஆரித்ரா.

'அப்பா உங்களை எப்போ நான் பார்ப்பேன்? உங்களின் தூக்குக்கு நாள் குறிக்கப்பட்டது தெரிந்து நான் எப்படி எல்லாம் அழுதேன் என்பது தெரியுமா அப்பா? பாட்டிம்மா, சித்தப்பா, சித்தி, அத்தை... யாருமே இங்கு சாப்பிடவில்லை; தூங்கவில்லை. நமக்கு ஏன் அப்பா இப்படி ஒரு வாழ்க்கை? இரவு முழுக்கத் தூக்கம் இல்லாததால், உங்களின் கடிதங்களையும் ஓவியங்களையும் மட்டுமே தடவிப் பார்க்கிறேன். கற்பனைக் கதைகளில்கூட இப்படி ஒரு துயர வாழ்க்கை இருக்குமா என்பது தெரியவில்லை அப்பா. அம்மா ஓர் இடத்தில்... அப்பா ஓர் இடத்தில்... மகள் ஓர் இடத்தில் என எதற்காக இந்த வாழ்க்கையை வாழ்கிறோம்?

நீங்கள் ஒரு தந்தையாக எனக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் உறவுகளே எனக்குச் செய்கிறார்கள். ஆனால், அப்பா எனக் கட்டிப்பிடித்து உங்கள் மடியில் புரளும் நாளுக்காக ஏங்கும் என் பாசத்தைக் குடும்பத்தினரால் கொடுக்க முடியுமா? உலகத்திலேயே இப்படி ஒரு பாவப்பட்ட ஜென்மம் என்று என்னைத் தவிர வேறு யாருமே இருக்க மாட்டார்கள் அப்பா.

உங்களைப் பார்க்காத ஒவ்வொரு நாளுமே எனக்கு நரகம்தான். சாப்பாடு, படிப்பு, தூக்கம் என எதையுமே செய்ய முடியாமல் தவிக்கும் என் நிலைமை என்றைக்குத்தான் சரியாகுமோ?'

- இப்படி ஒரு கடிதம் எழுதி இருக்கிறாள் ஆரித்ரா.

வரிக்கு வரி 'அப்பா' என்கிற வார்த்தையை அவள் சேர்த்து எழுதி இருக்கும் பக்குவத்தில் அவளுடைய அபரிமிதமான பாசத்தை உணர்கிறேன். மகளின் கையெழுத்தை மடியில் வைத்துத் தடவிப் பார்க்கிறேன். அதில் உள்ள ஒவ்வோர்

எழுத்திலும் வழிகிற துயரத்துக்கு பதில் சொல்ல முடியாமல் பரிதவிக்கிறேன்.

'அப்பா...' என அழைக்கிற மறு கணத்திலேயே அவள் முன்னால் போய் நிற்க முடியாதா என தடுமாறித் தவிக்கிறது மனது. மகளே... நீ இருக்கும் திசை நோக்கி மண்டியிட்டு அழுகிறேன். உன் ஒவ்வொரு நாள் வளர்ச்சியிலும் உச்சி முகர்ந்து சிலிர்த்திருக்க வேண்டியவன், உன்னைக் காணாது கம்பிகளுக்குள் கதறிக்கிடக்கிறேன்.

'எங்க அப்பாவைக் காப்பாத்துங்க' என மீடியாக்களிடம் நீ கதறியதாகக் கேள்விப்பட்டேன். அம்மாவின் வயிற்றில் இரு மாதக் கருவாக இருந்தபோது குண்டு வெடிப்பு சத்தத்தில் உனக்கு என்ன ஆனதோ எனப் பயந்தேன். அம்மாவின் கருப்பைச் சுவரைக் கெட்டியாகப் பிடித்தபடி, உம்மைக் காத்துக்கொண்ட எம் மகளே... இரு மாதக் கருவிலேயே கற்றுக்கொண்ட அந்தப் பக்குவம்தான் இப்போதும் உன்னைக் காப்பாற்றுகிறதோ என்னவோ... எங்கள் வயிற்றில் பிறந்த பாவத்தாலே இத்தனை சுமைகளுக்கு ஆளாகித் தவிக்கிறாயே... உன்னை நோக்கி அழ மட்டுமே இந்த அப்பனால் முடிகிறது.

# 11

# கைப்பை எங்கே? தள்ளியது யார் கை?

**எ**ங்களின் தூக்குக்கு எதிராக மொத்தத் தமிழகமும் கைகோத்தபோது, காங்கிரஸ்காரர்கள் மட்டும் கோபத்தோடு எதிர்த்தார்கள். 'மறக்க முடியுமா... மன்னிக்க முடியுமா?' என உரக்கக் குரல் எழுப்பினர். ராஜீவ் கொலையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைத் திரட்டி வந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

உண்மையாகவே ராஜீவ் காந்தியின் மீது நேசமும் பாசமும் பூண்டிருக்கும் காங்கிரஸ்காரர்களே... மாண்பையும் மனித நேயத்தையும் மறவாதிருக்கும் நியாயவாதிகளே... உங்களிடம் எனது நீதிக்கான - உண்மைக்கான சில கேள்விகளை சமர்ப்பிக்கிறேன். உங்களை நீதிபதிகளாக மாறும்படியும் நான் வேண்டவில்லை. குறைந்தபட்சம் நீங்கள் உண்மை என்று தவறாக நம்பிக்கொண்டு இருக்கிற... எம்மைப் பற்றிய முடிவிலும் அபிப்ராயத்திலும் சிறு மாறுதல் ஏற்பட்டால்கூட, எமக்கு அதில் நிறைவுதான்.

இதை வாசிக்கும் கணத்தில் மட்டும் என்னை ராஜீவ் காந்திக் கொலையாளி எனப் பார்க்காது, தூக்குக் கயிற்றின் கீழ் நிற்கும் ஒரு துரதிர்ஷ்டக்காரனாக மட்டுமே பாருங்கள். என்றோ ஒரு நாள் உங்களது நெஞ்சத் தராசுகளில் எங்களின் நியாயத் தட்டு

ஜெயிக்கும். உங்களது மனச்சாட்சிக் கதவுகள் எங்களின் ஒப்பாரிகளால் உடைபடும். அன்று எம்மை நிரபராதிகள் என்று நிச்சயம் நீங்கள் நம்புவீர்கள். இதோ என் கேள்விகள்...



தணு–வை தள்ளுகிறதா கை?

1. ‘இனிமேல் ராஜீவ் காந்தி தேர்தல் பிரசாரத்துக்கு வரமாட்டார்’ என 11.5.91 அன்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அறிவிப்பு வெளியிட்டார். பின்னர் அந்த முடிவை மாற்றி ராஜீவை தமிழ்நாட்டுக்கு கூட்டிவரக் காரணமானவர் யார்? அது ஏன் இன்று வரை மறைக்கப்படுகிறது? ராஜீவ் வந்தபோது வாழ்ந்த காங்கிரஸ் தலைவர்கள் யாருமே இப்போது இல்லையா? இல்லை, உண்மையைச் சொல்லும் வல்லமை அவர்களுக்கு இல்லையா?

2. ராஜீவ் தமிழ்நாட்டுக்கு மீண்டும் வருகிறார் என்ற முடிவு மிக ரகசியமாகவே இருந்தது. பத்திரிகைகளில் அதுபற்றி அனுமானச் செய்திகூட வெளிவராத நிலையில், சிவராசனுக்கு மட்டும் ராஜீவ்

வருகை குறித்து எப்படித் தெரிந்தது? முன்கூட்டியே அதை சிவராசனிடம் சொன்ன காங்கிரஸ் கறுப்பு ஆடு யார்?

3. 21.05.91 அன்று ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தியின் பொதுக் கூட்டத்துக்கு போலீஸார் முதலில் அனுமதி அளித்த இடத்தை திடீரென ஒதுக்குப்புறமான இடத்துக்கு ஏன் மாற்றினார்கள்? இடத்தை மாற்றச் சொன்னவர்கள் யார்? ராஜீவ் வழக்கைத் துப்புத் துலக்கிய அறிவார்ந்த பெருமக்கள் ஏன் இடமாற்றம் செய்தவர்களைப் பற்றி விசாரிக்கவில்லை?

4. ராஜீவ் ஒரு சாதாரணத் தலைவர் இல்லை. அவர் ஒரு கூட்டத்துக்கு வருகிறார் என்றால், அவரை நேரில் யார் யார் பார்க்க முடியும், அவருக்கு மரியாதை செலுத்தும் அனுமதி யாருக்கெல்லாம் உண்டு என்பதை முன்கூட்டியே திட்டமிடுவது வழக்கம். ஆனால், ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் அத்தகைய முன்னேற்பாடுகளை ஏன் செய்யவில்லை? ராஜீவுக்கு மாலை அணிவிப்பவர்களின் பட்டியலை ஏன் முறையாகப் பதிவு செய்யவில்லை?

5. அகில இந்தியத் தலைவருக்கு மாலை அணிவிப்பவர்களை பரிசோதனை செய்வது எப்போதுமே வழக்கம். ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் உரிய பரிசோதனை நடத்த ஏன் பெண் போலீஸாரையும், மெட்டல் டிடெக்டரையும் ஏற்பாடு செய்யவில்லை? உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டியவர்கள் யார்? அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

6. ராஜீவ் காந்தியின் மெய்க்காவல் அதிகாரியிடம் அவரது கைத்துப்பாக்கி இல்லாமல் இருந்தது எப்படி? கைத்துப்பாக்கியை வைத்துக் குண்டு வெடிப்பை எப்படித் தடுத்திருக்க முடியும் என நீங்கள் கேள்வி எழுப்பலாம்... தணு இடுப்பில் கட்டிய குண்டுடன் வருவது தெரிந்திருந்தால், நிச்சயம் அவரைச் சுட்டாவது வீழ்த்தி இருக்க முடியும். மெய்க்காவலர்களை நம்பித்தானே தலைவர்கள் வெளியில் செல்கிறார்கள். அப்படி இருக்க, கைத்துப்பாக்கி எடுத்து

வராமல் அந்த அதிகாரி எப்படி பாதுகாப்புக்கு வந்தார்? கைத்துப்பாக்கி எடுத்து வராதபடி அவரைத் தடுத்தவர்கள் யார்?

7. தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து உண்டு என உளவுத் துறை அறிக்கைகள் முன்னதாகவே அனுப்பப்பட்டு உள்ளன. இருந்தும் உரிய பாதுகாப்பு வழங்கப்படாதது எப்படி? உளவுத் துறை தகவல்களையே உதாசீனப்படுத்திய சக்தி எது?

8. ராஜீவைக் கொலை செய்ய வந்த தணு, லதா பிரியகுமாரின் காரில் வந்து இறங்கியதையும், பின்பு அவருடனும் லதா கண்ணனுடனும் தணு பேசிக்கொண்டு இருந்ததையும் சம்பவ இடத்தில் பார்த்ததாக காங்கிரஸ் பெண்மணி குமுதவல்லி பத்திரிகைகளில் பேட்டி அளித்தார். அதோடு, வர்மா கமிஷன், ஜெயின் கமிஷன்களிலும் வாக்குமூலம் அளித்தார். சி.பி.ஐ., எஸ்.ஐ.டி-யினர் அவரைச் சாட்சியாகச் சேர்த்து இருந்தும், நீதிமன்றத்துக்கு சாட்சியாக அழைத்து விசாரிப்பதை தவிர்த்து விட்டனர். இந்த விஷயங்கள் ஏன் கண்டுகொள்ளப் படவில்லை? யாரைக் காப்பாற்றுவதற்காக இந்த முக்கிய விஷயங்கள் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டன?

9. சம்பவ இடத்தில் இறந்த ஹரிபாபு எடுத்த புகைப்படங்களின் இறுதிப் படத்தில், தணு தோளின் முதுகுப் பக்கத்தில் இருந்து யாரோ ஒருவர் கைவைத்து தள்ளிக்கொண்டு இருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது. அவர் யார்? தணுவை ராஜீவ் காந்தியின் அருகில் நெருங்கவைத்த அவரைப் பற்றி ஏன் சி.பி.ஐ-யினர் விசாரிக்கவில்லை? விசாரிக்க முடியாத அளவுக்கு அந்த நபரைக் காப்பாற்றியவர்கள் யார்?

10. சம்பவ இடத்தில் ஒரு போலீஸ்காரருக்கு 750 ரூபாய் பணம் கொடுத்துத்தான் ராஜீவ் காந்தி அருகில் போக முடிந்தது என சிவராசன் சொன்னதாக ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சி.பி.ஐ-யினர் எழுதி வைத்துள்ளனர். அந்த போலீஸ்காரர் யார் என்று சி.பி.ஐ. விசாரிக்காதது ஏன்?

11. ராஜீவ் காந்தியைப் பொதுக்கூட்ட இடத்துக்கு அழைத்து வந்த கார், குண்டு வெடித்த மறுகணமே அந்த இடத்தைவிட்டு மறைந்துபோனதே... ராஜீவ் காந்திக்கு என்ன ஆனது என்றுகூடப் பார்க்காமல் அந்த கார் பறந்தது எப்படி? ஒருவேளை காயப்பட்ட நிலையில் ராஜீவ் கிடந்தால், அவரை உடனே மருத்துவமனைக்கு கொண்டுபோக வாகனம் கிடைக்கக் கூடாது என்று விரும்பியவர்கள் தான் அந்த காரை உடனடியாகக் கிளம்பிப் போக வைத்திருக்க வேண்டும். ராஜீவ் காந்தி மீது பேரன்பு கொண்ட காங்கிரஸ் பெரியவர்கள் இது பற்றி ஏன் கேள்வி கேட்கவில்லை? ராஜீவ் காந்தி இறந்தாலும் பரவாயில்லை... தான் தப்பித்தால் சரி என எந்த ஓட்டுநராவது நினைப்பார்களா? கார் உடனடியாகக் கிளம்பிப் போனது பற்றி ஏன் இந்தப் புலனாய்வு அதிகாரிகள் விசாரிக்கவில்லை?

12. இது மிக முக்கியமான கேள்வி. உள்ளூர் தலைவர் ஒருவர் பொதுக்கூட்டத்துக்கு வந்தாலே, அந்தக் கட்சியின் முக்கியப் பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட அந்தத் தலைவரைச் சுற்றி இருப்பார்கள். ஆனால், ராஜீவ் காந்தி என்கிற மாபெரும் தலைவர் அந்தப் பொதுக்கூட்ட இடத்துக்கு வந்து இறங்கி மேடையை நோக்கி நடந்து போனபோதும், குண்டு வெடித்தபோதும் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ஒருவர்கூட அவருக்கு அருகில் இல்லாமல் போனது எப்படி? மற்றக் கூட்ட இடங்களில் எல்லாம் ராஜீவ் காந்தியைச் சுற்றி முண்டியடிக்கும் உள்ளூர்த் தலைவர்கள் அன்று மட்டும் அங்கு விலகி இருந்ததின் மர்மத்தை ஏன் காங்கிரஸ் அபிமானிகள் உணரவில்லை? இப்போது நான் சொல்வது கற்பனைகூட செய்யக் கூடாதது. ஆனாலும், ராஜீவ் கொலைச் சதியின் பின்னணியை விளக்க எனக்கு வேறு வழி இல்லை.

இன்றைக்குப் பிரபலமாக இருக்கும் அரசியல் தலைவர் யாரையாவது ஒருவரை மனதுக்குள் பாவித்துக்கொள்ளுங்கள். அவர் ஒரு கூட்டத்துக்கு வரும்போது குண்டுவைத்துக் கொல்லப்படுகிறார் என்றால், அவரை அடுத்திருக்கும் இரண்டாம்

கட்டத் தலைவர்கள் எத்தனை பேர் இறப்பார்கள்? நீங்கள் நினைக்கும் தலைவரோடு இரண்டாம் கட்டத் தலைவர்களையும் மனதுக்குள் நினைத்துப் பாருங்கள். ஆனால், ராஜீவ் என்கிற மாபெரும் தலைவனின் படுகொலை, தமிழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்தத் தலைவர்களையும் இம்மி அளவும் பாதிக்காதது எப்படி?

மரணத்தை விடுங்கள்... சம்பவத்தின்போது அங்கே இருந்த காங்கிரஸ் தலைவர்கள் யாருக்கும் சிறு கீறல்கூட ஏற்படாதது எப்படி? சாதாரண மக்களையும் அப்போது ஆச்சர்யப்படுத்திய - அதிரவைத்த கேள்வி இது. ஆனால், நாளாக ஆக இந்தக் கேள்வி எல்லோருடைய மனங்களில் இருந்தும் மறைந்துவிட்டது. ராஜீவ் காந்தி இறந்த துக்கம் தாங்காமல் இன்றைக்கும் கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ்காரர்களின் மனங்களில் மட்டும் இந்தக் கேள்வி ஏன் எழவில்லை?

13. குண்டு வெடிப்பு சம்பவத்தில் காயம் அடையாத லலித் சந்திரசேகர் காயம் அடைந்ததாக மருத்துவமனையில் போய் படுத்துக்கொண்ட மர்மத்தையும், அவரது சிங்கள நண்பர் சம்பவ இடத்தில் இருந்து மாயமான மர்மத்தையும், அதுபற்றி உண்மைகளைக் கண்டறியாது சி.பி.ஐ. தவிர்த்துக்கொண்ட மர்மத்தையும் பற்றி ஏன் ஒரு காங்கிரஸ்காரர்கூட கேள்வி எழுப்பவில்லை?



14. அந்த பாரதூரமான சம்பவம் நடந்தவுடன் அந்த இடத்தில் இருந்த ஹரிபாபுவின் கேமராவில் இருந்த புகைப்படச் சுருள் முதன்முதலில் ஒரு பத்திரிகை வசம் போனதும், அதைப் பெறத் தாம் படாதபாடுபட்டதாகவும் இந்த வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி கூறி இருக்கிறார். அப்படி என்றால், அந்தச் சம்பவ இடம் உடனே பாதுகாக்கப்படவில்லை என்றுதானே அர்த்தம்? இதை வைத்தே உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டதாக ஏன் குற்றம் சொல்ல முடியாது?

15. சம்பவ இடத்தில் ஹரிபாபுவால் எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் புகைப்படத்தில் உள்ள தணுவின் நெற்றியில் பொட்டு கிடையாது. ஆனால், அவர் இறந்துகிடக்கும் படத்தில் அவர் நெற்றியில் பொட்டு இருக்கிறது. ஒன்று, புகைப்படத்தில் இருக்கும் பெண்ணும் இறந்த பெண்ணும், வெவ்வேறு பெண்ணாக இருக்க வேண்டும். அல்லது, அந்த சம்பவம் நடந்த பின் இறந்த பெண்ணின் நெற்றில் யாரோ பொட்டு வைத்திருக்க வேண்டும்.

இந்த உண்மை குறித்து ஏன் விசாரிக்கப்படவில்லை? மிக முக்கியமான ஒரு கொலை வழக்கில் புகைப்பட ஆதாரங்களைக்கூட புலனாய்வு அதிகாரிகள் பொருட்படுத்தாமல் போனது எப்படி?

16. மேற்படி அதே புகைப்படத்தில் இருக்கும் தணுவின் தோளில் கைப்பை உள்ளது. அது சம்பவ இடத்தில் கைப்பற்றப்படவும் இல்லை; அதுபற்றி விசாரணை செய்யப்படவும் இல்லை. கொலையாளியின் கைப்பை எவ்வளவு முக்கியமான ஒன்று... அது எப்படி மாயமானது? அந்தக் கைப்பை பற்றிய விசாரணை உண்மையான குற்றவாளிகளை அடையாளம் காட்டியிருக்கலாம் என்பது சி.பி.ஐ-யினருக்கு எப்படித் தோன்றாமல் போனது? அந்தக் கைப்பையில் இருந்த ஏதாவது ஒரு பொருளாவது உண்மைக் குற்றவாளிகளை நோக்கி விசாரணை அதிகாரிகளைத் திருப்பி இருக்குமே... அப்படி இருக்க, அந்தக் கைப்பை குறித்த கவலை எவருக்குமே இல்லாது போனது ஏன்?

17. இத்தனை கேள்விகளுக்குப் பிறகும், ‘சி.பி.ஐ-யினர் சொன்னால் சரியாகத்தானே இருக்கும்’ என கறைபடியாத காங்கிரஸ்காரர்கள் நம்பலாம். இதே சி.பி.ஐ. அதிகாரிகள்தான் யார் யாரையோ காப்பாற்ற முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மீது பொய் வழக்குப் புனைந்து, பின்பு அம்பலப்பட்டுப்போனார்கள். ஒரு முன்னாள் பிரதமருக்கு எதிராகவே சி.பி.ஐ-யினரால் பொய் வழக்குப் புனைய முடியும் என்றால், கொடூர, காட்டுமிராண்டித்தனமான தடா சட்டத்தின் அதிகாரத்தை வைத்துக்கொண்டு அப்பாவிகள் எங்களை அதிகாரிகள் ஏன் பலிகடாக்கள் ஆக்கி இருக்க முடியாது? எங்களின் நிலையில் இருந்து ஒரு நிமிடம் யோசித்தாலே, உங்களின் மனோபாவம் மாற வாய்ப்பு இருக்கிறதே... அதை ஏனய்யா செய்ய மறுக்கிறீர்கள்? 21 வருடங்களை இழந்து தவிக்கும் எங்களுக்காகச் சில நிமிடங்களை இழக்கக்கூட உங்களின் இதயம் இடம் கொடுக்கவில்லையா?

18. 'நீதிபதிகளும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல; அவர்களும் மனிதர்களே!' - சட்ட ரீதியான, நீதி வழியிலான அற்புதமான இந்தக் கருத்தை பல வழக்குகளில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளே பதிவு செய்து இருக்கிறார்கள். 'மிகவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பொய்ச் சாட்சியங்களின் அடிப்படையில் அப்பாவிகள் தண்டிக்கப்பட வாய்ப்பு துளி அளவும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. போதுமான அடிப்படைகளும், ஆதாரங்களும் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத் தீர்ப்புகளையும், நீதிபதிகளின் முடிவுகளையும் மறுக்கவோ, விமர்சிக்கவோ சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சட்டப்படி உரிமை உண்டு!' என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

இந்த வழக்கில் சி.பி.ஐ-யினரின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள சட்ட விதியை அடிப்படையாகக் கொண்டும்தான் நாங்கள் நிரபராதிகள் என்று வலியுறுத்துகிறோம். எமக்கு இழைக்கப்பட்டு இருக்கிற அநீதிகளையும், சித்ரவதைகளையும் நாங்கள் வெளியே சொல்வதைக் கூட உங்களால் ஏற்க முடியவில்லை. 'தூக்கில் போடு' எனக் குரல் எழுப்புகிறீர்கள்.

உங்கள் தலைவி சோனியா காந்தி அவர்களே எங்களை மன்னிக்கச் சொன்ன பிறகும் நீங்கள் உடன்பட மறுக்கின்றீர்களே... அப்படி என்றால், உங்களுக்கு இருக்கும் நாட்டுப்பற்று சோனியா காந்தி அவர்களுக்கு இல்லை என்றுதானே சொல்ல வருகிறீர்கள்? எங்களை மன்னித்து தண்டனையைக் குறைக்கும்படி பரிந்துரை செய்தது சோனியா காந்தியின் தனிப்பட்ட விஷயம் என்று மேடைக்கு மேடை பேசுகிறீர்கள்.

நாட்டு நலனைவிட, சட்டத்தைவிட சோனியா காந்தி அவர்களுக்குத் தனிப்பட்ட உணர்வும், உணர்ச்சியுமே முக்கியம் என்று நீங்கள் பிரசாரம் செய்வது உங்களுக்கே தகுமா? ராஜீவ் காந்தியை தணு ஒரு முறைதான் கொலை செய்தார். ஆனால்,

அரசியலுக்குப் பரபரப்புத் தேவைப்படும் போதெல்லாம், அந்த உடலை எடுத்துவைத்து ஆராய்ச்சி என்கிற பெயரில் நீங்கள் 20 வருடங்களுக்கும் மேலாகக் கொலை செய்கிறீர்களே... இது என்ன நியாயம்?

19. எமக்கு மரண தண்டனை வழங்கிய தலைமை நீதிபதி, 2.9.2011 அன்று 'Asian Web' என்ற இணையதளத்தில் தனது மனசாட்சியை இறக்கி வைத்தார். அதில், நாங்கள் அப்பாவிகளாக, நிரபராதிகளாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு எனச் சொல்லி இருக்கிறார். எமக்குத் தூக்குத் தண்டனை வழங்கியது தவறு என்கிறார். எம்மை தூக்கில் போட்டுக் கொன்றால், 2,000 வருடங்களுக்கு முன் நிரபராதியான இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றது போன்ற பெரும் தவறை இப்போது செய்தது போலாகிவிடும் என்று மனசு துடிக்கச் சொல்லி இருக்கிறார்.

எமக்குத் தீர்ப்பு எழுதிய நீதிபதியின் மனக் குரலைவிட, எங்கள் தரப்பின் நியாயத்துக்கு வேறென்ன பிடிமானம் வேண்டும்? சி.பி.ஐ. சொல்வதை நம்பும் நீங்கள் - நீதிமன்றக் கருத்துகளை நம்பும் நீங்கள் அந்த நீதிபதியின் ஆன்ம அலறலை மட்டும் ஏன் நம்ப மறுக்கிறீர்கள்?

உங்களின் சந்தேகத்துக்கு ஆதாரம்தான் என்ன? இலங்கைத் தமிழர்கள் இப்படித்தான் செய்வார்கள் என்கிற கருத்தா? இல்லை, குற்றவாளிகளாக நாங்கள் அடையாளப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட வெறுப்பா?

20. கேரளாவைச் சேர்ந்த மெர்வின் என்ற பெண்ணின் கணவர் பாபு எலியாஸ் அரபு நாட்டில் இருந்தார். அவரை நெல்லையைச் சேர்ந்த இரண்டு பேர் கொலை செய்துவிட்டனர். கொலை யாளிகளுக்கு சட்டப்படி மன்னிப்பு வழங்கி இரு உயிர்களையும் காப்பாற்ற மெர்வின், 'கொலைக்குக் கொலைதான் தீர்வா? இரண்டு பேரின் உயிர்களை எடுப்பதால் என் கணவரின் உயிர் திரும்பக் கிடைத்துவிடுமா?' என அவர் எழுப்பிய மனிதநேயக் குரலே

நீதியின் கவனத்தைத் திருப்பி, அந்தக் கொலைகாரர்களைக் காப்பாற்றியது. சோனியா காந்தி அவர்களுக்கு, மெர்வின் ஒரு கடிதம் எழுதினார். 'மிகச் சாதாரண பெண்மணியான நானே இரண்டு உயிர்கள் வாழ்வதற்குக் காரணமாக இருக்கிறேன். மிக உயரிய இடத்தில் இருக்கும் நீங்கள் உங்கள் கணவரின் கொலை வழக்கில் சிக்கி இருப்பவர்களுக்காக நிச்சயம் மனம் இரங்க முடியும்' என அதில் கோரிக்கை வைத்திருந்தார். அந்த நிஜத்தைப் படித்தப் பிறகுதான் சோனியா காந்தி அவர்கள் ஜனாதிபதி அவர்களுக்கு கடிதம் எழுதினார். எமக்கான தண்டனையைக் குறைக்கப் பரிந்துரை செய்தார். அதன்பேரில் நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. எமது தண்டனை 10 வருட காலமாக அப்படியே இருக்கிறது.



ராஜீவ் வந்த கார்

எங்களின் தண்டனைக் குறைப்புக்காக சோனியா காந்தி அவர்கள் கடிதம் கொடுத்தபோது அமைதியாக இருந்த நீங்கள், 10 வருடங்கள் கழித்து எம்மைத் தூக்கில் போட்டு சாகடிக்கும்படி உண்ணாவிரதம் இருக்கிறீர்கள். காரணம் தேசபக்தி என்கிறீர்கள்... ராஜீவ் காந்தியை மட்டும் அல்லாது சம்பவ இடத்தில் இருந்த 17 பேர்களையும் கொலை செய்தோம் என்கிறீர்கள்... அவர்களின்

குடும்பங்களைத் திரட்டிவந்து எமக்கு எதிராகக் கொடிப் பிடிக்க வைக்கிறீர்கள். எங்களைக் காவு வாங்குவதற்காக இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களிடத்தில் பழைய வருத்தங்களைக் கிளறுகிறீர்களே... இதுதான் உங்கள் மனசாட்சியின் மகத்துவமா?



21. உச்ச நீதிமன்றம் முடிவு செய்துவிட்ட ஒரே காரணத்தாலேயே சட்டக் கயிறு எங்களின் கழுத்தை இறுக்க வேண்டும் எனப் போராட்டம் நடத்தும் நீங்கள், இரண்டு விஷயங்களில் உச்ச நீதிமன்ற முடிவுக்கே எதிராக நிற்கிறீர்கள் என்பதை உணருங்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் (TADA Act) வராது என்றும், ராஜீவ் காந்தி கொலை நாட்டுக்கு எதிரான குற்றம் அல்ல என்றும், அது ஒரு பயங்கரவாதச் செயல் அல்ல என்றும், 21.5.91 அன்று ஸ்ரீபெரும்புதூர் சம்பவ இடத்தில் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியைத் தவிர மற்ற எந்த நபருடைய இறப்புக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்றும் உறுதியான வார்த்தைகளால் உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பை நீங்கள் உணர மறுப்பது ஏன்?

நீதிமன்றத் தீர்ப்புகளில்கூட உங்களுக்கு உகந்தது எது என்பதை மட்டுமே எடுத்து வைத்துப் பேசுகிறீர்களே... இதுதான் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நீதிக்குக் கொடுக்கும் மரியாதையா? உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வார்த்தைகளை மறந்துவிட்டு 17 பேர்களின் குடும்பங்களைத் திரட்டிவந்து போராட்டம் நடத்தும் புண்ணிய வான்களே... நீங்கள் செய்வது நீதிமன்ற அவமதிப்பு இல்லையா?

கொலைகாரர்களுக்கு ராஜீவ் காந்தியைக் கொல்ல வேண்டும் என்பது மட்டும்தான் குறிக்கோள். சம்பவத்தை நிகழ்த்தினால் எத்தனை பேர் சாவார்கள் என்பதை அவர்கள் சட்டை செய்திருக்க மாட்டார்கள். ஆனால், ராஜீவ் காந்தியோடு மட்டும் அல்லாது, இன்னும் பலரைச் சாகடிக்கிற சதித் திட்டத்தோடு கொலையாளிகள் வந்ததாக அர்த்தமற்ற அரசியல் கூச்சல் போடுகிறீர்கள். ‘உங்கள் குடும்பத்தினரைக் கொன்றவர்கள் இவர்கள்தான்... அவர்கள் தப்பிக்கலாமா? இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமானால், கொலைகாரர்கள் தூக்கில் போடப்பட வேண்டும்?’ என எம்மைக் கைகாட்டி உணர்ச்சியைக் கிளப்புகிறீர்கள் உங்களின் அரசியலுக்கு உறவுகளை இழந்தவர்களின் பரிதவிப்பை ஊறுகாயாகப் பயன்படுத்துகிறீர்கள்.

உங்களின் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்... உங்களில் எத்தனை பேர் அந்த 17 பேர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லப் போனீர்கள்? அந்தக் குடும்பங்களின் நல்லது கெட்டதுகளில் நீங்கள் எத்தனை பேர் பங்கெடுத்தீர்கள்? ‘எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியைப் பார்க்க வந்ததால்தானே உங்களுக்கு இந்த நிலை. உங்களின் கஷ்டங்களில் இனி நாங்கள் உடன் இருக்கிறோம்?’ என உளமார்ந்த ஆறுதலை உங்களில் எத்தனை பேர் சொன்னீர்கள்? அந்தத் துயர சம்பவத்தில் தன் உறவைப் பறிகொடுத்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர், இன்றைக்கு வாழவே வழி இல்லாமல் அனுதினமும் அல்லாடித் தவிப்பது உங்களுக்குத் தெரியுமா? அவருடைய பெயரை நான் சொல்லப் போவது இல்லை.

17 பேர்களின் குடும்பங்களைத் திரட்டி வந்து தெருவில் நின்றீர்களே... அதேபோல், நான் கோடிட்டுக் காட்டும் அந்தக் குடும்பஸ்தனையும் தேடுங்கள். அப்படி ஒருவர் உங்களின் கண்ணுக்குத் தெரியாவிட்டால், அப்போது கேளுங்கள். காங்கிரஸ் கட்சியின் மிகக் கொடூர அரசியலை அம்பலம் ஆக்கும் விதமாக அந்த கஷ்ட ஜீவனக்காரரை உங்களின் கண் முன்னால் நிறுத்துகிறேன். ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தை, - அதுவும் காங்கிரஸ் குடும்பத்தை வாழவைக்கத் தெரியாத நீங்கள் எங்களைச் சாகடிப்பதற்காக அவர்களின் கைகளைப் பிடித்து அழைத்து வருகிறீர்களே... இது எவ்வளவு பெரிய மோசமான காரியம்?

22. இத்தனைக் கேள்விகள் உங்களுக்குப் போதும். நான் வரிசைப்பட வைத்திருக்கும் அத்தனைக் கேள்விகளையும் அலசி ஆராய்ந்தவர்களாகச் சொல்லுங்கள். நாங்கள் குற்றவாளிகளா? ராஜீவைக் கொலை செய்யும் சதி உண்மையிலேயே நாங்கள் நிகழ்த்தியதுதானா? விசாரணை அதிகாரிகள் போகிறபோக்கில் எங்கள் வயிற்றில் அடித்த நிகழ்வுதானே இது. எங்களைத் தூக்கில் போடுவதால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறது? மரணப் போர்வை போர்த்தியபடிதானே இத்தனை நாட்களும் நாங்கள் வாடிக்கிடக்கிறோம். 21 வருடங்களாக அடைபட்டுக் கிடக்கும் எங்களின் நியாயம் நிச்சயம் உங்களின் நெஞ்சத்து நீதிபதியை கருணைகொள்ள வைத்திருக்கும் என்பது எமது நம்பிக்கை.

இதற்குப் பின்னரும், 'நீங்கள்தான் குற்றவாளிகள். உங்களைத் தூக்கில் போடுவதுதான் ஒரே தீர்வு!' என நீங்கள் உறுதியாக நின்றால், அதை தைரியத்தோடு ஏற்றுக்கொள்ளத் தயார். அதற்கு முன் உங்களிடத்தில் ஒரு கோரிக்கை... மன்னிக்கிற மனோபாவத்துக்கும், உயரிய எண்ணங்களுக்கும் நீங்கள் வளராவிட்டாலும், விஞ்ஞானம் இன்றைக்கு பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. துல்லியமாக உண்மைகளைக் கண்டறியும் விஞ்ஞானப் பரிசோதனைகள் வந்துவிட்டன. ஒருவனை அந்த விசாரணைக்கு

உட்படுத்தினால், பால்ய கால நினைவுகளைக்கூட அவனது மூளைச் சேமிப்பில் இருந்து எடுக்க முடியும் என்கிறார்கள். அத்தகைய சோதனைக்கு நீங்கள் என்னை உட்படுத்த வேண்டும். என்னைக் காப்பாற்றக் கோரி உங்களிடம் கதறினால்தானே தவறு. கடைசியாக என்னை ஒரு முறை விசாரிக்கச் சொல்கிறேன். என் மனக் கிடக்கையில் சொல்ல முடியாமல் கிடக்கும் ஆயிரமாயிரம் எண்ணங்களை அந்த விசாரணை முடிவில் அறிந்துகொள்ளுங்கள். மனிதர்களின் விசாரணையில் எமக்கு சம்மதம் இல்லை.

விஞ்ஞானமும் எங்களின் ரணமான மனதோடு சில மணி நேரங்கள் விளையாடிப் பார்க்கட்டும். மரணத்துக்கு முந்தைய ஒப்புதல் வாக்குமூலமாக அதுவே மாறட்டும். அதைக் கேட்கிற உளத் துணிச்சலும் உண்மையைத் தாங்கிக்கொள்ளும் பக்குவமும் உங்களுக்கு இருந்தால், அந்த இறுதி வார்த்தைகளைக் கேளுங்கள். அதன் பிறகு நீங்கள் என்னைத் தூக்கில் போட்டுக் கொன்றாலும் சரி... வெட்டி வைத்துத் தின்றாலும் சரி!

# 12

# தணுவுக்கு, தைரியம் வந்தது எப்படி?

**எ**ங்களின் உயிர் மீது விதிக்கு அப்படி என்னதான் விருப்பமோ... மீண்டும் மரண மேகம் கவிழ்ந்துவிட்டது. கருணை மனுவைக் கணக்கில் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என மத்திய, மாநில அரசுகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் சொல்கின்றன. எங்களின் உயிர் இந்த அளவுக்கு உதாசீனப்படுத்தப்படும் என நாங்கள் கொஞ்சம்கூட நினைக்கவில்லை. இனி, வழக்கம்போல் தேதி குறிக்கப்படும்; தினசரி நரகங்கள் தீர்மானிக்கப்படும். காப்பாற்றப்படுவோமா... கைவிடப்படுவோமா என உயிரும் உடலும் பட்டி மன்றம் நடத்திப் பதற்றத்தைக் கிளப்பும். ஆனாலும், அடுத்தக் கட்ட விசாரணையில் எங்களின் ஆயுள் காப்பாற்றப்படும் என இந்தக் கணத்திலும் நம்பி நிற்கிறோம்.

கடந்த முறை போலவே எங்களின் உயிர் காக்க மொத்தத் தமிழகமும் கைகோக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. எங்களுக்காகத் தீக்குளித்து மடிந்த எங்கள் தங்கை செங்கொடியை இந்தக் கணத்தில் நினைத்துப் பார்க்கிறேன். 'அவர்கள் தவறு செய்யவில்லை' என்று உறுதியாக நம்பிய அந்தத் தங்கை தன்னை மாய்த்துக்கொண்ட நிலையில், நாங்கள் மட்டும் உயிர் வாழ்ந்து என்ன சாதித்துவிடப் போகிறோம்? தங்கையைப் பின்தொடர்ந்து சாவதில் எங்களுக்கு சந்தோஷம்தான். ஆனால்,

கயிறு எங்களின் கழுத்தை இறுக்கும் முன், என்னுடைய முழுக் குமுறலையும் இறக்கிவைக்க வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் சொல்வதைப்போல் நடந்த படுகொலை மறக்க முடியாதது; மன்னிக்க முடியாததுதான். ஆனால், அந்த சம்பவம் ஏன் நடந்தது என்பதைப் பற்றி மனசாட்சியோடு விவாதிக்க ஏன் யாருமே முன்வருவது இல்லை? ராஜீவ் காந்தி மீது ஆத்மார்த்தமான அன்பு எந்தக் காங்கிரஸ்காரர்களுக்காவது உண்மையாகவே இருந்திருந்தால், அவர் மரணத்தைத் தன் வீட்டு இழவாக எண்ணித் துடித்திருந்தால், நிச்சயம் எங்களை வேலூர் சிறையில் வந்து சந்தித்து இருக்கலாம். 'ஏனடா எங்களின் தலைவனைக் கொன்றீர்கள்?' என நெஞ்சு குலுங்க எங்களின் சட்டையைப் பிடித்து உலுக்கி இருக்கலாம். ஆனால், ஒரு காங்கிரஸ்காரருக்குக்கூட எங்களைச் சந்திக்கும் தைரியம் ஏனய்யா இல்லாமல் போயிற்று?

இந்தியாவின் இளைய சக்தியாக வளர்ந்துவந்த ராஜீவ் காந்திக்கு யார் எதிரிகள்? எதிர்ப்பை உருவாக்கிக்கொள்ளும் அளவுக்கு அவருக்கு என்ன பகை? செஞ்சிவப்பு முகமும், சிறுபிள்ளைச் சிரிப்புமாக வலம் வந்த அவரைச் சுக்குச் சுக்காகச் சிதறடிக்க சதிகாரர்களுக்கு எப்படி மனம் வந்தது?

'இலங்கையில் நடந்த கொடுமைகளுக்கு ராஜீவ் காந்திதான் காரணம் என்பதால், பெண்கள் குழுவின் மத்தியில் அவரைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு பலமாக இருந்தது. இதை மூன்றாவது குற்றவாளி முருகன் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறார்...' -- இவை ராஜீவ் காந்தி வழக்கில் நீதிபதி அவர்கள் எழுதி இருக்கும் வார்த்தைகள்.

என்னுடைய ஒப்புதல் வாக்குமூலம் எப்படி எல்லாம் சித்திரிக்கப்பட்டது என்பதை மறுபடியும் சொல்லி, பரிதாபத்தை நீட்டிக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், எனது

வாக்குமூலமாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கும் மேற்கண்ட வரிகளை, மறுபடியும் படித்துப் பாருங்கள்.

ராஜீவ் காந்தி இலங்கைக்கு அனுப்பிய அமைதிப் படை அங்கே போய் அமைதியைத்தானே நிலைநாட்டி இருக்க வேண்டும்? அசிங்கங்களையும் அக்கிரமங்களையும் நிறைவேற்றுவதற்குப் பெயர்தான் அமைதிப் படையா? எங்கள் மண்ணில் அவர்கள் நிகழ்த்திய கோரங்கள் கொஞ்ச நஞ்சமா? சிங்களப் படைகளின் குரூரங்களுக்கு நாங்கள் கொஞ்சமும் குறைந்தவர்கள் அல்ல என்பதை அன்றைக்குத்தானே அந்தப் படைகள் நிரூபித்துக் காட்டின. திரும்பிய பக்கம் எல்லாம் ஓலம்... ஆண்களைக் கண்டால் அடித்துத் துவைப்பதும், பெண்களைக் கண்டால் துரத்திச் சுவைப்பதும்தான் அவர்களின் ஒரே வேலையாக இருந்தது என்பதற்கு எமது மண்ணில் அநேக ஆதாரங்கள் உண்டு!

மரணம் என்கிற கத்தி, எங்களின் தலைக்கு மேலாகத் தொங்கியபடி இருக்கிறது. இந்தக் கணத்திலும் அங்கே அமைதிப் படை நிகழ்த்திய கொடூர மரணங்களை எண்ணிப் பார்க்கிறேன். இனம், மொழி பாராமல் குழந்தைகளைக்கூட குருவிகளைப்போல் சுட்டு வீழ்த்திய அமைதிப் படையின் குரூரத்தை எத்தனை காலம் கடந்தாலும் சகிக்கவோ, மன்னிக்கவோ முடியுமா?

உங்கள் குழந்தையின் தலையில் ஷூவை வைத்து ஒருவன் நசுக்குகிறான்; திமிற முடியாத கட்டுக்குள் நீங்கள் சிதைக்கப் படுகிறீர்கள். உங்களின் வலியை சட்டை செய்ய முடியாத அளவுக்கு குழந்தையை நசுக்கி எறிகிறது ராணுவப் படை. ஒரு சிகரெட்டைக் காலில் போட்டு அணைப்பதுபோல் ஈழத்து சிசுக்களின் உயிர்கள் அணைக்கப்பட்டன. நஞ்சுக்கொடிகூட குழந்தையை இறுக்கிவிடக் கூடாது எனக் கர்ப்ப காலத்திலேயே மிகக் கவனமாக இருப்பவர்கள் எங்களின் தாய்மார்கள். சிதைக்கப்பட்ட சிசுக்களை அலறலோடு கண்ணுற்ற பெற்ற வயிறுகளில் எத்தகைய வைராக்கியம் கூடு கட்டி இருக்கும்? வாசல்

மண்ணை வாரி இறைத்து அவர்கள் இட்ட சாபம் அமைதிப் படையை அனுப்பியவர்களுக்குக் கேட்டிருக்குமா?

மிகப் பெரிய கொடூரங்களை நிகழ்த்துபவர்களின் பின்னணியில் இருக்கும் ஒரே காரணம் என்ன தெரியுமா? இயலாமைதான்!


எதையும் செய்யத் துணிகிற துணிச்சல், கையறு நிலையில்தான் மனதுக்குள் கருவாகிறது. இந்தியாவின் பலம் பொருந்திய தலைவராக உருவெடுத்த ராஜீவ் காந்தியை சுக்கு நூறாகச் சிதைக்க முடியும் என அன்றைய காலகட்டத்தில் யாரும் கற்பனை செய்து பார்த்திருக்க முடியுமா? அடுக்கடுக்கான பாதுகாப்புகளைக் கடந்து அவரை நெருங்கி இருக்க முடியுமா? எங்கே வருவார்... எங்கே போவார் என்பதை எல்லாம் உளவுத் துறையே கணிக்க முடியாத நிலையில் மிக கவனமாகத் திட்டமிட்டு அவரை எப்படித் தீர்த்துக் கட்டினார்கள்?

அரசு ஆவணம் 81-ல், ‘இலங்கையில் இயக்கத்தினர் மீது இந்திய அமைதிப் படையினர் செய்த கொடுமைகளுக்கு ராஜீவ் காந்திதான் காரணம் என்பதால், அவரைப் பழிவாங்கும் எண்ணம் இயக்கத்தினருக்கு இருந்தது...’ என்று நான் சொல்லியதாக எழுதப்பட்டு உள்ளது. அதில், இயக்கப் பெண்கள் குழுவைப் பற்றி நான் பேசியதாக இல்லை. மேற்கண்டவாறு எழுதியதன் மூலம் 1991 மார்ச் மாதத்திலேயே ராஜீவ் காந்தி கொலை குறித்து எனக்குத் தெரிந்துவிட்டது என்று மறைமுகப் பொருள்படுகிறது. ஏனென்றால், 1991 மார்ச் மாதம், சிவராசன் என்னிடம் மாலை அணிவிக்க ஒரு பெண் வேண்டும் என்று கேட்ட சமயத்தில்தான், எனக்கு மேற்படி தோன்றியதாக எழுதப்பட்டு உள்ளது. ஆனால், இந்த இடத்தில் 7.5.91 தேதிக்கு முன் சிவராசன், சுபா, தணு ஆகியோர் தவிர யாருக்கும் சதி குறித்து தெரிந்து இருக்கவில்லை என்று நீதிபதிகளே சொல்லி இருக்கிறார்கள். இயக்கத்தினர் மீது பழியை ஏற்படுத்த வேண்டும் என்கிற கட்டாயத்தில் என்னுடைய வாக்குமூலம்(?) என ஏதேதோ கற்பனைக் கதைகளைப்

பயன்படுத்திக்கொண்டவர்கள், மிக முக்கிய இடங்களில் வசதியாக அந்த வாக்குமூலத்தை மறந்துவிட்டு கதை பரப்புகிறார்கள்.

பக்கம் 140-ல், '1991 மே மாதத்தின் முதல் வாரத்தில் 'இரண்டு பெண்களைக் கூட்டி வந்து இருக்கிறேன். அவர்களைப் பயன்படுத்தி வேலையை முடிக்க ஓர் இந்தியப் பெண் தேவை' என ஏ-3 முருகனிடம் சிவராசன் சொன்னார்...' என எழுதப்பட்டு உள்ளது.

இப்படி ஒரு கருத்துப் பகிர்தல் எனக்கும் சிவராசனுக்கும், 1991 மே மாதத்தில் அதுவும் குறிப்பாக... சுபா, தணு 2.5.91 அன்று இங்கு வந்த பின்னர் நடந்தாக எந்தவித சாட்சியமும் சான்றும் எங்குமே கிடையாது. அரசு ஆவணம் 81-ல், '1991 மார்ச் மாதத்தில் எதிர்காலத்தில் நல்லுறவை வளர்க்க ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க ஓர் இந்தியப் பெண் தேவை என சிவராசன் கேட்டார்...' என்றும், '1991 ஏப்ரல் முதல் வாரத்தில் சுபா, தணு என்கிற பெண்களைக் கூட்டிவரப் போவதாகவும், அவர்களுடன் சென்று வேலையை முடிக்க (இலங்கைப் பெண்கள் எனத் தெரியாதிருக்க) ஒரு பெண் தேவைப்பட்டது. அதற்கு நளினியைப் பயன்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது...' என்று மட்டுமே எழுதப்பட்டு இருக்கிறது.



இந்த இரண்டு பகுதிகளையும் சேர்த்துப் பார்த்தால், அந்த வேலை 'மாலை அணிவிப்பது' என்று வெளிப்படையாக உள்ளது. அதே நேரம், அதில் உள்ள முக்கிய முரண்பாட்டையும் கவனிக்காமல் இருக்க முடியாது. முதல் பகுதியில், இந்தியப் பெண்ணே நேரடியாக மாலை அணிவிப்பதாக உள்ளது. இரண்டாவது பகுதியில், இரு இலங்கைப் பெண்கள் மாலை அணிவிக்க அவர்களது அடையாளம் தெரிந்துவிடாமல் இருக்க மறைப்புக் கொடுத்து உதவுவது. முதல் பகுதிக்கு நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னதாக உள்ளது. இரண்டாவது பகுதிக்கு நான் உடன்பட்டதாக எங்கும் குறிப்பு இல்லை. 'தீர்மானிக்கப் பட்டது' என்று மட்டுமே எழுதி இருக்கிறார்களே தவிர, யாரால் தீர்மானிக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் இல்லை. மேலும், அரசுத் தரப்பு வாதத்தில் சுபா, தணு என்ற இரு பெயர்களும் 2.5.91 அன்றுதான் முதன்முதலில் சூட்டப்பட்டது என்று இருக்கிறது. ஆனால், 1991 ஏப்ரல் முதல் வாரத்திலேயே சிவராசன் அந்த இரு பெயரால் குறிப்பிட்டு அவர்களைப் பற்றி சொன்னார் என இருக்கிறது. இந்தக் குளறுபடிகளை எல்லாம் நீதிபதிகள் எப்படி ஏற்றுக்கொண்டார்கள்? இடைச்செருகலாக வழக்கு விவரங்களைச்

சொன்னதன் பின்னணிக்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் இருப்பது புலியா? இல்லை புலிகள் மீதான பழியா? என்பதை எல்லாம் சுட்டிக்காட்டும் நிலையில் நான் இல்லை. ஆனால், உற்ற உறவுகள் ரத்தத்தில் மிதந்ததைக் கண்ணுற்ற எவர் வேண்டுமானாலும், வெறியோடு அலைந்திருக்க முடியும். எத்தனை விதமான இழப்புகள்... எவ்வளவு துயரங்கள்... சிங்களப் படைகளின் குரூரமே தேவலாம் என்கிற அளவுக்கு பலாத்காரங்கள்... கொலைகள்... அதில், பாதிக்கப்பட்ட ஈ, எறும்புக்குக்கூட பழிவாங்கும் எண்ணம் உருவாகி இருக்கும். அப்படி இருக்க, ரத்தமும் சதையுமாக மண்ணையும் மரத்தையும் நேசித்த எங்களின் உறவுகள், அமைதிப் படைக்கு எதிராக எப்படித் துடித்து இருப்பார்கள்? அதை ஏவிய ராஜீவ் காந்தி மீது எவ்வளவு ஆத்திரத்தில் இருந்திருப்பார்கள்? பழிவாங்கும் வெறியை மடியில் கட்டியபடி அமைதிப் படையை விரட்டத் தங்களின் உயிரையே தீய்த்திருப்பார்கள்? மடியில் வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு வந்த தணுவுக்கு உயிர் வாழும் ஆசை இருந்திருக்காதா? இந்த மண்ணைவிட்டு மறையப்போகிறோமே என்கிறத் தவிப்பு கடைசிக் கணத்திலும் அவருக்கு ஏற்படாமல்போனது ஏன்? இந்தக் கணத்திலும் ராஜீவ் கொலையை நான் துளியும் நியாயப்படுத்தவில்லை. 'கொலைக்கு கொலையே தீர்வு' என்கிற கோட்பாடு மனித வர்க்கத்துக்குக் கூடாது. ஆனாலும், சிலர் சிந்தும் கண்ணீருக்குக் காரணமே, அவர்கள் பலருக்கும் விதைத்த கண்ணீர்தான் என்பதை ஈழத்துப் பிறப்பெடுத்தவனாக சொல்ல வேண்டியது என் கடமை!

# 13

# போகச் சொன்னாரா பொட்டு அம்மான்?

**எ**ந்த விதத்திலும் ஒருவனை வீழ்த்த முடியாத நிலையில், அவனுடைய அந்தரங்கத்தைத் துழாவிப் பார்ப்பது சிலருடைய அரக்கக் குணம். ராஜீவ் காந்தியைக் கொலை செய்யப் போகிறார்கள் என்பது எந்தக் கணத்திலும் எனக்குத் தெரியாது என்பது விசாரணை அதிகாரிகளுக்கு உறுதியாகத் தெரியும். ஆனால், அந்தச் சதி எனக்குத் தெரிந்தே நடந்ததாகச் சித்திரிக்கத் துடித்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை எனக்கு எதிராக வாங்க நளினியை பலவிதங்களிலும் சித்ரவதை செய்தனர்.

அதற்கு நளினி மசியாதபோது அதிகாரிகள் கையில் எடுத்த ஆயுதம் ‘அந்தரங்கம்.’ எனக்குப் பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாக நளினியிடம் சொன்னார்கள். அவரது நடத்தைப் பற்றி மோசமாக என்னிடம் சொன்னார்கள். மனைவியின் கருவைக்கூட களங்கப்படுத்தினார்கள். ஆனால், எங்கள் இருவருக்குமான இல்லறப் பிணைப்பை அவ்வளவு சீக்கிரத்தில் அதிகாரிகளால் அறுக்க முடியவில்லை.

தீர்ப்பின் பக்கம் 299-ல், ‘எந்தவோர் இடத்திலும் தமக்கு ஏதேனும் அநீதி (Prejudice) இழைக்கப்பட்டதாக நீதிமன்ற விசாரணையின்போது (during the trial period) எதிரிகள் புகார் எதுவும் செய்யவில்லை’ என்று எழுதப்பட்டு உள்ளது. எங்களைக்

கொலை செய்யாதது மட்டும்தான் பாக்கி என்கிற நிலையில், எங்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது எத்தகைய கொடூரம்? வழக்கின் புலன் விசாரணையும் நீதிமன்ற விசாரணையும், முறைகேடுகளையும் சட்டத் துஷ்பிரயோகங்களையும் மூலாதாரமாகக் கொண்டே நடத்தப்பட்டன. ஈவு-இரக்கத்தைக் காலில் போட்டு மிதித்தபடியே அதிகாரிகளும் சட்ட நிபுணர்களும் பணியாற்றினார்கள். ‘சட்டப் போராட்டம் எப்படியும் எங்களைக் காப்பாற்றிவிடும்’ என நாங்கள் இவ்வளவு உறுதியாக நம்புவதற்குக் காரணமே, கடந்து வந்த துயரங்கள்தான்.



எங்களின் ஆயுள் பலம் இல்லாததாக இருந்திருந்தால், விசாரணை அதிகாரிகளின் கொடுமைகளிலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இருக்கும். யுத்தமும் ரத்தமுமாகக் கலங்கடித்த அந்த நாட்களையே கடந்து வந்த உயிர், அவ்வளவு சீக்கிரத்தில் கயிற்றுக்கு இரையாகிவிடாது.

சி.பி.ஐ., எஸ்.ஐ.டி-யினரின் கொடூரங்களுக்குப் பயந்து சுமார் 35 பேர் தற்கொலை செய்துகொண்டனர். கைது செய்யப்பட்ட எதிரி சண்முகம் மண்டியிட்டபடி தூக்கில் தொங்கிய காட்சியை தமிழகம் அவ்வளவு சீக்கிரத்தில் மறக்காது. அதைத் 'திட்டமிட்ட கொலை' என்றே ஊடகங்கள் சுட்டிக்காட்டின. அனைத்து விதமான சட்ட விரோதங்களையும், முறைகேடுகளையும், பாரபட்சங்களையும், அநீதிகளையும் அவ்வப்போது எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் புகார் செய்து இருக்கிறோம். அது தொடர்பாக விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவுகளின் பதிவான ஆவணங்களும் எம்மிடம் உள்ளன.

சுமார் 500-க்கும் மேற்பட்ட புகார் அல்லது எதிர் மனுக்களை நாம் சமர்ப்பித்து இருக்கிறோம். இவ்வளவு இருந்தும் உயர் நீதிமன்ற நீதிபதி, 'எந்தவித அநீதியும் இழைக்கப்படவில்லை' எனக் குறிப்பிடுகிறார் என்றால், அரசுத் தரப்பு எப்படி எல்லாம் பொய்யை நிரூபிக்கப் போராடி இருக்கிறது என்பது புரியும். விசாரணை நீதிமன்றத்தில் நாம் இறுதியாக எழுத்து மூலம் சமர்ப்பித்த வாதங்களுடனும், Cr.p.c.-313 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த வாக்குமூலங்களுடனும் அவசியமான அனைத்து புகார் மனுக்களின் நகல்களையும், அதன் மீதான நீதிமன்ற முடிவுகளின் நகல்களையும் நாங்கள் சமர்ப்பித்து இருக்கிறோம். இவை யாவுமே நீதிபதிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்படவில்லை.

தீர்ப்புப் பக்கம் 356-ல், 'சிவராசன், சுபா, தணு மற்றும் முருகன் ஆகியோரின் கூட்டுப் பழக்கத்தால் நளினி, ராஜீவ் காந்தி மீதும் இந்திய அமைதிப் படை (IPKF) மீதும் அதீத வெறுப்போடு இருந்தார்' என்று எழுதப்பட்டு உள்ளது.

நளினியே இதனை ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லி இருப்பதாகவும் கதைக்குத் துணையாக ஒரு கட்டுக்கதை வேறு. நளினிக்கு, ராஜீவ் காந்தி மீது பலமான வெறுப்பு (extreme

hatred) இருந்ததாக அரசு ஆவணம் 77-ல் எந்த இடத்திலும் இல்லை. மாறாக 'strong feeling', 'strong emotions' என்ற வார்த்தைகள்தான் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றுக்குகூட நான் காரணமாக இருந்தேன் என்று எந்த இடத்திலும் குறிப்பு இல்லை. அரசு ஆவணம் 77, 81 ஆகியவற்றிலோ அல்லது வேறு சாட்சியங்களிலோ, ராஜீவ் காந்தி மீது அதீத வெறுப்பை நளினிக்கு ஏற்படுத்தும் வகையில் நான் அவரிடம் பேசினேன் என்பதற்கு எந்தவிதக் குறிப்பும் கிடையாது. அசல்களுடன் போலிகளைக் கலந்துவிட்டால், போலிகளும் அசல்களாக கருதப்பட்டுவிடும் என்ற கோட்பாட்டை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

சுபா, தணு ஆகியோருடன் சேர்ந்து நான், இந்திய அமைதிப்படை ஈழத்து மண்ணில் நிகழ்த்திய கொடுமைகள் பற்றி நளினியுடன் கலந்து பேசியதாக மட்டும் அரசு ஆவணம் 77-ல் இருக்கிறது. இந்த வார்த்தைகளைத்தான் தந்திரமாகத் திரித்து, கொலைச் சதிக்கு நளினியை நானே உடன்பட வைத்ததாக சித்திரித்தார்கள். ஈழத்தில் நடந்த படுகொலைகளையும் கோரங்களையும் நளினியிடம் சொல்லி அழுததில் என்ன தவறு? ஒப்பாரி வைப்பதில்கூட உங்களுக்கு உடன்பாடு இல்லையா? உங்களுக்கு நெருக்கமானவர்களின் இறப்பையோ, வேதனையையோ பிறரிடம் நீங்கள் பகிர்ந்துகொள்ள மாட்டீர்களா?

ஈழத்து வேதனையைப் பகிர்ந்ததன் மூலமாக ராஜீவ் காந்திக்கு எதிரான மனநிலையை நளினிக்கு ஏற்படுத்தினோம் என்பது எந்த விதத்தில் நியாயம்? இந்திய அமைதிப் படையின் அட்டுழியங்களைத் தமிழ் ஊடகங்கள் கண்ணீர் சொட்டச் சொட்ட எழுதி, கடைக்கோடி உறவுகள் வரை கொண்டுபோய்ச் சேர்த்தனவே... அதை வைத்து ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய ஊடகங்களும் காரணம் எனச் சொல்ல முடியுமா? சோகத்தைச் சொல்வதுகூட இந்த மண்ணில் பாவமா? காதலித்துக் கரம் பிடித்த - கர்ப்பம் சுமக்கும் மனைவியின் மனதில் கொலைச் சதியை என்னால் எப்படி உருவாக்க முடியும்?

தீர்ப்புப் பக்கம் 356-ல், ‘1991 பிப்ரவரி மாதத்தில் இருந்து விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் நளினி கூட்டுச் சேர்ந்தார்’ என எழுதப்பட்டு உள்ளது. அரசு ஆவணம் 77-ல் மேற்சொன்னவாறு எந்தக் குறிப்பும் கிடையாது. மாறாக, நான் (A3) 1991 பிப்ரவரியில் இங்கு ஆங்கிலம் படிக்க வந்திருப்பதாகவும், தம்முடன் தங்கி இருப்பதாகவும் நளினி சொன்னதாக இருக்கிறது. 1991 பிப்ரவரி மாதத்துக்கு முன்போ, பின்போ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அவர்களது வேலைகளை நான் செய்து கொடுத்ததாக எந்தவிதக் குறிப்புகளும் இல்லை.

சிவராசன், சுபா, தணு ஆகியோருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்கும் எந்தவிதச் சாட்சியச் சான்றுகளும் கிடையாது. நான் முதலில் அவர்களது வீட்டில் தங்கி இருப்பவனாகவும், பின்பு நளினியின் காதலனாகவும், பின்பு கணவனாகவும்தான் அறிமுகம் ஆனேன். இதற்குத்தான் இத்தனை ஜோடிப்புகள்.

அரசு ஆவணம் 77-ல், ‘கொலை நடந்த பிறகு சுபா ஏதாவது ஒரு நகரத்தில் அடைக்கலமாக நான் உதவுவதாக இருந்தது, (சிவராசனின் மேலதிக பணிப்புரை வரும் வரை) முழு நிகழ்வின்போதும் சுபாவுக்கும் தணுவுக்கும் நான் மறைப்புக் கொடுக்க வேண்டி இருந்தது!’ என நளினி சொன்னதாக எழுதப்பட்டு இருக்கிறது. மேற்படி நளினி அவ்வாறே செய்தார் என்றும், நடக்காத ஒன்றை நடந்ததாக எழுதி இருக்கிறார்கள்.

சம்பவ இடத்தில் இருந்து சுபாவால் அழைத்து வரப்பட்ட நளினி, சுபாவுடன் ஒளிந்துகொண்டார் என்பதும் உண்மைக்கு எதிரான கற்பனைதான். 9.06.91 அன்று வரை நளினி தனது வீட்டில் குடும்பத்தாருடன் தங்கி இருந்தார். அவருடைய அலுவலகத்துக்கு வேலைக்குப் போய் வந்தார்.

233-வது அரசு சாட்சி, தனது சாட்சியத்தில் நளினிக்கு புலிகளின் தொடர்பு இருப்பதாக எதுவும் சொல்லவில்லை. மேற்படி சாட்சி ஒரே வீட்டில் என்னுடன் நான்கு மாதங்கள் தங்கினார். நளினியைவிட பல மடங்கு கூடுதலாக என்னுடன் இந்த சாட்சி புலிகள் உறுப்பினர் எனத் தெரிந்துகொண்டு தங்கினார்; நன்கு பழகினார். நாம் நீதிமன்றக் காவலில் இருந்தபோது (1991 டிசம்பர் மாதத்தின்போது) நளினி குடும்பத்துக்கு கடிதம் எழுதியபோது, எனக்கும் சேர்த்துத்தான் எழுதினார். 8.6.91 அன்று நளினி வீட்டில் அனைவரும் தற்கொலை செய்ய முடிவெடுத்தபோது, இந்த சாட்சியும் சேர்ந்துதான் தற்கொலை செய்ய முயன்றார். அப்போது நான் தற்செயலாகப் போனதால், அதைத் தடுத்தேன். இதனால் மேற்சொன்னதுபோல் நளினிக்குப் பதிலாக மேற்படி சாட்சியையும் சொல்ல முடியுமா? விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரைக் கணவராக ஏற்றுக்கொண்டு உறவாடுவது அந்த அமைப்பினர் உடனான கூட்டாளித்தனம் (Association) என எப்படிச் சொல்ல முடியும்?

பக்கம் 365-ல், இலங்கையில் புலிகளின் நடவடிக்கை பற்றியும், இந்திய அமைதிப் படை செய்த கொடுமைகள் பற்றியும், அவர்களுக்கு ராஜீவ் காந்தி மீது இருந்த வெறுப்பைப் பற்றியும் நளினியிடம் சொல்லி அவரை முழுமையாக indoctrinate செய்ததாக எழுதப்பட்டு உள்ளது.

நளினியிடம் விடுதலைப் புலிகளின் கொள்கைகள் பற்றியும் இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கைகள் பற்றியும் நான் பேசியதாக அரசு ஆவணம் 81-ல் எழுதப்பட்டு உள்ளது. ஆனால், ராஜீவ் காந்தி மீது எனக்கு வெறுப்பு இருந்ததாக நான் நினைத்துப் பார்த்ததாகக்கூட எந்தவித சான்றும் இல்லை. இந்த இடத்தில் ஓர் இடைச்செருகலைப் பொய்யாகச் செருகி உள்ளனர்.

பக்கம் 366-ல், 'வேலூர் கோட்டையைக் குண்டு வைத்துத் தகர்த்து அங்கே இருந்த போராளிகளை மீட்பது புலிகளின்

நடவடிக்கையில் (இங்கிருந்த) ஒன்றாகும்' என்று A3 முருகன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பதாக எழுதப்பட்டு உள்ளது.

தண்டனை கொடுக்க வேண்டும் என்ற முடிவை நியாயப்படுத்த, வழக்கில் அரசுத் தரப்பு தாக்கல் செய்த சாட்சியச் சான்றுகளுக்கு எதிராகக்கூட கற்பனைக் கதை ஒன்றைச் சொல்லலாம் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

தமிழகத்தில் தங்கி இருந்து புலிகளின் உளவுத் துறைத் தலைவர் பொட்டு அம்மானுக்கு நான் தகவல்கள் சொன்னதாகவும், அவர் பல பணிகளை எனக்கு வழங்கியதாகவும் அந்தக் கட்டுக்கதைகள் நீண்டதுதான் வேதனை. வேலூர் கோட்டையைப் பற்றி அவருக்கு நான் புகைப்படங்கள் எடுத்து அனுப்பி வைத்தேனாம்.

பொட்டு அம்மான், இயக்கத்தில் எத்தகைய இடத்தில் இருந்தவர், என்னைப் போன்ற சாதாரண நபர்களோடு அவர் வயர்லெஸ் போனில் பேசுவாரா என்பதை எல்லாம் ஏன் யாருமே எண்ணிப் பார்க்கவில்லை.

நல்ல வேளை... பொட்டு அம்மானுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்ததே நான்தான் எனச் சொல்லாமல் இருந்தார்களே..!

# 14

# தீர்த்துக்கட்டுவதுதான் தீர்ப்பா?

**ப**ழி பாவங்கள் நம்மைச் சூழும்போது, பிடிமானமற்ற நிராதரவான எண்ணம் நெஞ்சைப் பதற்றத்தில் ஆழ்த்துகிறது. ‘என் நியாயம் ஏன் எவருக்குமே கேட்கவில்லை?’ என உலகே அதிரும் அளவுக்கு அலறத் தோன்றுகிறது. ‘உன் கண்ணீர் ஒருவனையும் சட்டை செய்யாது’ என உள்ளுணர்வு சொன்ன பிறகே, சுரணைக்கு சுதாரிப்பு வருகிறது.

‘என் தரப்பு நியாயத்தை நிரூபிப்பேன். அநியாய பழிச் சுமையின் அவலத்தை நிச்சயம் எனக்கான நீதி அம்பலமாக்கும்’ என எனக்கு நானே நம்பிக்கை சொல்லி எழுந்து நிற்கிறேன். ஆனாலும், ‘நான் செய்தது நியாயம் இல்லை’ என்பதை உலகம் ஒரேயடியாகத் தீர்மானித்துவிட்டது. என்னுடைய ஒற்றைக் குரலால் அந்தத் தீர்மானிப்பை மாற்றுவது சாத்தியம் இல்லாதது. ‘உலகத்தின் எண்ணப்படியே நான் குற்றவாளியாக இருந்துவிட்டுப் போகிறேன். இனி எனக்கு விடிவு இல்லை; நியாயம் இல்லை. சொந்தம், சுற்றம் என எதையுமே பார்க்காமல் மடியப்போகும் ஒருவனின் நிலைதான் எனக்கு!’ என சோர்ந்து சுருண்டுவிட்டேன்.

‘சீக்கிரமே தூக்கில் போடுங்கள்’ என என் அனுதினங்கள் அலறுகின்றன. உலகத்தின் துயரமான தண்டனை புறக்கணிப்புதான். தோல்வியான கணங்களில் மிக நெருக்கமானவர்களின் புறக்கணிப்பு இரட்டிப்பாகிவிடுகிறது. யாருமற்ற நிலை யாருக்குமே வரக்கூடாது. தினமும் எழுந்து

காலை, மதியம், மாலை சாப்பிட்டுவிட்டு கூண்டுக்குள் அடைந்து, தூங்கி எழும் வாழ்க்கையில் எமக்கான நிறைவு என்ன? எதற்காக இந்தக் காத்திருப்பு? நம்பிக்கைக் கீற்று எந்தக் கணத்திலும் ஏற்படப்போவது இல்லை என்பது தெரிந்தும் ஏன் இந்த எதிர்பார்ப்பு?

கயிற்றுக்குள் தலை நுழைக்கும் கடைசிக் கணத்துக்காக எத்தனை காலம்தான் காத்திருப்பது? எம் கனவுகள் பொய்யாகிவிட்ட நிலையில் ஏன் இந்த வாழ்க்கை? ஒதிய மரம் பெருத்து உத்திரத்துக்கு ஆகப் போகிறதா என்ன? எதற்காக இந்தக் காத்திருப்பு? எத்தனை கொடூரம்!

இந்த மனநிலையில்தான் எங்களின் 21 வருடங்கள் கழிந்தன. இளமை தொலைத்து - இல்லறம் இழந்து - உறவுகள் முகம் மறந்து - உற்ற துணைக்கு யாருமற்று இத்தனைக் காலங்களை எப்படிக் கடந்தோம் என்பது மிச்சம் இருக்கும் எங்கள் உயிருக்கே வெளிச்சமான வினா. ஆனால், இன்றைக்கு கம்பிகளுக்குப் பின்னால் நம்பிக்கையோடு நிற்கிறோம். அமாவாசை இருட்டில் ஆகாயமே மின்னல் வடிவில் தீக்குச்சி உரசியதைப்போல், எங்கள் விழிகளுக்கு முன்னால் வெளிச்சம் தெரிகிறது. சிறு சிறு கணங்களில் அந்த வெளிச்சம் மறைந்தாலும், திரி நீளமான வெடி விட்டுவிட்டுப் புகைவதைப்போல் இடைவெளிகள் கடந்தும், அந்த வெளிச்சம் எங்களின் விழிகளைப் பற்றிக்கொள்கிறது.

'செப்டம்பர் - 9' எனத் தூக்குக்கு நாள் குறிக்கப்பட்ட வேளையிலும், எங்கள் மூவருடைய மூச்சும் இயல்பாகத்தான் இருந்தது. தமிழ்நாடே ஆர்த்தெழும் வேளையில், எங்கள் கழுத்தை எந்தக் கயிற்றாலும் இறுக்க முடியாது என்கிற நம்பிக்கை பிறந்திருந்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், மிகப் பரபரப்பான சூழலில் எங்களின் தூக்குத் தண்டனை குறித்த வழக்கு நடந்தது. மாபெரும் வழக்கறிஞர்களான ராம்ஜெத்மலானி, காலின் கான்சால்வேஸ்

உள்ளிட்டவர்கள் நீதிப்பெருமான்கள் திரு.நாகப்பன், திரு.எம்.சத்திய நாராயணன் இருவரின் முன்னால் எங்களுக்காக நின்றார்கள். நீதிமன்றத்துக்கு வெளியே எங்களுக்காக தமிழ் உறவுகள் கணக்கிட முடியாத அளவுக்குக் கூடி இருந்ததை, கம்பிகளுக்குள் இருந்தபடியே மனசால் பார்த்து சிலிர்த்தோம்.

எங்களுக்காகப் பேசிய மூத்த வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி அய்யா அவர்கள், 'ராஜீவ் காந்தி கொலை வழக்கைப் பொறுத்தவரை நீதிமன்ற நடவடிக்கைகள் 1999-ம் வருடத்துடன் முடிந்துவிட்டன. மூன்று பேர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட கருணை மனுவை ஆளுநர் 10 நாட்களில் தள்ளுபடி செய்துவிட்டார். அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஆளுநரின் உத்தரவை ரத்து செய்த உயர் நீதிமன்றம் கருணை மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டது. அதையடுத்து, இரண்டாவது முறை கருணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஐந்து மாதங்களில் அது குறித்த முடிவு எடுக்கப்பட்டது. பின்னர் மூன்று பேரும் 2000-ல் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினோம்.

11 ஆண்டுகள் கழித்து 28.7.11 அன்று குடியரசுத் தலைவர் அந்த மனுக்களை நிராகரித்தார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐந்து முறை குடியரசுத் தலைவருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. இத்தனை ஆண்டுகள் தாமதித்து கருணை மனுவை நிராகரித்து இருப்பது சட்டத்துக்குப் புறம்பானது. அரசியல் சாசனம் 21-ல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு எதிரானது.

இந்த இடைப்பட்ட காலத்தில் மூவரும் எத்தகைய துயரங்களுக்கு ஆளாகி இருப்பார்கள். அனுதினமும் மரண வேதனையில் துடித்து இருப்பார்கள். அதனால், குடியரசுத் தலைவரின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும்!' என உரத்து முழங்க, எட்டு வார இடைக்காலத் தடை விதித்தது நீதிமன்றம்.

தூக்குக்குத் தயார் செய்யப்பட்ட பொம்மைகளைப் போல் (மனதளவில் தைரியம் இருந்தாலும் உடை, சாப்பாடு உள்ளிட்ட நடவடிக்கைகளில்) தனித்தனியே பிரித்து அமரவைக்கப்பட்டு இருந்த எங்களுக்கு இடைக்காலத் தடை குறித்த தகவல் வந்தது.

தம்பி பேரறிவாளன், 'தமிழ் மக்கள் நம்மைக் காப்பாற்றிவிட்டனர் அண்ணா' எனக் கைகளை உயர்த்திச் சொன்னான். சாந்தன் பேரமைதியோடு தொப்புள் கொடி உறவுகளுக்கு நன்றி பகர்ந்தார். எமக்காகப் போராடிய பெருமக்களை, உயிரையே எதிர்ப்புப் பத்திரமாக எழுதிக் கொடுத்த தங்கை செங்கொடியை, சட்டப் போராட்டம் நடத்திய உணர்வாளர்களை, குடும்பத்தில் ஒருவராக எம்மைப் பாவித்து உருகித் தவித்த தகையாளர்களை நேரில் பார்த்து நெஞ்சாரக் கட்டி அணைக்க முடியாத கம்பி வளையத்துக்குள் நாங்கள்.

கம்பிகளுக்குள் அடைபட்ட காரணத்துக்காக அன்றுதான் ஆதங்கப்பட்டோம். சென்னை உயர் நீதிமன்றத்தின் திசையில் எங்களால் கைக்கூப்பிக் கதறி அழ மட்டுமே முடிந்தது. சுருண்டு சோர்ந்திருந்த எங்கள் நரம்புகளில் நம்பிக்கை வெளிச்சத்தைப் பாய்ச்சிய பெருமக்களுக்கு நன்றிக்கடனாக நாங்கள் என்ன செய்யப் போகிறோம்?






சிறையில் முருகன் வரைந்த ஓவியங்கள்

அடுத்தடுத்தும் எமக்கான சட்டப் போராட்டங்கள் நீளுகிற நிலையில், எங்களைச் சந்திக்க வேலூருக்கு வந்தார் எமது உயிர் மீட்ட சக்தியானவர். நிமிடங்களை ஒதுக்கிக் கொடுக்கக்கூட அவகாசம் இல்லாமல், எந்த நேரமும் பரபரப்பைக் கட்டிச் சுமக்கும் அந்தக் கடமையாளருக்கு எங்களைச் சந்திக்க எப்படி நேரம் கிடைத்ததோ? எங்களின் உயிர் மீது அவருக்கு அப்படி என்ன அக்கறையோ? சட்டத்தின் விதிகளைப் போல் அழுந்தப் படிந்த முக ரேகைகள் அவருடைய அறிவு முதிர்ச்சியின் அடையாளங்களாக இருந்தன. கைக்கூப்பிக் கும்பிடத் தோன்றியது.

'உங்களுக்கு எப்படி அய்யா நாங்கள் நன்றி செலுத்தப்போகிறோம்?' - எங்களின் கண்ணீர் வழியே வழிந்தது கேள்வி. மெல்லிய புன்னகையில், 'கவலைப்படாதீர்கள்!' என்றார் ஒற்றைக் கையை உயர்த்தி. இந்தியாவின் சட்ட ஜாம்பவான் அவரிடத்தில் நாங்கள் என்ன கேட்க முடியும்? அவர் கேட்ட விவரங்களை மட்டும் விரிவாகச் சொன்னோம். பேரறிவாளனை இரக்கத்தோடு ஏறிட்டார். சாந்தனின் அமைதியை நியாயத்துக்கான அடையாளமாக எண்ணினார். 'நான் இருக்கேன்' என்கிற

நம்பிக்கையை எங்களுக்கான பெரும் பரிசாகக் கொடுத்துவிட்டுப் போனார்.



சிறைக்கு வெளியே பத்திரிகையாளர்கள் சிலர் சந்தித்தபோது, ‘சட்டம், நீதி, விசாரணை, விளக்கம் என்பதை எல்லாம் தாண்டி ஒருவரின் முகத்தைப் பார்த்தாலே அவர் குற்றவாளியா? இல்லையா? என்பதை என்னால் அடையாளம் கண்டுவிட முடியும். அந்த விதத்தில் முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் நிரபராதிகள் என என்னால் சொல்ல முடியும்!’ எனச் சொல்லி இருக்கிறார். அவர் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நாங்கள் கண்ணீரை மட்டுமே கைமாறாகக் கொடுக்க முடியும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கில் நாங்கள் கைது செய்யப்பட்டோம். கைதான நாள் முதல் கயிற்றின் நிழலில் கதறிக்கிடக்கும் இன்றைய நாள் வரை எமது வாழ்க்கை சோகச் சூறாவளியால் சூறையாடப் படுகிறது. விசாரணை என்ற பெயரில் நாங்கள் அனுபவிக்காத

சித்ரவதைகள் இல்லை. உடலின் ஒவ்வோர் உறுப்பும், விசாரணை நடத்திய அதிகாரிகளிடத்தில் கைக்கூப்பிக் கதறின. பாதுகாப்பு என்ற பெயரில் எமக்கு விதிக்கப்பட்ட கெடுபிடிகள், வாழ்வதற்கான ஆசையை அடியோடு வெறுக்க வைத்துவிட்டன.

20 வருடங்களுக்கும் மேலாக நாங்கள் தனிமைச் சிறையில்... தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டு 12 வருடங்களுக்கும் மேலாக, கயிறு எங்களோடு கபடி ஆடுகிறது. ஏற்கெனவே, பல தடவை தூக்குக்குத் தேதி குறிக்கப்பட்டு கண்ணியில் சிக்கிய காடைக் குருவிகளாக எங்களை நிறுத்திப் பார்த்திருக்கிறது விதி. (சட்ட விதி என நீங்கள் அர்த்தப்படுத்திக் கொண்டாலும் எமக்கு சரிதான். தீர்த்துக்கட்டுவதுதான் தீர்ப்பு என்கிற நிலையில் தலையெழுத்து என்கிற விதியும், சட்டம் என்கிற விதியும் எமக்கு ஒரே விதமாகத்தானே இருக்கின்றன!) பின்னர் கடைசி நேரத்தில் தடை ஆணைப் பெறப்பட்டு, எங்களின் உயிர்கள் தப்பித்தன.

தூக்கா..? தண்டனை நீக்கா? என்கிற பட்டிமன்றத்தில் எங்களின் வாழ்க்கை அடிக்கடி படபடக்கிறது. சாவின் விளிம்புக்குப் போய்த் திரும்புகிற நிலையை எத்தனை முறைதான் எதிர்கொள்வது? பிராய்லர் கோழி அடுத்த நாள் வரை தன் உயிரை பத்திரப்படுத்திக் கொள்வதைப்போல், ஒவ்வொரு முறையும் பதுங்கித் தப்புகிறது எங்களின் உயிர். சட்டம் என்கிற கத்தி எங்களின் கழுத்துகளைக் குறிபார்த்தபடியே கூர் தீட்டப்படுகிறது. நிராகரிக்கப்படுவதைவிட காத்திருப்பில் இருப்பதுதான் நம் வாழ்க்கையை இன்னமும் கடினம் ஆக்குகிறது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு மூன்று வருடங்களைக் காத்திருப்பிலேயே கடந்து இருந்தால்கூட, நிச்சயம் தூக்கை ரத்து செய்து தண்டனைக் குறைப்பு செய்ய முடியும். இதற்கு உதாரணமான பல சம்பவங்கள் இந்தியாவில் நடந்துள்ளன. ஆனால், 12 வருடங்களுக்கும் மேலாகக் காத்திருப்பிலேயே கழிகிற எங்களின் வாழ்க்கைக்கு மட்டும் எவரிடத்திலுமே பதில்

இல்லாதுபோனது ஏன்? எமக்கான போராட்டங்கள், நிரந்தர விடுதலையை நோக்கி எமை அழைத்துச் செல்லும் என எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது நம்புகிறோம்; ஏங்குகிறோம். காரணம், கயிறைவிட 'காத்திருப்பு'தான் எங்களை அதிகம் இறுக்குகிறது!

# 15

# உண்மையான ஒப்புதல் வாக்குமூலம்!

**உ** ங்களோடு பேசுவது இதுவே இறுதியாக இருக்கலாம். பன்னெடுங்காலம் பழகிய நண்பனை சிறு கைகுலுக்கலோடு பிரிவதைப்போல், என் இறுதிப் பகுதியை எழுதுகிறேன்.

மரணத்துக்கு சற்றும் குறைந்தது அல்ல மனதார நினைத்தவர்களைப் பிரிவது. என் மன பாரம் பகிரும் சுமைதாங்கிகளாகவே வாசகர்களைப் பார்க்கிறேன். இப்போது 'கயிறா... உயிரா?' என்கிற பட்டிமன்றத்தில் கடைசி உரை நிகழ்த்துபவனாக உங்களிடத்தில் நிற்கிறேன்.

எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தூக்குத் தண்டனை வழங்கக் கூடாது என்பதை, எமக்கு எதிரான வழக்கின் தீர்ப்பிலேயே, பக்கம் 157, 158-ல் நீதிபதி தாமஸ், நீதிபதி குவாத்ரி ஆகியோர் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

1. எதிரியின் வயது இளம் வயதாக இருந்தால், தூக்குத் தண்டனை தவிர்க்கப்பட வேண்டும்.

2. சமுதாயத்துக்கு தொடர் பயத்தை ஏற்படுத்தக் கூடியது போன்ற எந்த வன்முறை நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டார் என்பதற்கான சாத்தியக்கூறு இருந்தால், தூக்குத் தண்டனையைத் தவிர்க்கலாம்.

3. இன்னொரு நபருடைய ஆதிக்கத்துக்கோ, வலுக் கட்டாயத்துக்கோ ஆட்பட்டு அந்தக் குற்றச் செயலைச் செய்து இருந்தால், தூக்குத் தண்டனை தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்படி மூன்று சாதக காரணங்களும் இந்த வழக்கில் எனக்கும் நளினிக்கும் அப்படியே பொருந்துகின்றன. அந்தக் குற்றம் நடந்தபோது, எனக்கு 20 வயது; நளினிக்கு 25 வயது. நீதிபதி வாத்வா வழங்கிய தீர்ப்பில், 433, 434-ம் பக்கங்களில் 18, 23, 26 வயதுடைய மூவரை இளம் வயதினர் எனக் கருதி (அவர்கள் கையில் துப்பாக்கி வைத்து பலரை சுட்டுக்கொண்டு இருந்தபோதுகூட) விடுதலை செய்யப்பட்ட பழைய உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஒன்றை மேற்கோள் காட்டி உறுதிப்படுத்தி உள்ளார்.

இரண்டாவது கருத்தைப் பொறுத்தவரையில், எம்மால் எதிர்காலத்தில் இந்தச் சமுதாயத்துக்கு வன்முறை அச்சுறுத்தல் நிச்சயமாக ஏற்படாது. ராஜீவ் காந்தி, தனிப்பட்ட விரோத உணர்ச்சி காரணமாகவே கொல்லப்பட்டார். அதில் நாம் ஈடுபடுத்தப்பட்டோம் என்பதுதான் நீதிமன்றம் எடுத்த முடிவு. ஒருவேளை, நாம் குற்றவாளிகள் என்பது சரி என எடுத்துக்கொண்டாலும் நாம் திரும்ப அப்படி ஒரு தவறைச் செய்ய நிச்சயம் வாய்ப்பு இல்லை.

மூன்றாவது காரணத்தைப் பொறுத்த அளவில், நானும் நளினியும் சிவராசனின் கோபத்துக்கும் எரிச்சலுக்கும் பயந்தோம். சிவராசன் எனக்கு மிகவும் மூத்த எல்.டி.டி.ஈ. உறுப்பினர்; எனக்கு ஒரு Commander ஆகவும், Boss ஆகவும் இருந்தார். சிவராசன் எனக்குக் கட்டளைகளை வழங்கினார். இவற்றை எல்லாம் நான் அல்ல, அரசுத் தரப்புச் சான்றுகளே சொல்கின்றன.

மூன்று தருணங்களில் சிவராசனின் நடத்தையைப் பார்த்து நளினி பீதி அடைந்தார். நாம் சிவராசனை மறுத்துப் பேச முடியாத நிலையிலும், மனதில் எழும் சந்தேகத்தை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தவும் முடியாத நிலையில் இருந்தோம். இவ்வளவு இருந்தும் சிவராசனின் அதிகாரத்துக்கும் ஆதிக்கத்துக்கும்

உட்பட்டு, அவருடைய கட்டாயத்துக்குப் பயந்து அவர் சொன்னதை ஏன், எதற்கு என்று கேள்வி கேட்காது செய்தோம் என்று அரசு தரப்புச் சான்றுகள் சொல்கின்றன.

மரண தண்டனையைத் தடுக்க நீதிபதி குறிப்பிட்ட மூன்று காரணிகளும் எமக்குச் சாதகமாக இருந்தும், எமக்கான தண்டனை தளர்த்தப்படவில்லை.

நீதிபதிகள் தாமஸ், குவாத்ரி ஆகியோர் பக்கம் 156-ல் குறிப்பிட்டபடி, ‘A3 முருகன் முதல் வகை நபர்களின் உத்தரவுகளை மட்டும் நிறைவேற்றவில்லை. அத்தோடு, மற்றவர்களையும் அந்த உத்தரவுக்கு ஏற்ப வேலை செய்யவைத்து, குற்றமுறு சதியின் இறுதி இலக்கை அடையச் செயல்பட்டார். அதனால் அவர் குற்றமுறு சதியாளர்களின் தலைமைத்துவ மட்டத்தினுள் (leadership layer among the conspiators) வந்துவிடுகிறார்’ என்று முடிவு செய்தனர். அதன் பேரில் தூக்குத் தண்டனையும் கொடுத்தனர்.



ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக ஏதாவது செய்யும்படி எனக்கு எவரேனும் உத்தரவு போட்டார்கள் என்பதற்கோ, நான் யாருக்காவது உத்தரவு அல்லது பணிப்புரை வழங்கினேன் என்றோ அல்லது குறைந்தபட்சம் கேட்டுக்கொண்டேன் என்றாவது சான்று பகரக்கூடிய ஒரு வாசகத்தையாவது அரசுத் தரப்புச் சான்றுகள் சுட்டிக்காட்ட முடியுமா? நான் மறைமுகமாக அவ்வாறு உத்தரவு போட்டதாகக்கூட எந்தவிதச் சான்றும் கிடையாது.

சிவராசன் என்னை நம்பவே இல்லை. என்னிடம் உண்மையைச் சொல்லக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். உண்மை தெரியக்கூடிய சூழ்நிலைகளில் இருந்து என்னைத் தவிர்க்க வேண்டும் என்பதில் அவர் மிகக் கவனமாக இருந்தார். இதற்கு அரசுத் தரப்பு சான்றுகளே உள்ளன. அப்படி இருந்தும் நீதிபதிகள் எப்படி என்னை அந்தத் தலைமைப் பட்டியலில்

சேர்த்தார்கள் என்பதுதான் புதிராக இருக்கிறது. ஒருவரை சாகடிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால், அவரைத் தலைவராக்கினால் போதும் என நினைத்திருக்கிறார்கள். நான் யாருக்கும் உத்தரவு ஏதும் போடவில்லை என்பதற்கும், மற்றவர் உத்தரவுப்படி செயல்பட்டேன் என்றும் உறுதிப்படுத்தும் முடிவுகளின் வாசகங்களை நீதிபதி வாத்வாவின் தீர்ப்புப் பக்கங்கள் 106, 107, 141, 366, 368, 369 ஆகியவற்றில், யார் வேண்டுமானாலும் படித்துப் பார்க்கலாம்.

அடுத்து எமக்கு தூக்குத் தண்டனை கொடுப்பதற்குக் காட்டிய காரணங்களில் ஒன்று, சம்பவ இடத்தில் ராஜீவ் காந்தி தவிர, காவல் துறையினர் உட்பட மேலும் 17 பேர் இறந்தனர் என்பது. இரண்டு எதிரிகளுக்கு (A1, A3) தனிப்பட்ட ரீதியில் ராஜீவ் காந்தி மீது வெறுப்பு ஏதும் இல்லாவிட்டாலும், அவர் இந்தியப் பிரதமராக இருந்து எடுத்த முடிவுக்காக கொல்லப்பட்டார் என்பது காரணமாக இருக்கலாம்.

இவை இரண்டுமே நீதிபதிகள் முதலில் எடுத்த முடிவுகளுக்கு முரண்பட்டு நிற்கின்றன. தீர்ப்பின் பக்கம் 29-ல், 'ராஜீவ் காந்தியைத் தவிர வேறு ஒருவரைக்கூட கொல்ல குற்றமுறு சதியாளர்கள் விரும்பினார்கள் என்பதற்கு நிச்சயமாக எந்தவித சான்றும் கிடையாது' எனத் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும், அரசு ஆவணம் 77-ன்படி, '21.05.91 அன்று ஜெயகுமார் (A10) வீட்டுக்குப் போன பிறகுதான் (பின் இரவு), சுபா அங்கு குண்டு வெடித்ததைப் பற்றி நளினியிடம் சொல்கிறார். இதுவரை நளினிக்கு குண்டு பற்றி எதுவும் தெரியாது. அங்கு பலர் இறந்ததும் நளினிக்குத் தெரியாது. குண்டுச் சத்தம் கேட்பதற்கு முன்பு வரை தணுவிடம் குண்டு இருந்தது என்பதுகூட நளினிக்குத் தெரியாது. அதேபோல், 25.5.91 அன்றுதான் தணு வைத்திருந்து வெடிக்க வைத்த குண்டு பற்றி சிவராசன் முதன்முதலில் சொன்னதாக அரசு ஆவணம் 81-ல் எழுதப்பட்டு உள்ளது. அரசுத் தரப்புச் சான்றின்படியே எமக்குத் தெரிந்திராத, அதற்கு வாய்ப்பே

இல்லாத இறப்புகளுக்கு எம்மை பொறுப்பாக்கித் தூக்குத் தண்டனை கொடுப்பது என்ன நீதி?

நீதிபதிகள் அளித்த தீர்ப்பின் பக்கம் 30-ல், 'அந்த குண்டு வெடிப்பதால் உயிர் இழப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பது, சிவராசனுக்கும் அவரது உயர் மட்டத் தலைவர்களுக்கும் தெரிந்து இருக்கலாம். ஆனால், அதனைக்கொண்டு அவர்கள் வேறு நபர்களை கொல்லக் கருதி இருந்தார்கள் எனக் கருத முடியாது!' எனச் சொல்லி இருக்கிறார்கள். எமக்கான தீர்ப்பின்போது மட்டும் இந்த வரிகள் மறந்துபோனது ஏனோ?

இதே நீதிபதிகள் 28, 29-ம் பக்கத் தீர்ப்புகளில், 'ராஜீவ் காந்தி மீது இருந்த தனிப்பட்ட விரோதத்தின் காரணமாகவே அவர் கொல்லப்பட்டார். அவர் திரும்பவும் பதவிக்கு வந்தால் தமக்கு ஆபத்து என்று கருதியதும் அதற்குக் காரணம்' என்பதாக முடிவு செய்யப்பட்டு உள்ளது. இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பியதற்கு தனிப்பட்ட ராஜீவ் காந்தி மட்டும் காரணம் அல்ல. அது அந்த அரசின் முடிவு. அந்த அரசின் பிரதம மந்திரியாக ராஜீவ் காந்தி இருந்தார் என்பதால் அவர்தான் அனுப்பினார்; அவர் மட்டும்தான் அதற்குப் பொறுப்பு என்று சொல்வது எப்படி உண்மையாகும்?

அடுத்து, தடா சட்டத்தில் ஒரு வழக்கை விசாரணை செய்கிறபோது, அந்த சட்டத்தின் கீழ் வருகிற குற்றங்களுடன் மற்ற சட்டங்களுக்குக் கீழ் வருகிற குற்றங்களும் செய்ததாகத் தெரிந்தால், அவற்றையும் சேர்த்து சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கலாம். தடா சட்டத்துக்கு கீழ் வருகிற குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்கிற போது, மற்றைய சட்டங்களுக்கு கீழ் வருகிற குற்றங்களுக்கும் சேர்த்து அதே சிறப்பு நீதிமன்றம் தண்டனை கொடுக்கலாம். ஆனால், அந்தக் குற்றங்கள் தடா சட்டத்தின் கீழ் வருகிற குற்றங்களுடன் கண்டிப்பாகத் தொடர்பு இருந்திருக்க வேண்டும். இதைத்தான் 12(1) பிரிவின் 'If the

offence (under the TADA Act) is connected with such other offence (under other laws)' சொற்றொடர் வலியுறுத்துகிறது. ஆனால், இங்கு அந்த சொற்றொடர் கருத்தில் கொள்ளப்படாது விடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் (Trial court) தடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட ஒரே காரணத்தினால், அதே சட்டப் பிரிவு 12-ன் உதவியுடன் பிரிவு 15-ன் கீழ் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களைப் பயன்படுத்தலாம் என்று உச்ச நீதிமன்றம் முடிவெடுத்தது. பிரிவு 12-ல், விசாரிப்பது பற்றியும் தண்டனைக் கொடுப்பது பற்றியும் மட்டும்தான் உள்ளது. அதில் 14-வது பிரிவைப் பற்றியோ, ஒப்புதல் வாக்குமூலங்களை அல்லது சான்றுகளைப் பயன்படுத்துவது பற்றியோ எந்தவிதக் குறிப்பும், வாசகமும் இல்லை.

15-வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் சான்றுகளாக எப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றி இதே 15-வது பிரிவிலும் 21-வது விதியிலும் தெளிவாக வெளிப்படையாக சொல்லப்பட்டு உள்ளது. ஆனால், வற்புறுத்தியும், பொய்யாகத் திரித்தும், கற்பனையாகக் கடைவிரிக்கப்பட்டும் உருவான ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்தே எங்களுக்கான தீர்ப்பு எழுதப்பட்டது எந்த விதத்தில் நியாயம்? தடா சட்டம் நீக்கப்பட்ட பிறகும், அந்தச் சட்டத்தின்படி சுமத்தப்பட்ட குற்றங்களை நீக்காமல் இருப்பது நியாயமா?

எனக்கு இந்திய சட்டங்களைப் பற்றிப் பெரிதாக எதுவும் தெரியாது. ஆனால், இன்றைக்கு ராஜீவ் கொலை வழக்கு குறித்த அத்தனை சட்டக் குறிப்புகளையும் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால்கூட சொல்கிற அளவுக்குத் தெளிவாக இருக்கிறேன். சட்டத்தை எப்படி எல்லாம் வலையாக்கி எங்களை வளைத்து இருக்கிறார்கள் என்பதை விளக்கவே இவ்வளவு விவரமாக உங்களுக்கு சொல்கிறேன்.

வழக்கு விசாரணை நடந்தவிதம், அதில் அடுக்கடுக்காக ஏற்பட்ட குளறுபடிகள், இழைக்கப்பட்ட கொடுமைகள், சித்திரிப்புகள், கொலைச் சதி அறியாத எங்களின் தவிப்புகள் என இத்தனை நாட்களாய் எங்கள் இதயத்தில் சுமையாக வருத்திய அத்தனை விஷயங்களையும் உங்களிடத்தில் இறக்கி வைத்திருக்கிறேன். சுமந்த சித்ரவதைகளில் நான் பகிர்ந்தது 10 சதவிகிதம்தான். ஆனால், அதைப் படித்துவிட்டே, ‘அப்பா, நீங்கள் இப்படி எல்லாம் சிரமப்பட்டீங்களா? ஜூ.வி. படிக்கிறப்ப எல்லாம் அழுதிடுறேன்பா...’ எனக் கடிதம் எழுதி இருக்கிறாள் என் செல்ல மகள் ஆரித்ரா. கடைசி ஆசையாக அவளைப் பார்த்துவிட என் மனம் துடிக்கிறது. மரண மேகம் விலகுவதும் சூழ்வதுமாக விளையாடும் நிலை பொறுக்காமல், இந்தியா வந்து என்னைச் சந்திக்க லண்டனில் இருந்தபடி விசா கேட்டிருக்கிறாள் ஆரித்ரா. ஆனால், விசா கிடைக்கவில்லை. அப்பன் - மகள் பாசம் எல்லாம் அரசாங்கத்துக்குத் தெரியுமா என்ன?

நீதிமன்றத்தில் அடுத்தபடியாக எங்களின் தூக்குக்கு நாள் அறிவிக்கப்படலாம்; ஒருவேளை உண்மைக்கு வெற்றி கிடைத்து எங்களுக்கான தூக்கை ரத்து செய்யும் நாளும் வரலாம். ‘விடிவா மடிவா?’ என்கிற வினாவின் நீட்சியில் எங்களின் வாழ்க்கை இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகிறதோ?

இந்தச் சிறு இடைவெளியில் என் தரப்பு நியாயத்தைச் சொல்ல இடம் அளித்த ஜூ.வி-யை நன்றியோடு நினைக்கிறேன். ஒருவேளை, மரணம் தவிர்க்க முடியாததாக எங்களைச் சூழ்ந்தாலும், உள்ளத்து உண்மைகளை உங்களிடம் இறக்கிவைத்த திருப்தியில் என் உயிர் சற்று நிறைவோடு கயிறேறும்!

## வி.ஐ.பி-க்கள் பார்வையில்...



இத்தனை ஆண்டுகால அனுபவத்தில் ஒருவருடைய முகத்தைப் பார்த்தாலே அவர் குற்றவாளியா இல்லையா என்பதை நான் அறிந்துவிடுவேன். ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி வேலூர் சிறையில் இருக்கும் முருகன், பேரறிவாளன், சாந்தன் மூவரையும் நேரில் பார்த்தபோது, அவர்களின் முகங்களில் குற்றச் சலனமே இல்லை. அவர்கள் தவறாகத் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் தரப்பு நியாயத்தை சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆதாரங்களோடு எடுத்துவைத்தேன். அவர்களுக்குத் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என்பதை வலியுறுத்தி ஒட்டுமொத்த தமிழகமும் கைகோத்து நின்ற காட்சியைப் பார்த்து வியந்துபோனேன். மூவருடைய துயரங்களின் சாட்சியாக முருகன் முன்வைத்திருக்கும் உண்மைகள் இந்த உலகம் அவசியம் அறிய வேண்டியவை. அவர்கள் மூவரும் சீக்கிரமே காப்பாற்றப்பட வேண்டும் எனத் துடிக்கிறவர்களில் நானும் ஒருவன்!

**– வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி**



முருகன், பேரறிவாளன், சாந்தன் மூவருடைய மனவலியை அவர்களோடு அடைபட்டுக் கிடந்து அறிந்தவன் நான். தண்டனையின் கோரப்பிடியில் சிக்கி 21 ஆண்டுகளுக்கும் மேலாக அல்லாடித் தவிக்கும் இந்தத் தம்பிகளின் துயரம் யாருக்குமே நிகழக்கூடாதது. தன் தரப்பு நியாயத்தை இறக்கி வைக்கும் கடைசி வாய்ப்பாக, இந்த நூலில் தன் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருக்கிறார் தம்பி முருகன். கலங்கடிக்கும் உண்மைகளோடு வெளிவரும் இந்த நூல், இதுகாலம் வரை உலவிய பல கட்டுக்கதைகளை தகர்த்து எறியும்.

அப்பாவியின் வலியாக - அடிபட்ட புலியாக தம்பி முருகன் இந்த நூலில் விளக்கி இருக்கும் உண்மைகள் வீரியமானவை. முருகனின் துயரங்கள் தம்பிகள் பேரறிவாளன், சாந்தன் இருவருக்கும் சேர்ந்தே பொருந்தும். தமிழர்களின் தன்னெழுச்சியான முன்னெடுப்பால் மூன்று தம்பிகளும் கயிறு அறுத்து, கம்பி உடைத்து வெளியே வரும் நாளும் விரைவில் வரும்!

**– சீமான்**

KAYIRAE EN KATHAI KAEL

₹ 75

விகடன்
பிரசுரம்

ISBN 978-81-8476-405-5

9788184764055